KALKI

18.10.1970 40காசு

# கல்கி

பளிச்சிடும் மேன்மையைப்
பாருங்கள் கண்ணார
ஹிந்தாலியம்®
உங்கள் இல்லத்திற்கு வழங்கும்
நல்லொளி
வெள்ளியின் பளபளப்பு.
தோற்றத்திலே மதிப்பு.
எளிமையின் வனப்பு...
இதுதான் நீங்கள் பெறுவது,
ஹிந்தாலியம் பாத்திரங்களை
வாங்கும்போது.
ஹிந்தாலியம்
பாத்திரங்களிலே
சமைப்பதும் இன்பம்.
சாப்பிடுவதும்
இன்பம்.
ஹிந்துஸ்தான்
அலுமினியம்
கார்ப்பன் லிட்.
HINDALCO
வெள்ளி
போல்
தோற்றம
ளிக்கிறது
எஃகு
போன்று
நீடித்து
உழைப்பது
ஹிந்தால்கோ விலை
ஸ்டெயின்லஸ் ஸ்டீல்
விலையில் மூன்றில்
ஒரு பாகம்தான்
Sobhagya HAC-370 TM

இனிய பண்டிகை நாட்களில்
இசைக் கலைஞர்கள்
உங்கள் இல்லத்தில் வந்து
நிரந்தர செவி இன்பம்
வழங்கிட வைப்பது
எப்படி ?
நெல்கோ ரேடியோ
அல்லது
டிரான்ஸிஸ்டர்
வாங்குவது மூலம்
ULKA-NE-18 TAM
① தாரா—மீடியம் வேவ் செட் விலை ரூ. 115/-* மட்டுமே
② திருப்தி—2-பாண்ட் டிரான்ஸிஸ்டர் ரூ. 175/-* மட்டுமே
③ ஸிவிக்கான் 321—2-பாண்ட் டீலக்ஸ் டிரான்ஸிஸ்டர் ரூ. 235/-* மட்டுமே
④ தரங்க்—3-பாண்ட் போர்ட்டபிள் செட் ரூ. 298/-* மட்டுமே
⑤ தருண்—3-பாண்ட் ஏஸி மெயின்ஸ் செட் ரூ. 315/-* மட்டுமே
⑥ தாரணு—4-பாண்ட் ஏஸி மெயின்ஸ் செட் ரூ. 415/-* மட்டுமே
நெல்கோ
டாடா எலக்ட்ரிக் கம்பெனியின் ஆர் & டி லாபரெட்டரிகளால் டிஸைன் செய்யப்பட்டது.
நேஷனல் ரேடியோ அண்ட் எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி லிட்.
பம்பாய்-கல்கத்தா-டில்லி-சென்னை



தலைவலி மாத்திரை ஏதாவது தீங்கு விளைவிக்குமோ என்கிற பயத்தால், நாம் எத்தனையோ தடவை தலைவலியைப் பொறுத்துக் கொண்டு அவதிப்படுகிறோம்.

ஆனால் அப்படி அவதிப்பட வேண்டாம். அவேதன் தீமையில்லாமல் தலைவலியைப் போக்குகிறது. ஏனெனில், அவேதனில் அற்புத 'எபெப்' அடங்கியுள்ளது. அவேதன் சாப்பிட்ட பின் எவ்வித துன்பகரமான பின் விளைவுகளும் ஏற்படாது; துரிதமான நிச்சய நிவாரணம் கிடைக்கும்.

எனவே, தீமையற்ற முறையில் தலைவலியைப் போக்குங்கள். ஜலதோஷம், ஃப்ளூ மற்றும் இதர வலிகளையும் நோவுகளையும் கூடத்தான்! 'எபெப்' அடங்கிய அவேதன் சாப்பிடுங்கள்.

**2 டேப்லெட்டுகள்: 15 பைசா.**

அவேதன்— அற்புத 'எபெப்' அடங்கியது. தலைவலி, ஜலதோஷம், மற்றும் ஃப்ளூவிலிருந்து தீமையற்ற நிச்சய நிவாரணம் அளிக்கிறது

SQUIBB SARABHAI CHEMICALS

* இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட்டின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்கைக் குறிக்கிறது. காரசந்த் ப்ரேம்சந்த் பிரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

Shilpi HPMA-37/70 Tam

இங்கு உணர்ச்சிகள்
வண்ணக்கலவையாக
உருப்பெற்றுள்ளன...
SHALIMAR
ARTISTS'
OIL COLOUR
COBALT BLUE
SL
68 வருட அனுபவத்தின் வண்ணப் படைப்புகள்
ஷாலிமார்
பெயிண்ட்ஸ் லி.

# எடைக்கு எடை தங்கம் தான்.

## நீங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு எஸ்ட்ரெலா பேட்டரியும் அப்படியொரு நன்மதிப்பை உங்கள் உள்ளத்தில் ஏற்படுத்தும்.




கொடுக்கும் பணத்திற்குக் கட்டித் தங்கம் போன்ற மதிப்பு—அதைத் தான் உங்களுக்குத் தருகிறது எஸ்ட்ரெலா. காகித, பிளாஸ்டிக், உலோக உறையிட்ட பேட்டரிகளில் எதைத் தேர்ந்தெடுப்பினும் சரி, மேம்பட்ட செயல்திறனுடன் அது அதிக காலம் உழைக்கக் காண்பீர்கள். எல்லாமே சரியாத் தன்மையுடையவை. உங்கள் நம்பிக்கைக்கு உகந்த பத்தரை மாற்றுப் பண்புகள் இவை.

**எஸ்ட்ரெலா**
பேட்டரிகள்

**அதிக சக்தி, அதிக உபயோகம்**

எஸ்ட்ரெலா பேட்டரீஸ் லிமிடெட்

சென்னை
சித்ரா · பிராட்வே
மேகலா · நூர்ஜகான்
மற்றும் தென்னகமெங்கும்
மேகலா பிக்சர்ஸ்
புரட்சி நடிகர்
எம்.ஜி.ஆர்
நடிக்கும்
கலைஞரின்
எங்கள்
தங்கம்
இயக்குநர்
கிருஷ்ணன் பஞ்சு
திரைக்கதை வசனம் · தயாரிப்பு
முரசொலி மாறன் M.A.M.P

அருமையான சுவை என்பது
ஒரு விஷயம் சக்திமிக்க போஷாக்கு
என்பது மற்றொரு முக்கியமான விஷயம்
அந்தப் போஷாக்கைப் பெறுவதற்குத் தான் எவ்வளவு கரகரப்பான சுவை மிக்க வழி! பார்லே க்ளுகோ பிஸ்-கெட்டுகளில் பால், கோதுமை மற்றும் சர்க்கரையின் நல்ல அம்சங்கள் எல்-லாம் நிரம்பியுள்ளன-புரதங்களும்-வைட்ட மின்களும் அபரிமித-மாக அடங்கியுள்ளன.
எனவே
பார்லே க்ளுகோ
பிஸ்கெட்டுகள்
இந்தியாவின் மிக அதிகமாக விற்பனையாகும் பிஸ்கெட்டுகள்
குழந்தைகளுக்கு விசேஷமாக சிறந்து விளங்குவதில் வியப்பில்லை
Gluco
everest/900a/PP tm

# கல்கி பொருளடக்கம்

சாதாரண, ஐப்பசி 1 ❋ 1970 அக்டோபர் 18



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


| சந்தா விவரம் | ஒரு வருடம் | ஆறு மாதம் |
|---|---|---|
| இந்தியா | ரூ. 20-00 | ரூ. 10-00 |
| இலங்கை(இலங்கை நாணயம்) | ரூ. 21-00 | ரூ. 10-50 |
| இதர நாடுகள் | ரூ. 40-00 | ரூ. 20-00 |


## இதோ ஒரு நல்ல சேதி

## 1970 கல்கி தீபாவளி மலர்

## அன்பளிப்பு

~~15.10.70~~

## 25.10.70

"இரண்டு ஆண்டுகளுக்குக் கல்கிக்குச் சந்தா செலுத்துவதால் 104 கல்கி இதழ்களைப் பெறுவதுடன் இந்த ஆண்டு தீபாவளி மலரையும் அன்பளிப்பாகப் பெறும் ஆவலைக் கிளறிவிட்டு, நெருக்கடியாகக் கடைசித் தேதி வைத்திருக்கிறீர்களே! கொஞ்சம் தள்ளிப்போடக் கூடாதா?" என்று கேட்ட ஏராளமான நேயர்களுக்கு ஒரு நற்செய்தி. கல்கி தீபாவளி மலர் அன்பளிப்புத் திட்டத்தில் பங்குபெறக் கடைசித் தேதியை 25-10-70 வரை நீடித்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்கி வார இதழுக்கு இரண்டாண்டு சந்தாவாக ரூ. 40/-ஐ மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை - 31 என்ற விலாசத்துக்கு மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். இலங்கை நேயர்கள் (இலங்கை நாணயப்படி) ரூ. 42/-ம், மலேசியா, சிங்கப்பூர் மற்ற வெளிநாட்டு நேயர்கள் ரூ. 80/-ம் அனுப்ப வேண்டும்.


படுகுழிக்கு வழி காட்டுகிறார்
முதன் மந்திரிகள்
இந்திரா
நில
உச்ச வரம்பைக்
குறைப்பது


இந்தப் பாலை நிச்சயம் பாதுகாப்பேன்.
இது நிச்சயம்!
மத்திய சர்க்கார்
அரசியல் சாஸனம்
N. YOGESHWAR


"பரிசு பெறும் அதிர்ஷ்ட லாட்டரிச் சீட்டுக்குத் தமிழக அரசு தீபாவளியை முன்னிட்டு ஐந்து லட்ச ரூபாய் தரப் போகிறதாம்!"
"அப்படியானால் லட்சக்கணக்கான மற்ற மக்களுக்கு, தீபாவளி துக்கநாளாகப் போகிறது!"
Samy

# ராஜாஜியின் கருத்துக்கள்

உத்தரப் பிரதேச ஸம்யுக்த விதாயக தளம் ஏகமனதாகத் தலைவரைத் தேர்ந்தெடுத்திருப்பது நல்ல செய்தி.

உ. பி.யில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனம் செய்தது சட்ட விரோதமானது என்று ராஷ்டிரபதியிடம் தூதுகோஷ்டி விளக்கிய போது அவர் மிகவும் பொறுமையாகவும், ஏற்புத் திறனுடனும் அதைக் கேட்டுக் கொண்டதாகச் செய்தி பிரசுரமாயிருக்கிறது. இது எனக்கு வேடிக்கையா யிருக்கிறது. இந்த விவகாரத்தைப் பற்றி இருதரப்பின் வாதங்களையும் கேட்டறியாமலேயே அவர் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட தஸ்தாவேஜியில் குறிப்பிட்ட இடத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்! எனவே, இப்போது அவர் காட்டிய பண்பைப் பற்றிப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அவருக்கு அனுப்பிய அறிக்கையில் மத்திய சர்க்கார், உ. பி.யில் சட்டம்—சமூக ஒழுங்கு ஆகியவற்றில் எவ்வித நெருக்கடியும் ஏற்பட்டதாகக் காரணம் சொல்லவில்லை; அரசியல் ரீதியில் மட்டும் வாதமிட்டிருந்தது. அப்படியிருந்தும் கோடிக் கணக்கான மக்களைக் குறித்த ஜீவாதாரமான உத்தரவில் கையெழுத்திட்டிருக்கிறார். கையெழுத்திட ராஷ்டிரபதி இந்திய ஆதாரா லயத்துக்குக்கூடப் போகவில்லை. எனவே நாம் ராஷ்டிரபதியிடமிருந்து எதையும் எதிர் பார்க்க முடியாது.

உ. பி. சட்டசபையைக் கூட்டுவது தவிர வேறு வழியில்லை என்று கண்டு, பிரகடனத்தை ரத்து செய்யுமாறு ராஷ்டிரபதியிடம் சொல்லும்படி பிரதமரை உணரச் செய்தாலே இந்த அநீத உத்தரவை மாற்ற முடியும்.

*

ஆட்சி பீடத்தில் நீடித்து இருப்பதற்காக எவ்வளவோ சிரமப்படுகிறார் இந்திரா சீமாட்டியார். இதனால் எவருக்கும் எவ்வித நலனும் இல்லை என்பதையும், வெறும் டம்பத்துக்காக மனத்தை உபத்திரவித்துக் கொள்கிறோம் என்பதையும் அவர் ஏன் உணரவில்லை? பதவியிலிருப்பதற்குக் கூலியாகக் கம்யூனிஸ்ட்களிடம் பணயம் வைக்கப்பட்ட கைதியாகி யிருக்கிறார். இதற்காகத் தம் சக்தியை விரயம் செய்து கொள்வதும், தம்மைப் பற்றிய அபிப்பிராயத்தைப் பாழ்படுத்திக் கொள்வதும் தக்கதல்ல என அவர் உணரக் காணோம்.

பிரசார கோஷங்களால் மக்களை ஏமாற்றி விடலாம். ஆனால் பொருளாதார விதிகளை மாற்றிவிட முடியாது. எதிர்காலத்தைப் பற்றிப் பிரகாசமாகச் சித்திரம் தீட்டிவிடலாம். ஆனால் அதற்கு அவசியமான உழைப்பை அளிக்குமாறு மக்களைத் தூண்டி, உற்பத்தியைப் பெருக்குவது சிரமமாக உள்ளது. சுபிட்சம் உண்டாகவும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அகலுவதற்கும் உற்பத்திப் பெருக்கம் அவசியம். உற்பத்தி உயர்வுக்கு மக்களின் உழைப்பு அத்தியாவசியம். அச்சிட்ட ரூபாய் நோட்டு செல்வம் அல்ல. அந்த நோட்டைக் கொண்டு வாங்கக் கூடியவையே செல்வம். இந்தச் செல்வம் நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகிறது.

★

ஆட்சியாளரின் வட்டாரங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி நிறையப் பேசப்படுகிறது. வேலையின்மையும், சர்க்கார் கொள்கைகளும் நெருக்கமான தொடர்புடையவை. தனியார் தொழில் பெருக வேண்டும்; அதற்கு அடித்தளமான அமைப்பு விரிவடைய வேண்டும் — இதனால்தான் வேலையில்லாப் பிரச்னை தீரும். சர்க்கார் துறைத் தொழிலில் மேலும் பணத்தைக் கொட்டுவதால் பிரச்னை தீராது. சாலை போடுவது, ஏரிகளைச் சுத்தம் செய்வது, கிராமப்புறங்களில் கழிகால் வசதி ஏற்படுத்துவது ஆகிய பணிகளை மிக மிக விரிவு செய்ய இடமுண்டு. இதனால் வேலையின்மை குறைவதோடு, உற்பத்திப் பெருக்கத்துக்கும் உதவி ஏற்படும். மற்ற பெரிய நாடுகளைக் 'காப்பி' அடித்து டம்பாச்சாரித்தனம் செய்வதை விடுத்து, இந்த அம்சத்தில் போதிய யோசனை செலுத்தினால் கிராம மக்களுக்குப் பிரயோஜனமான வேலை தருவதில் பெரும் திட்டம் இடமுடியும். பிரிட்டனுக்கும், ஜெர்மனிக்கும் எது நல்லதோ, அது பெரும் ஜனத்தொகை கொண்ட இந்தியாவுக்குப் பொருந்தாது. விலை உயர்ந்த இயந்திரங்களும், நுட்பத் தொழில் திறமும் தேவைப்படும் ஆலைகளில் மனித சக்தி குறைவாகவே பயனாகும். இப்படிப்பட்ட முறை இந்தியாவுக்குப் பயன்படாது. இந்த முறையில் வேலையின்மை குறையாது. இது வெறும் டம்பத்துக்கே உதவும். நம் நாட்டில் வெகுலேசா வாங்கும் சில பொருட்களை வெளிநாடுகளிலிருந்து

## வைணவத் திருத்தலத் திருப்பணி

காஞ்சீபுரத்துக்கு அருகேயுள்ள நீர்வளூரில் உள்ள ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப் பெருமானின் திருக்கோயில் சுமார் ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர், ஸ்ரீ அஹோபில மடாதிபதிகளால் ஏற்படுத்தப்பட்ட ஆலயமாகும். கோயிலைச் சுற்றிய பிரதட்சிண வீதியில் அங்கப் பிரதட்சிணம் முதலியன செய்வது வழக்கம். எனவே, அதற்குச் சௌகரியமாக அதனைத் தளம் செய்வதற்கும், அதோடு நந்தவனத்தை விருத்தி செய்யவும் ஸ்ரீ அஹோபில ஆசாரியர்களின் நியமனப்படி திருப்பணி நடக்கிறது. ஆஸ்திக அன்பர்களின் திரவிய சகாயம் கோரப்படுகிறது. பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயில், நீர்வளூர், காஞ்சீபுரம் தாலுகா.

மலர் 30
இதழ் 12

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

# ஆத்மிக அணுகுண்டு வெடிக்க வேண்டும்!

எட்டாண்டுகளுக்கு முன்னர், பூமிக்கு மேலே அணு ஆயுதச் சோதனைகள் நடத்துவதை நிறுத்துவதாக அமெரிக்காவும் ருஷியாவும் ஒப்பந்தம் செய்து கொண்டன. தற்போது பூமிக்கு அடியில் நடைபெறும் அணுச் சோதனைகளையும் நிறுத்துவதற்கு இவ்விரு வல்லரசுகளும் உடன்படிக்கை செய்து கொள்ளச் சாதகமான சூழ்நிலை அமெரிக்காவில் நிலவுகிறது என்று நல்ல விஷயஞானமுள்ள ஒருவர் என்னிடம் சமீபத்தில் கூறினார். இப்படியோர் உடன்படிக்கை ஏற்படுமாயின் அணு ஆயுதச் சோதனை அடியோடு நின்றதாகும்.

கனவுலகில் சம்பந்தமில்லாத காரணங்களால் காரியங்கள் நிகழ்வது போலவே, சில சமயங்களில் உலக நடப்புக்களிலும் தொடர்பற்ற காரணங்களிலிருந்து மகத்தான விளைவுகள் ஏற்படுவதுண்டு. இந்த ரீதியில், நாஸரின் மறைவு அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் நல்ல முறையில் மன மாற்றம் ஏற்பட வழி செய்யலாம். மிகப் பெரிய பிரச்னைகளில் இவ்விரு நாடுகள் உடன்பாடு காண இப்போது புதியதோர் ஊக்கம் பிறக்கலாம்.

அணுகுண்டு சோதனைகளை நிறுத்துவது மட்டுமின்றி அணு ஆயுதங்கள் அனைத்தையும், ஏவுகணைகள் அனைத்தையும் அழித்து விட்டால், அது எவ்வளவு சிறப்பாக இருக்கும்! இதனால் பெரிய தேசங்களின் ஏராளமான நிதியம் விரயமாவது தவிர்க்கப்பட்டு, அது உண்மையாகவே உபயோகமான நோக்கங்களுக்குப் பயன்படும். அணு ஆயுதங்களை அடியோடு அகற்றுவதால் எத்தனையோ பிரச்னைகள், வெறும் பனிப் படலம் மறைவது போல் மறைந்தே போகுமென எதிர்பார்க்கலாம். அணு ஆயுதங்களைப் பிரயோகித்து யுத்தம் செய்தால் உலகமே அழியும் என அனைவரும் அறிவர். எனவே, ஒருகாலும் தாங்கள் பயன்படுத்தப் போவதில்லை என இருதரப்பினரும் அறிந்திருந்தும் இந்த ஆயுதங்களை ஏராளச் செலவில் தயாரிப்பது மடமையே அன்றோ? இந்த மடமைக்கு முடிவு கட்டி, அதற்காக ஆகும் இமாலயச் செலவைச் சேமிப்பதில் ஏன் தயங்க வேண்டும்?

தற்போது அமெரிக்கா எதிர்காலத்தில் நம்பிக்கை கொள்ளாமல் இருளில் ஆழ்ந்து வருகிறது. இது உலகம் முழுவதன் கவலைக்கும் உரிய விஷயம். வெள்ளையர் — கறுப்பர் தகராறு, வன்முறை பரவி வருதல், இளைஞர்கள் போதை அளிக்கும் மருந்துகளுக்கு அடிமையாதல் — இவ்வாறு பல பிரச்னைகள் அமெரிக்காவில் வலுத்துள்ளன. அங்கு செல்வச் செழிப்பு மிகவும் அதிகமானதே இதற்கெல்லாம் காரணமாகும். அமெரிக்க இளைஞர்கள் மனம் போனபடி நடப்பது பகவானை மறப்பதும், மறுப்பதும் மட்டும் அல்ல; பகவானை எதிர்த்துச் செய்யும் போராட்டமேயாகும். இதைப் பார்க்கும்போது இந்தியா ஏழை நாடாக இருப்பதையே அநுக்கிரகமாகக் கருதலாம். இப்போது நாம் செல்வச் செழிப்பில் மலை உச்சியை நாடி ஏற முயலகிறோம். அமெரிக்கா அந்த உச்சிக்குப் போனபின் மறுபுறச் சரிவில் சரிந்து வருகிறது. அமெரிக்காவில் ஆத்மிக இருள் படர்ந்தால் அது அந்த நாட்டோடு நிற்கும் விஷயமல்ல. அது உலகம் முழுவதும் விசனம் கொள்ள வேண்டிய பிரச்னையாகும். அமெரிக்க அரசு மக்களை மேம்படுத்த ஆத்மிக ரீதியில் பெருமுயற்சி எடுத்தாக வேண்டும். அப்போதுதான் நம்பிக்கை இழந்து, பேய்க் கனு கண்டதுபோல் தடுமாறும் மக்கள் விழிப்படைவர்.

எதிர்த் தரப்பை எதிர்பார்க்காமல் அணு ஆயுதங்களை ஒழிப்பதில் தங்களால் தார்மிக ரீதியில் முதலடி எடுத்து வைக்க முடியும் என்ற நம்பிக்கையை அமெரிக்கர் பெற வேண்டும். பகவத் பக்தியுடனும் தீரத்துடனும் இவ்வாறு முதலடி எடுத்து வைப்பது ஓர் ஆத்மிக அணுகுண்டாக அமெரிக்காவில் வெடிக்க வேண்டும்.

**(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது)**

இறக்குமதி செய்வதில் வெட்கப்பட ஏதும் இல்லை. இப்பொருட்களின் உற்பத்திக்காக நாம் செலவு செய்யாமல், அந்தப் பணத்தைக் கிராம மக்களுக்கு உழவை விட அதிக ஊதியம் தரும் துறைகளில் ஈடுபடுத்த வேண்டும்.

★

''மனிதனையும் பட்சிகளையும், விலங்குகளையும் எவன் ஒருபோல, நன்றாக நேசிக்கிறானோ, அவனே நன்றாகப் பிரார்த்திப்பவன். பெரியவை சிறியவை அனைத்திடமும் எவன் ஒருபோலச் சிறந்த அன்பைச் செலுத்துகிறானோ, அவனே தலைசிறந்த பிரார்த்தனையைச் செய்பவன். ஏனெனில் நம்மிடம் அன்பு செலுத்தும் பிரிய ஆண்டவன்தான் அனைத்தையும் படைத்து, அனைத்திடமும் அன்பு செய்கிறவன்.''

ஆங்கிலக் கவிஞர் ஸாமுவேல் டேய்லர் கோல்ரிட்ஜின் இந்த வார்த்தைகளை விட இனிய வரிகளை எம்மொழிக் கவிதையிலக்கியத்திலும் காண்பதற்கில்லை.

பௌதிக உலகத்தில் ஆகர்ஷண சக்தியே மிகப் பெரிய, மிக முக்கியமான சக்தியாகும். இவ்விதமே ஆன்ம உலகில் அன்பு என்பது தான் மிகப் பெரிய, மிக முக்கியமான சக்தியாகும். அன்புதான் உண்மையான பிரார்த்தனை. உண்மையான பிரார்த்தனை என்பது அன்புதான். 'பய பக்தி' என்கிற வார்த்தை வழக்கில் இருப்பினும் அது எனக்கு அவ்வளவு பிடித்தமானதாக இல்லை. 'பய பக்தி' என்னும்போது ஆண்டவனிடம் பயப்படவேண்டும் என்று அர்த்தம் கொள்ள வேண்டா. பாபத்தையும் அதருமத்தையும் கண்டு பயம் கொள்வதே இதனால் குறிப்பிடப்படுகிறது. பாபத்தைக் கண்டே நாம் பயப்படவேண்டும். பகவானைக் கண்டல்ல. பக்தி என்பது அன்பு தான். அச்சம் அல்ல.

ஒன்றாக இருந்த ஆண்டவன் தன்னைப் பல வாக்கிக் கொண்டான். அப்போது அவை ஒன்றுக்கொன்று ஆகர்ஷித்துக் கொள்ளும் மகத்தான சக்தியும் உண்டாயிற்று. இது தான் அன்பின் பிறப்பு; அந்த அன்பில் விளையும் ஆனந்தம் இப்படியே உண்டாயிற்று.

பலவாறாகப் பிரிந்த பரம்பொருள் அன்பின் ஆகர்ஷண சக்திக்கே முற்றிலும் விடப்பட்டிருந்தால் அந்தப் பலவும் கூடி மீண்டும் ஒன்றாகியிருக்கும். அதோடு பிரபஞ்ச லீலை முடிவு பெற்றிருக்கும். அப்படி முடியலாகாது என்றே துவேஷம், கோபம் முதலிய சக்திகள் தோன்றின. அவை பரம்பொருளின் பல வடிவங்களைப் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று விலகிப் போகுமாறு செய்தன. இதனாலேயே அவை அன்பில் நெருங்கும்போது ஏற்படும் ஆனந்தம் முன்னைவிட அதிகரிக்கவும் வழி ஏற்பட்டது. அன்பில் நெருங்குபவை கோபத்தில் விலகுவதும், மீண்டும் அன்பில் நெருங்குவதுமாக லீலை அனந்தமாவதற்கு இடம் உண்டாயிற்று.

பல சமயங்களில் அன்பையும் துவேஷத்தையும் பகுத்துச் சொல்ல இயலாமல் போகிறது. நன்மையைத் தீமையிலிருந்து பிரித்துச் சொல்ல முடியாமல் ஆகிறது. இதனைத்தையும் உள்ளிருந்து ஒரு நியதி சரடு போல் கோக்கிறது. அதன் ஒருசில இணைப்புத் துண்டுகளை மட்டுமே நாம் காண்கிறோம்.

★

பிரிட்டிஷ் ஆட்சி முடிந்து, இந்தியாவில் நிறுவப்பட்ட புதிய ஆட்சி முறையில் வோட்டுப் பெற்றவர்களே சர்க்காரில் அதிகார ஸ்தானத்துக்கு வரும் அமைப்பு உண்டாயிற்று. தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் தான் அதிகாரத்துக்கு வரமுடியும் என்ற இந்த அமைப்பில் மனித இயற்கை வலுவாகச் செயல்படலாயிற்று. இந்தியாவின் சூழ்நிலையில் இது இருப்திகரமான விளைவுகளை உண்டாக்கவில்லை. வோட்டுப் பெறுபவர்களே அதிகாரம் பெற முடியும் என்ற நிலையிலிருந்து, அதிகாரம் பெறுபவர்களே வோட்டுப் பெற முடியும் என்கிற நிலை தோன்றிவிட்டது. அதிகாரத்தில் உள்ளவர்கள்தான் தேர்தல்களுக்காகப் பெருந்தொகை வசூலிக்க முடிகிறது. பணம் மட்டுமின்றி வோட்டுக்களும் அதிகாரம் பெற்றவர்களுக்கே கிடைக்கிறது.

# க்ளாக்ஸோ மில்க் ஃபுட் குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்க்கிறது

Creative Unit-160 Tam

## உங்கள் செல்வமும் ஒரு க்ளாக்ஸோ குழந்தை தானே?

குழந்தையின் ஆரம்ப வாழ்வை ஆரோக்கியமாகத் துவக்குகிறது க்ளாக்ஸோ மில்க் ஃபுட்; காரணம், குழந்தைக்கு ஊட்டமளிப்பதற்கான எல்லாச் சத்துக்களையும் கொண்டது க்ளாக்ஸோ மில்க் ஃபுட்... அவனது எலும்புகளை உறுதியாக்கி, தசைகளையும் இரத்தத்தையும் வளர்க்கிறது அது. இந்தியாவில் முதன் முதலாகக் குழந்தைகளுக்கான பாலுணவைத் தயாரித்தவர்கள் அளிப்பது—க்ளாக்ஸோ மில்க் ஃபுட்

# பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

## அத்தியாயம் இருபத்தொன்பது

## இராஜ தரிசனம்

அவர்கள் மறைந்த பிறகு ஊமை ராணி சுரங்கப் பாதை தென்பட்ட இடத்துக்கு வந்தாள். உற்று உற்றுப் பார்த்துப் பாதையைத் திறப்பதற்கு முயன்றாள். முடியவில்லை. ரவிதாஸன் அப்பாதையைத் திறந்தபோது அவள் தூரத்தில் நின்றபடியால் திறக்கும் வழியை அவள் கவனித்துப் பார்த்துக் கொள்ள முடியவில்லை.

இரண்டு பேரில் ஒருவனாவது அங்கே கட்டாயம் திரும்பி வருவான் என்று அவள் மனத்தில் நிச்சயமாகப் பட்டிருந்தது. ஆகையால், அவ்விடத்திலேயே காத்திருக்கத் தீர்மானித்தாள்.

அவள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. ரவிதாஸனை வெளியில் அனுப்பி விட்டுச் சோமன் சாம்பவன் அங்கே திரும்பி வந்தான். அவன் கையில் தீவர்த்தி இருந்தது. ஆனால் முன்னைக் காட்டிலும் மங்கலாக எரிந்தது. ரவிதாஸனிடம் அவன் எவ்வளவோ தைரியமாகத்தான் பேசினான். ஆயினும் அவன் மனத்தில் பீதி போகவில்லை என்பது சுற்று முற்றும் மிரண்டு பார்த்துக் கொண்டு வந்ததிலிருந்து தெரிந்தது.

சுரங்கப் பாதை திறந்த இடத்தின் அருகில் வந்து அவன் பீதியுடன் உட்கார்ந்து கொண்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் தீவர்த்தி அணைந்து விட்டது.

பிறகு அவன் சுவரின் உச்சியின் மீதிருந்த பலகணியை அடிக்கடி அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அதன் வழியாக உள்ளே வந்த வெளிச்சம் சிறிது சிறிதாக மங்கி மறைந்து கொண்டிருந்தது.

நன்றாக வெளிச்சம் மங்கிச் சூரியன் அஸ்தமித்து விட்டது என்று அறிந்த பிறகு அவன் சுரங்கப் பாதையை மறுபடியும் திறக்கத் தொடங்கினான். இப்போது மந்தாகினி அதன் சமீபமாக வந்து நின்று கொண்டாள்.

பாதை திறந்தது. சோமன் சாம்பவன் அதனுள் இறங்கப் போனான்.

அப்போது அந்த நிலவறையில், அவனுக்கு வெகு சமீபத்தில், 'கிறீச்' என்ற நீடித்த ஓலக் குரல் ஒன்று கேட்டது. சோமன் சாம்பவன் தன் வாழ்நாளில் எத்தனையோ பயங்கரங்களைப் பார்த்தவன்தான். . யினும் அந்த மாதிரி அமானுஷிகமான ஒரு சத்தத்தை அவன் கேட்டதில்லை. பேய் என்பதாக ஒன்று இருந்து அதற்குக் குரலும் இருந்தால், அது இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தோன்றியது. முதல் தடவை அக்குரல் கேட்டதும் சாம்பவன் தயங்கி நின்றான். அதன் எதிரொலி நிற்கும் வரையில் காத்திருந்தான். இரண்டாந் தடவை அந்த ஓலக் குரலைக் கேட்டதும் அவன் உடம்பின் ரோமமெல்லாம் குத்திட்டு நிற்கத் தொடங்கியது. மூன்றாந் தடவை இன்னும் சமீபத்தில் கேட்ட பிறகு அவனுடைய உறுதி குலைந்துவிட்டது. அந்த இருளடர்ந்த நிலவறையில் வழி துறை கவனியாமல் குருட்டாம் போக்காக ஓடத் தொடங்கினான்.

அவன் மறைந்ததும் ஊமை ராணி அந்தப் பாதையில் இறங்கினாள். சில படிகள் இறங்கிய பிறகு சம தரையாக இருந்தது. அதில் விடுவிடு என்று நடந்து போனாள். சோமன் சாம்பவன் அவள் இறங்குவதைப் பார்த்திருந்து திரும்பி வந்தாலும் அவளைப் பிடித்திருக்க முடியாது. அவ்வளவு விரைவாக நடந்தாள். நரகத்துக்குப் போகும்

எல்லையில்லாத இருண்ட வழியைப் போல் தோன்றியது. ஆயினும் அதற்கும் ஒரு முடிவு இருந்தது. செங்குத்தான சுவரில் முடிந்த இடத்தில் மேலே இடைவெளி சிறிது தெரிந்தது. சில படிகளும் கண்களுக்குத் தென்பட்டன. அவற்றின் வழியாக ஏறிய போது தலையில் திடீரென்று முட்டியது. பாதாளப் பாதையின் படிகளுக்கும் மேலே தலை முட்டிய இடத்துக்கும் நடுவில் சிறிய சிறிய இடைவெளிகள் காணப்பட்டன. அவற்றுள் ஒன்றில் நுழைந்து வெளியில் வந்தாள். சுற்றிலும் பெரிய பெரிய பூத வடிவங்கள் தென்பட்டன. ஈழத் தீவில் பிரம்மாண்டமான சிலை வடிவங்களைப் பார்த்தவளானபடியால் அந்தக் காட்சி அவளுக்குத் திகைப்பை உண்டு பண்ணவில்லை. தான் வெளி வந்த பாதை எங்கே முடிகிறது என்பதை நன்றாய்க் கவனித்துக் கொண்டாள். பத்துத் தலை இராவணன் தன் இருபது கைகளினாலும் கைலையங்கிரியைப் பெயர்த்து எடுத்துக் கொண்டிருந்தான். மலைக்கு மேலே சிவனும் பார்வதியும் வீற்றிருந்தார்கள். இராவணன் மலையைத் தூக்கிய இடத்தில் கீழே பள்ளமாயிருந்தது. மேலே தூக்கி நிறுத்திய மலையை அவனுடைய இருபது கைகளும் தாங்கிக் கொண்டிருந்தன. அவற்றில் இரண்டு கைகளுக்கு மத்தியில் இருந்த இடைவெளி வழியாக அந்தச் சிற்ப மண்டபத்துக்குள் தான் பிரவேசித்திருப்பதைத் தெரிந்து கொண்டாள். கைலையங்கிரிக்கு அடியில் அப்படி ஒரு பாதை இருக்கிறதென்பது சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு ஒரு நாளும் தெரியாது. அதன் அடியில் இறங்கிப் பார்க்கலாம் என்ற எண்ணமும் யாருக்கும் தோன்றாது. சமயத்தில் ஒளிந்து கொள்ளுவதற்குக்கூட அது சரியான மறைவிடந்தான்.

சில மணி நேரம் அந்தச் சிற்பச் சுரங்கப் பாதையின் அதிசயத்தைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மந்தாகினி அச்சிற்ப மண்டபத்தைச் சுற்றினாள். வெளிச்சம் மிகக் குறைவாயிருந்தபோதிலும் இரவில் பார்த்துப் பழக்கமுற்ற அவளுடைய கூரிய கண்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரிந்தன.

ஓரிடத்தில் சோழ குலத்து முன்னோர்களில் ஒருவரான சிபிச் சக்கரவர்த்தி புறாவின் உயிரைக் காக்கத் தம் உடலின் சதைகளை அறுத்துக் கொடுக்கும் காட்சி சிலை வடிவத்தில் இருந்தது. சிபியின் வம்சத்தில் பிறந்தவர்களானபடியினால் அல்லவோ சோழர்களுக்குச் 'செம்பியன்' என்னும் பட்டம் உரியதாயிற்று? அந்தச் சிற்பத்தைக் கூர்மையாகக் கவனித்துப் பார்த்த பிறகு ஊமை ராணி அப்பால் சென்றாள். பிரம்மாண்டமான சிவபெருமானுடைய சிலையின் சிரசிலிருந்து கங்கை நதி கீழே விழும் காட்சி ஒரு சிற்பத்தில் அமைந்திருந்தது. அருகில் பகீரதன் கைகூப்பிய வண்ணம் நின்று கொண்டிருந்தான். கீழே விழுந்த பாகீரதி நதி ஒரு பிரம்மாண்டமான ரிஷியின் வாய் வழியாகப் புகுந்து காது வழியாக வெளியேறியது. அப்படி வெளியேறிய கங்கையில் ஒரு சிறிய முனிவர் குண்டிகையில் தண்ணீர் மொண்டு கொண்டிருந்தார். அவர்தான் குறுமுனிவர் என்று பெயர் பெற்ற அகஸ்தியராக இருக்க வேண்டும். அந்தக் குண்டிகையை அவர் இன்னொரு சிறிய மலையின் மீது கவிழ்த்தார். குண்டிகையிலிருந்து பெருகிய நதி வர வரப் பெரிதாகிக் கொண்டு சென்றது. இந்தச் சிற்பக் கங்கையிலும் காவேரியிலும் அவற்றை அமைத்தபோது தண்ணீர் பெருகுவதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஆனால் இப்போது அவற்றில் தண்ணீர் இல்லை. காவேரி நீண்டு வளைந்து மலைப் பாறைகளின் வழியாகவும் மரமடர்ந்த சோலைகளின் வழியாகவும் சென்றது. அதன் இருபுறமும் அநேக சிவன் கோயில்கள் இருந்தன. கடைசியாகக் காவேரி கடலில் கலக்க வேண்டிய இடத்தில்

அந்தச் சிற்ப மண்டபத்தின் மதிள் சுவர் இருந்தது. ஏதோ சந்தேகப்பட்டு ஊமை ராணி அந்த இடத்தில் மதிள் சுவரில் கையை வைத்து அமுக்கினாள். சிறிய கதவு ஒன்று திறந்தது. அதன் வழியாக வெளியேறினாள். அவள் வெளியேறிய இடம் அரண்மனைத் தோட்டம். அதற்கு அப்பால் வெகு சமீபத்தில் அரண்மனையின் உன்னதமான மாடங்கள் காணப்பட்டன. சுற்று முற்றும் பார்த்தாள். மங்கிய அந்தி மாலையின் வெளிச்சத்தில் தோட்டத்தில் யாருமில்லை என்று தெரிந்தது. பழுவேட்டரையரின் தோட்டத்தில் விழுந்து கிடந்தது போலவே இங்கேயும் மரங்கள் முறிந்து விழுந்து கிடந்தன. ஆகையால் தோட்டத்தில் யாராவது இருந்தாலும் அவள் சிற்ப மண்டபத்திலிருந்து வெளிவந்ததைப் பார்த்திருக்க முடியாது. இன்னும் நன்றாய் இருட்டட்டும் என்று சிற்ப மண்டபத்தை யொட்டியே நின்று காத்திருந்தாள். ஒரு வேளை கையில் வேலையுடைய அந்த யமகிங்கரன் வந்தாலும் வரக்கூடும். ஆகையால், சிற்ப மண்டபத்துக்குள்ளும் அடிக்கடி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரண்மனையின் தீபங்கள் ஒவ்வொன்றாகச் சுடர்விட்டு எரியத் தொடங்கின. சிறிது நேரத்துக்கெல்லாம் அரண்மனை முழுதும் ஒரே ஜகஜ்ஜோதியாகக் காட்சி அளித்தது. கீழ் அறைகளில் ஏற்றிய தீபங்கள் பலகணிகளின் வழியாக வெளியில் ஒளி வீசின. மேல் மாடங்களில் ஏற்றிய தீபங்கள் வானத்து நட்சத்திரங்களுடன் போட்டியிட்டுக் கொண்டு பிரகாசித்தன.

''ஐயோ! பகல் வேளையைக் காட்டிலும் இரவு மிகவும் அபாயகரமாகத் தோன்றுகிறதே!'' என்று மந்தாகினி எண்ணினாள்.

அரண்மனையை நாலுபுறமும் நன்றாக உற்றுப் பார்த்தாள். சிற்ப மண்டபத்துக்குச் சமீபமாக இருந்த அரண்மனைப் பகுதியிலே மட்டும் அதிக விளக்குகள் இல்லை என்பதைக் கவனித்துக் கொண்டாள். காவேரி வெள்ளத்திலிருந்து தான் எடுத்துக் காப்பாற்றிய தன் உயிருக்குயிரான செல்வக் குமாரனை இலங்கையில் கொல்ல முயன்ற பாதகனும் அவனுடைய தோழனும் அரண்மனையின் இந்தப் பகுதியிலேதான் மேல் மாடத்தில் ஏறி நின்றார்கள். ரவிதாஸன் இன்னொருவனிடமிருந்து வேலை வாங்கி யார் மீதோ எறிவதுபோல் குறி பார்த்த இடம் அதுதான். நல்ல வேளையாக, இந்தப் பகுதியில் அதிகமாகத் தீபங்கள் ஏற்றவில்லை. அதற்குக் காரணம் யாதாயிருக்கலாம்?... நல்லது: அதுவும் சீக்கிரத்தில் தெரிந்து போகிறது.

நன்றாக அஸ்தமித்து அரண்மனைத் தோட்டத்தில் இருள் சூழ்ந்தவுடனே மந்தாகினி சிற்ப மண்டபத்தின் வாசலிலிருந்து மிரண்டோடும் மானின் வேகத்துடன் பாய்ந்து சென்று அரண்மனையை அடைந்தாள். அரண்மனையின் அந்தப் பின் பகுதியில் வட்ட வடிவமான தாழ்வாரங்களும் அவற்றைத் தாங்கி நின்ற வரிசை வரிசையான தூண்களும், பல இடங்களில் மேல் மாடத்துக்கு ஏறும் படிக்கட்டுக்களும் காணப்பட்டன. தாழ்வாரங்களில், பெரிய விருந்துகளுக்குச் சமையல் செய்ய உதவும் பிரம்மாண்டமான தாமிரப் பாத்திரங்கள் பழசாய்ப் போன தந்தப் பல்லக்குகள், ஒடிந்த சிங்காதனங்கள்,— இப்படிப் பல பொருள்கள் இருந்தன. அவற்றின் மத்தியில் சிறிது நேரம் சுற்றிப் பார்த்துவிட்டு மந்தாகினி கடைசியாக ஒரு படிக்கட்டின் மீது துணிந்து ஏறினாள். கீழே இருந்தது போலவே மேல் மாடத்திலும் வட்ட வடிவமான தாழ்வாரங்களும் அவற்றின் மேற்கூரையைத் தாங்கிய சித்திர விசித்திரமான தூண்களும் வேலைப்பாடு அமைந்த பலகணிகளும் நிலா முன்றில்களும் அவற்றில் பளிங்குக் கல் மேடைகளும் காணப்பட்டன. மனித சஞ்சாரம் அற்றதாகத் தோன்றிய அந்த மேல் மாடக் கூடங்களில் மந்தாகினி சுற்றிச் சுற்றி அலைந்தாள். மாடத்தின் உட்புறத்து அறைகளுக்குப் போக அவள் மிகவும் தயங்கினாள். ஓரிடத்தில் உட்புறத்தில் கீழேயிருந்து தீப வெளிச்சம் வருவதைக் கண்டு அங்கே போய்த் தூண் மறைவில் நின்று எட்டிப் பார்த்தாள்.

ஆகா! அவள் பார்த்தது என்ன?

பார்த்த கண்களைத் திருப்பவே முடியாத காட்சியைப் பார்த்தாள்.

ஒரு விசாலமான மண்டபத்தின் மத்தியில் விசித்திர வேலைப்பாடு அமைந்த சப்ரமஞ்சக் கட்டிலில் ஒருவர் சாய்ந்த வண்ணம் படுத்திருந்தார்.

அவரைச் சுற்றிலும் நாலு ஸ்திரீகளும் இரண்டு ஆடவர்களும் அச்சமயம் நின்றார்கள். படுத்திருந்தவரிடம் அவர்கள் பயபக்தி கொண்டவர்கள் என்பது அவர்களுடைய தோற்றத்திலிருந்து தெரிந்தது. சிறிது தூரத்தில் இன்னும் அதிக மரியாதையுடன் இரு தாதிப் பெண்கள் நின்றார்கள்.

ஒரே ஒரு தீபந்தான் அந்த மண்டபத்தில் எரிந்தது. அதுவும் கட்டிலுக்கு அருகில் இருந்த விளக்குத் தண்டின்

# கீதைக் கதைகள்

'எனவே, நீ பட்ட கடனே நீ வழங்கிய தான மாகவும் அமைந்தது....'

## 12. சடு

அவன் கிங்கரன்; இவன் சங்கரன்.

அவன் எமதூதன்; இவன் நரன்.

''உன்னைச் சொர்க்கத்துக்கு அழைத்துவரக் கட்டளை இதோ!'' என்றான் அவன்.

''நன்று. அமரும். ஓர் ஐயம் உளது. தயை செய்யும்'' என்றான் இவன்.

''சங்கரா! சீக்கிரம் கேள்....'' - கிங்கரனுக்குக் கடமையில் கண்.

''எனக்கு முன்னரும் இறந்தனர் பலர். மாடி வீட்டு மாணிக்கமும், பண்ணையார் கண்ணப்பரும், மளிகைக் கடை மார்க்கண்டுவும் அவர்களுள் அடங்குவர். அவர்கள் இக்கணம் யாங்குளர் அறிவீரோ?''

''அறிவேன். சொர்க்கத்தில் சேமமுடன் வாழ்கிறார்கள்.''

''அப்படியா?'' இவன் முகத்தில் சோகம் கவிந்தது.

''ஏன் கவலை?''

''அவர்கள் விடாக்கண்டர்களாகவும், நான் கொடாக்கண்டனாகவும் இப்பூவுலகில் வாழ்ந்தோம். அவர்களிடம் நான் பட்ட கடனை இறுதிவரை கொடுக்கவே யில்லை. அவர்கள் தொல்லை சொர்க்கத்தில் தொடருமோவென அஞ்சுகிறேன்.''

''அச்சம் தவிர். அவர்கள் உன்னை வரவேற்பதற்காக மாலையுடன் காத்திருக்கிறார்கள்....''

''மனமாற்றத்துக்குக் காரணம் யாதோ?''

''சொர்க்க பதவி கிடைப்பதற்குத் தான தர்மம் செய்வதினால் கிடைக்கும் புண்ணியமும் சேரல் வேண்டும். அந்தப் புண்ணியத்தை அவர்கள் உன்னால் தான் பெற்றார்கள்....''

''எனக்கு விளங்கவில்லை....''

''உன்னிடமிருந்து கடன் தொகையை வசூலிக்கும் அலுவல் அலுத்துப் போகவே, அவற்றைத் தர்மக் கணக்கில் எழுதிவிட்டார்கள். பின்னர் நீ கடன் கொடுக்காது தப்பியோடும் வித்தையை ரசிப்பதற்கு உன்னை விரட்டினார்களே ஒழிய, கடன் வசூலிக்கும் நோக்கம் அவர்களுக்குச் சிந்தித்தும் இருக்கவில்லை.''

''நான் யாருக்கும் தான தருமம் செய்ததாக ஞாபகம் இல்லை....''

''அதுவும் சம்பாதிக்கும் புண்ணியத்தை அவர்கள் பெற நீ காரணனும் அமைந்தாயல்லவா? எனவே நீ பட்ட கடனே நீ வழங்கிய தானமாகவும் அமைந்தது. வா, சீக்கிரம்....''

இவனுக்கு அவன் கூறியவை விளங்கவில்லை. புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையும் இல்லை.

இவன் அவனுடன் புறப்பட்டான்.

- எஸ். பொன்னுத்துரை

---

மீது பொருத்தப்பட்டு மங்கலான வெளிச்சத்தையே தந்து கொண்டிருந்தது.

சுற்றிலும் நின்றவர்களை முதலில் மந்தாகினி பார்த்தாள். அவர்களில் ஒருத்தி தன் உயிருக்குயிரான சகோதரன் மகள் பூங்குழலி என்பதை அறிந்தாள். மற்றவர்களையும் அவள் முன்னம் சில தடவை மறைவான இடங்களிலிருந்து பார்த்திருக்கிறாள். ஆனால், அவர்கள் எல்லாம் யார் யார் என்பது அவ்வளவு நன்றாகத் தெரியாது.

சுற்றி நின்றவர்களைப் பார்த்துவிட்டு மிக மிகத் தயக்கத்துடன் மந்தாகினி கட்டிலில் படுத்திருந்தவரைப் பார்த்தாள். அவளுடைய நெஞ்சு ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டது.

ஆம்; அவரேதான்! எத்தனையோ யுகம் என்று சொல்லக்கூடிய நீண்ட காலத்துக்கு முன்னால், தான் சின்னஞ் சிறு பெண்ணாக ஓடி விளையாடிக் காடுகளில் திரிந்துகொண்டிருந்த காலத்தில், ஓடத்தில் வந்து ஒதுங்கி, தன் உள்ளத்தையும் உயிரையும் கொள்ளை கொண்ட மனிதர்தான். தான் வாழ்ந்திருந்த பூதத் தீவைச் சில காலம் சொர்க்க லோகமாக ஆக்கியிருந்தவர்தான். பெரிய கப்பலில் கூட்டமாக வந்தவர்களால் அழைத்துப் போகப்பட்டவர்தான்!

ஆகா! அவர் இப்போது எப்படி மாறிப் போயிருக்கிறார்!

பூர்வ ஜன்மம் என்று சொல்லக் கூடிய அந்த நாட்களுக்குப் பிறகும் மந்தாகினி அவரைப் பல தடவை அவரறியாமல் பார்த்திருக்கிறாள். காவேரி நதியில் உல்லாசப் படகுகளில் அவர் சென்ற போது கரையில் அடர்ந்த புதர்களின் மறைவில் ஒளிந்திருந்து பார்த்திருக்கிறாள். நகரங்களின் தெருக்களில் வெண் புரவிகள் பூட்டிய தங்க ரதத்தில் வீதி வலம் வந்த போது கூட்டத்தோடு கூட்டமாய் நின்று பார்த்திருக்கிறாள். ஆனால் கடைசியாக அவரைப் பார்த்துக் கொஞ்ச காலம் ஆகிவிட்டது. அந்தக் காலத்துக்குள்ளே தான் இப்படி மாறிப் போயிருக்கிறார். முகத்தில் தாடியும் மீசையும் வளர்ந்திருந்தன. கன்னங்கள் ஒட்டி உலர்ந்து போயிருந்தன. நெற்றியிலே சுருக்கங்கள். ஆகா! அந்தக் கண்களில் ஒருகாலத்தில் குடிகொண்டிருந்த காந்த

ஒளி எங்கே போயிற்று? தெய்வமே! இப்படியும் மனிதர்கள் மாறுவது உண்டா? இலங்கைத் தீவில் விஷ ஜுரத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் பலரை நீண்டநாள் காய்ச்சலுக்குப் பிறகு உயிர் போகும் சமயத்தில் ஊமை ராணி மந்தாகினி பார்த்ததுண்டு.

ஆகா! ஒரு சமயம் தங்கச் சூரியனைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்த இவருடைய களை ததும்பிய முகமும் அவ்வளவாக மாறிப் போயிருக்கிறதே?

ஒருவேளை இவருடைய அந்திய காலமும் நெருங்கி விட்டதோ!

திடீரென்று மந்தாகினிக்கு அன்று மாலை தான் பார்த்த பயங்கரக் காட்சி நினைவுக்கு வந்தது. அவள் அச்சமயம் நின்ற இடத்திலேதான் ரவிதாஸன் என்னும் கொலைகாரனும் அவனுடைய தோழனும் நின்றார்கள். அங்கிருந்துதான் வேல் எறியக் குறி பார்த்தார்கள். ஒருவேளை கட்டிலில் படுத்திருப்பவர் மீது எறியத்தான் குறி பார்த்தார்களோ?

இந்த நினைவினால் மந்தாகினியின் உடம்பெல்லாம் வெட வெடவென்று நடுங்கியது. கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தது. மயக்கம் வரும் போலிருந்தது. தூணைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கால்களை ஊன்றி நின்று சமாளித்துக் கொண்டாள். (தொடரும்)

---

## இறவா வரம்

அமுத நிலையத்தார் அண்மையில் வெளியிட்டிருக்கும் 'இறவா வரம்' ஒரு சாகா வரம் பெற்ற கற்பனை நாடகம்! புத்தர் காலம் தொட்டு மனித குலம் மூப்பையும், இறப்பையும் வெல்லத்தானே தவம் கிடக்கிறது? இந்த இறவா வரம் முற்றிலும் எதிர்பாராத வேளையில் மனித குலத்தை வந்தடைகிறது! தன் சொந்தக் காரணங்களுக்காக ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குக் காலன் வேலை நிறுத்தம் செய்கிறான்! தன் வேலைநிறுத்தத்தின் போதுதான் தன் பணியின் மகத்துவத்தை மக்கள் உணரப் போகிறார்கள் என்ற நம்பிக்கையுடன், காலன், மனித உருக் கொண்டு அவர்களிடையே நடமாடுகிறான். பலதிறப்பட்ட மனிதர்களோடு பழகி, அவர்களோடு அளவளாவும் சுவாரசியத்தில் தன் வேலைநிறுத்தத்தின் காலவரம்பையும் மீறிவிடுகிறான்.

எழுபது வயதைத் தாண்டி விருத்தபோதிலும் சாக விரும்பாத தனவந்த நோயாளி சச்சிதானந்தம்பிள்ளை. அவர் மகனும் முக்கியமாக மருமகளும் அவர் 'மண்டையைப் போடும்' நல்ல நாளுக்காக ஏங்கியவாறே நர்ஸிங்ஹோமுக்கு நடையாக நடந்து வரும் போதுதான் இந்தக் காலனுடைய வேலை நிறுத்தம் வந்து தொலைக்கிறது! இந்த மூவர் சம்பந்தப்பட்ட காட்சிகளும் நல்ல நகைச் சுவைக்கும், நையாண்டிக்கும் எடுத்துக்காட்டு.

ரேடியோவில் தமிழ் நாடகங்கள் தயாரிப்பதற்காகத் தமது உத்தியோக பருவம் முழுவதையுமே செலவிட்டு வந்துள்ள ஸ்ரீ டி.என். விசுவநாதன் எழுதிய நாடகம் இது.

கிடைக்குமிடம்: அமுத நிலையம், சென்னை-14, விலை ரூ. 3. —மகரம்

## ஸ்ரீ ராமாயண விம்சதி

இச்சிறு நூலில் இனிய சுலோகங்கள், ஸ்ரீமத் ராமாயண விம்சதி, ஸ்ரீ பாதுகாஷ்டகம், ஆதித்ய ஹ்ருதயம், ஸீதா ராம ஸ்தோத்திரம், ஸ்ரீ ராகவ பாத கமலம், ஹனுமத் அஷ்டோத்ர சத நாமாவளி ஆகிய புனித ஸ்லோகங்கள் அடங்கி யிருக்கின்றன. பக்தியோடு தினசரி பாராயணம் செய்து பலன் பெற விரும்புகிறவர்களுக்கு இந்நூல் ஒரு சிறு கருவூலம். தமிழ் எழுத்தில் அச்சிடப்பட்டிருப்பதால், நாகரி எழுத்துக்கள் தெரியாதவர்கள் கூடப் படித்துப் பயன் பெறலாம். நூலின் பிற்பகுதியிலுள்ள ''அநுபந்தம்'' யாவரும் படித்துப் பார்க்க வேண்டும்.

தொகுத்தவர்: டொம்பி ஆர். ராகவாச்சாரியார், உதவி: பேராசிரியர் ஆர். ராமானுஜாசாரியார்; கிடைக்குமிடம்: ஆர். ராகவாச்சாரியார், 14-ஏ, சிதம்பர ரோடு, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை—18. விலை: 0-60.

## ஐம்பெரு விழாக்கள்

திருச்செந்தூர், திருவண்ணாமலை, தில்லையம்பதி, ஸ்ரீரங்கம், மதுரை, ஆகிய தெய்விகத் திருத் தலங்களில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாக்களை மிகவும் சுவையாகக் கதை சொல்லுகிற மாதிரி இந்நூல் எடுத்துக் கூறுகிறது. ஓர் ஆஸ்திகர், நாஸ்திக மனப்பான்மை கொண்ட ஒரு நண்பரோடு தெய்விகத் தலங்களுக்குச் சென்று திருவிழாக் காலங்களில் தரிசனம் செய்வதாக ஐம்பெரும் விழாக்களும் சுவாரஸ்யமான சம்பாஷணைகளுக்கு இடையில் விளக்கப்படுகின்றன. அவற்றுக்கிடையே இலேசாக அரசியல் விஷயங்களையும் சுவையூட்டும் விதத்தில் சேர்த்திருக்கிறார். நாஸ்திக வாதத்தை மிகவும் தாக்குக்காகத் தாக்கி ஆஸ்திகத்துக்கு ஆதரவு அளிப்பது இந்நூலின் பொது நோக்கம். விளம்பரங்களைத் தவிர்த்திருக்கலாம்.

ஆசிரியர்: செந்தில் துறவி; பிரசுரம்: சாந்தா பதிப்பகம், 50, கிழக்கு ரத வீதி, திருச்செந்தூர்; விலை: ரூ. 1.50.



# பட்னாவைப் பார்த்தேன்!

இங்கே ஓடும் பாசஞ்சர் வண்டிகளில் ஒரு ரயில் பெட்டியிலாவது விளக்குகள் இல்லை. மின்சார விசிறிகள் இருட்டுப் போயிருக்கின்றன. அபாய அறிவிப்புச் சங்கிலிகள் அறவே நீக்கப்பட்டு விட்டன. அப்படி இருந்தும் ஜனங்கள் வாக்குவம் குழாயைத் திருகிவிட்டு வேண்டிய இடத்தில் ரயிலை நிறுத்திக்கொள்கிறார்கள். இந்த விஷமிகளைப் பிறர் காட்டிக் கொடுப்பதுமில்லை. பஸ்ஸில் ஏறிய சிறுவன்கூட டிக்கெட் கேட்கும் கண்டக்டரை எதிர்த்து நிற்கிறான். மற்றவர்கள் ஊமைகளாய்ச் செவிடர்களாய்ச் செயலற்று வேடிக்கை பார்க்கிறார்கள்!

இவ்வாறெல்லாம் எங்கே நடக்கிறது?

தற்போது பீஹார் மாநிலத்தின் தலைநகராய் விளங்கும் பட்னாவில்தான். முன்னாளில் இது மகத நாட்டின் ராஜதானியாக இருந்தபோது இதற்குப் பாடலிபுத்திரம் என்று பெயர். சரித்திரப் புகழ்பெற்ற சந்திரகுப்த மௌரியனையும், அசோக மன்னனையும் நினைவுக்குக் கொண்டு வரும்.

மௌரியர் காலத்துச் சின்னங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பார்த்தோமானால் பட்னா நகரம் கங்கை ஆற்றின் கரையை ஒட்டிப் பத்து மைலுக்குப் பரவியிருப்பதையும், மூன்று பகுதிகளாக அதைப் பிரிக்கலாம் என்பதையும் அறியலாம். ஷேர்ஷா சூரி வசித்த பதினாறும் நூற்றாண்டுப் பகுதி, வெள்ளையர் ஆட்சியில் வளர்ந்த பாங்கிபூர், மீதி இந்தியா சுதந்திரமடைந்த பிறகு தோன்றியது. விடுதலை அடைந்து இவ்வளவு நாட்களுக்குப் பின்னும் அதிகம் வளர்ச்சியுறாத பகுதியாகத்தான் நகரம் காணப்படுகிறது. நகரத்தில் திறந்த சாக்கடைகளும், குப்பைமேடுகளும்தாம் அதிகம். இதற்கு வெளியார் எவரையும் குறை கூற இயலாது.

டெல்லி — கல்கத்தா மார்க்கத்தில் கிழக்குப் பிராந்திய ரயில் தொடர்பின் ஒரு முக்கியமான சந்திப்பு இது. நகரத்திற்கும் தனியான புகை இரத நிலையம் ஒன்று இருக்கிறது.

பட்னா சந்திப்பு இரயில் நிலையத்திற்கு இப்போதுதான் விடிமோட்சம் ஏற்பட்டுப் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

கங்கைக் கரையில் குடியிருக்கும் பெருமையினாலோ என்னவோ எவருக்கும் சுத்தமாயிருப்பதில் நம்பிக்கை கிடையாது. வாரத்தில் ஒரு நாள் குளித்தால் அதிகம். துணிகளைத் துவைப்பதே இல்லை. முகத்தில் எப்போதும் ஒரு கடுகடுப்பு. உரையாடல்களில் எப்போதும் தொக்கி நிற்கும் கேள்விக் குறி ஒலி. உள்ளூர்வாசிகளுக்குக் கடின உழைப்பில் நம்பிக்கை இருப்பதாய்த் தோன்றவில்லை. புகையிலையில் சுண்ணாம்பைச் சேர்த்து இழைத்துத் தாடையில் அடக்கிக்கொண்டு ஊர் முழுவதும் துப்புவது இனிமையான பொழுதுபோக்கு. இதற்குக் கய்னி என்று பெயர். அதன் போதை எப்போதும் வாக்கில் எரிச்சலை உண்டாக்குமோ? வடக்குப் பீஹார் வாசிகள் பெருமளவில் வங்கத்தில் குடியேறியிருக்கிறார்கள், வேலை வாய்ப்பை நாடி. கல்கத்தா டயமண்ட் துறைமுகத்தில் கூலி வேலை செய்பவர்களில் பெரும்பாலோர் பீஹாரி பையாக்கள். கோதுமை மாவில் நீரை விட்டுப் பிசைந்து பச்சையாகவே உண்டுவிட்டு பார்க் அவென்யூ நடைபாதையில்

■ ஹர் மந்திர் - குருகோவிந்தரின் பிறப்பிடம்.

■ முன்னாள் ஆளுநருக்கு நினைவுச் சின்னம்.

■ தானியக் களஞ்சியம். காப்டன் ஜான் கார்ஸ்டின் கட்டியது.

உறங்குவார்கள். முக்கியமாக இவர்களுக்கு வேண்டியது 'கய்னி'.

சீக்கிய சமயத்தின் கடைசிக் குருவான கோவிந்தர் இங்கே பிறந்தார். ஏழாண்டுகள் இந்த ஊரில் வசித்தார். அவரது அன்னை குஜ்ரி தேவி தன் வீட்டில் உபயோகப்படுத்திய பொருள்கள், குழந்தை கோவிந்தரின் காலணி, அம்பு, வில்லுண்டை ஆகியவை இங்கு புனிதச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு பாபா நானக் இங்கு வந்திருக்கிறார். குரு கோவிந்தரின் நினைவை நிலைபெறுத்த ராஜா ரஞ்சித் சிங் இங்கு ஒரு குருத்வாராவை எழுப்பினார். அது இன்று பெருமளவில் விஸ்தரிக்கப்பட்டு ஹர் மந்திர் என்ற பெயரில் விளங்குகிறது. குருத்வாரா இருக்கும் தெருவுக்கே ஹர்மந்திர் வீதி என்று பெயர். பட்னா நகரையே அவர்கள் ஹர்மந்திர் தக்த் (தக்த்—அரியாசனம்) என்று அழைக்கிறார்கள். அந்தப் பெருமக்கள் தங்கள் உழைப்பையும் ஊதியத்தையும் கொட்டி நான்கு ஆலயங்களை எழுப்பியுள்ளார்கள். ஒன்று கௌகாட் — பசுப் படித்துறைக் கோயில், மற்றது கோவிந்த் படித்துறைக் குருத்வாரா. நகரத்துக்கு மூன்று மைல் தொலைவில் குருவின் தோட்டம் என்ற தோப்பின் மத்தியிலும் ஆலயம் ஒன்று உள்ளது. குரு தேஜ் பகதூரின் வருகையினால் பட்டுக் கிடந்த இந்தத் தோப்பு பசுமை பெற்றதாக ஏடுகள் கூறுகின்றன. குரு, அவருடைய பரிவாரங்கள் ஆகியோரின் மெய்யுழைப்பினால் இது பொலிவுற்றிருக்க வேண்டும் என்பது பொருந்தும். சீக்கியன் என்பவன் உழைப்பின் சின்னம்.

ஹரிமந்திரம் தூய்மையும், புனிதமும் கட்டுப்பாடும் உள்ள தலம். தினம் நூற்றுக் கணக்கான யாத்திரிகர்கள் இங்கு வந்து, வணங்குகிறார்கள். அனைவருக்கும் உண்டியும் உறையுளும் தரப்படுகின்றன. சமயச் சடங்குகள் நிமிஷம் பிசகாமல் நிகழ்கின்றன. கோயிலைத் தூசியின்றித் துடைத்து வைத்திருக்கிறார்கள். இரவில் வழிபாடு முடிந்த பிறகு வெள்ளிக் குடங்களில் கங்கை நீரைக் கொண்டு வந்து குருபீடத்தை மந்திர உச்சாடனத்தோடு சுத்தம் செய்யும் சிறப்பு ஒன்றே போதும். உழைப்பும், சிரத்தையும் பலன் தருவது உறுதி.

புதிய நகரம் தொடங்கும் பகுதியில் பெரிய தானியக் களஞ்சியம் ஒன்றிருக்கிறது. தேன் கூடு உருவத்தில் இதை அமைத்தவர் காப்டன் ஜான் காஸ்டின். உயரம் சுமார் நூறு அடி. அடி விட்டம் ஐம்பதடிக்குக் குறைவில்லை. சுவரின் பருமனே பத்தடிக்குக் குறைவில்லை. இது கட்டி முடிந்தது 1876ம் ஆண்டில். அந்த நாளிலேயே இங்கு நிலவியிருந்த உணவுப் பஞ்சத்தை ஒழிக்கும் பொருட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் இதைக் கட்டிற்று. இதன் மேல் ஏறி நின்றால் நகரத்தின் பல பகுதிகளையும் ''பறவைக் கண் ''ணால் பார்க்கலாம். கங்கையின் நீர்ப்பரப்பும் வடகரையை இணைக்கும் நீராவிப் படகுகள் உலாவும் இனிய காட்சிகளும் இந் நகரத்தின் தோற்றத்துக்கே ஒரு புனித மிக்க அழகைத் தந்துவிடுகின்றன.

ராஜன் பாபு கங்கையின் வடகரையில் பிறந்தவர். சோஷலிஸத் தீப்பொறியும் தற்போதைய சர்வோதயத் தலைவருமான ஜே.பி.யின் மாநிலம் இது. பிரசித்தி பெற்ற சம்பாரான் சத்தியாக்கிரகத்தை அண்ணல் இங்கு தொடங்கி வைத்தார். 1942ம் ஆண்டு தேசிய இயக்கத்தில் இந்த மாநிலம் பெரும் பங்கு கொண்டது. அதை நினைவுறுத்தப் பழைய அரசாங்கக் கட்டடத்தின் முன்பு தியாகிகளின் நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருக்கிறது. 1946ம் ஆண்டில் வங்கத்திலும் கல்கத்தாவிலும் நிகழ்ந்த வகுப்புக் கலவரத்துக்கு எதிரொலியாக பிஹார் மாநிலம் கொடி உயர்த்திற்று. அதை அடக்குமுறைகளினால் தடை செய்ய முடியாமற் போகவே காந்தியடிகள் தாமே இங்கு வந்தார். மக்களைச் சமநிலை பெறச் செய்து அறிவூட்டுவதற்காக நகரத்தின் பெரிய சதுக்கத்தில் தினமும் மாலையில் வழிபாட்டுக் கூட்டங்கள் நடத்தினார். அது இன்று காந்தி மைதானம் என்ற பெயரில் விளங்குகிறது.

நகரத்தின் பொருட்காட்சி சாலை சிறப்பு மிக்கது. பாடலிபுரத்துப் பழைய சின்னங்களும் புத்தரது படிமங்களும் உள்ளத்தைக் கவரும் தன்மை உடையவை. மகத நாட்டின் ஏற்றத்தையும் வீழ்ச்சியையும் ஒருசேர நினைவுக்குக் கொண்டு வரும் பொருள்கள் இங்கே உள்ளன.

பட்னா பெரிய வியாபார ஸ்தலம். காய்கறிகள் கொள்ளை மலிவு. காய்களை எண்ணிக் கொடுக்கிறார்கள். பத்து கத்தரிக்காய் ஐந்து காசு. அது ஒரு கிலோவுக்கும் அதிகமாக உள்ளது. வாழைக்காய் டஜன் ஐம்பது பைசா. கங்கைப்புறத்து மொந்தன்காய். அரிசிகூடக் கிலோ 1—40க்குக் கிடைக்கிறது. நதியின் நீர்வளம் இதற்குக் காரணமாக இருக்க வேண்டும். இருந்தாலும் இந்தியாவின் வறுமை மிக்க பஞ்சப் பிரதேசமும் கங்கை ஆற்றின் வடகரையில்தான் உள்ளது என்பது வியப்பான செய்தி அல்லவா?

நிலக்கடலையைச் சீனியா பதாம் (சீன நாட்டு வாதுமை) என்று அழைக்கும் வழக்கம் இங்கிருந்தே தொடங்கிவிடுகிறது. வங்கத்திலும் அஸ்ஸாமிலும் இதற்குப் பெயர் சீனியா பதாம் என்பதே. நிலக்கடலை விற்பவன் ஒரு சிட்டிகை உப்பையும் ஒரு பச்சை மிளகாயையும் உடன் தருகிறான். பட்னா மிளகாய்க்குப் பெயர் பெற்றது என்பதற்காகவா?

பஸ்ஸில் கட்டணம் ஒரே விகிதம். முப்பத்தைந்து காசு. எவ்வளவு தூரமானாலும் அதே தொகைதான். சைக்கிள் ரிக்ஷா, டெம்போ, ஆட்டோ ரிக்ஷா, டெல்லி நகரத்து ஃபட்ஃபட்டியா எல்லாம் இங்கு ஓடுகின்றன. ஆனால் குறுகலான குழி விழுந்த சாலைகள் பிரயாணிகளின் இடுப்பை ஒடித்து விடும். திறந்த சாக்கடைகளின் மேல் கடையைப் பரப்பி இனிப்புத் தின்பண்டங்களை விற்பதை இவர்கள் ஒரு வணிக அறமாக மேற்கொண்டுள்ளனர் போலும்!

பட்னா நகரத்து அழகின் உயிர்நாடி கங்கை. அதை நகரத்தின் ஆத்மா என்றே கூறலாம். அந்த உண்மையை நகரவாசிகள் உணர்ந்து கொண்டார்களானால் அவர்களுக்கும் நாட்டுக்கும் நல்லது.

—கி. சா. ராஜு

# சுதந்திரம் பெறும் முந்நூறு தீவுகள்

"கரும்புத் தோட்டத்திலே" என்று பாரதியார் பாடியது பிஜித் தீவுகளில் இந்தியத் தொழிலாளர்கள் படும் கஷ்டங்களைக் குறித்து வருந்தியே. ஒரு காலத்தில் இங்கு மனிதர்களையே மனிதர்கள் அடித்துக் கொன்று தின்னும் வழக்கம் இருந்தது.

சுமார் 300 தீவுகள் கொண்டது பிஜி. தீவுகளின் மொத்த விஸ்தீரணம் 7038 சதுர மைல்கள்தான். சுமார் 100 தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக்கிறார்கள்.

## நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு...

காட்டுமிராண்டிகளே இங்கு வசித்தனர். இவர்களை நல்ல மனிதர்களாக, நாகரிக மனிதர்களாக மாற்றிய பெருமை கிறிஸ்துவப் பாதிரிமார்களுக்கு உண்டு. பேட்டிஸன் என்ற பாதிரி கிறிஸ்துவின் அன்பு மதத்தைப் பரப்ப இங்கு சென்றார். மக்களுடன் பழகித் தொண்டு செய்யலானார். ஒரு நாள் ஒரு புதிய தீவுக்குச் சென்றார். தம் நண்பரைப் படகிலேயே இருக்கச் சொல்லி விட்டு இவர்மட்டும் கரையேறினார். அந்நியர் ஒருவரைக் கண்டதும் அபாயச் சங்குகள் அலறின. பலர் ஓடி வந்து அவரை அடித்துக் கொன்றுவிட்டார்கள். படகிலிருந்த நண்பர் தம் நண்பரின் உடலையாவது பெற்றுப் போகலாம் என்று கரைக்கு வந்தார். இவரைக் கைது செய்து தலைவர் முன் கொணர்ந்து நிறுத்தினார்கள். அத்தலைவன் பெரிய தவறு நேர்ந்து விட்டது என்று மன்னிப்புக் கேட்டான். "அவர் அடிபட்டு இறக்கும்போதும் எங்களுக்காகப் பிரார்த்திப்பதைக் கண்டதும்தான் எங்கள் தவறு தெரிந்தது" என்று கூறிப் பத்திரப்படுத்தி வைத்திருந்த உடலை அவரிடம் சேர்த்தான்.

## எண்பது ஆண்டுகளுக்கு முன்பு...

தீனபந்து ஆண்ட்ரூஸ் பிஜித் தீவுக்குச் சென்றிருந்தபோது நிலைமை முன்னேறியிருந்தது. ஆனால் காட்டுமிராண்டித்தனத்துக்குப் பதிலாக அடிமைகளைப்போல் இந்தியர்களைக் கொடுமைப்படுத்தி வேலை வாங்குவதைக் கண்டு ஆண்ட்ரூஸ் மிக வருந்தினார். இந்த ஒப்பந்தக் கூலி முறை நல்லதுதான் என்று எந்த அதிகாரியும் ஒப்புக் கொள்ளவில்லை. அப்படியிருந்தும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்த அடிமை வாழ்வு பிஜியில் நீடித்திருக்கிறது. காந்திஜியும் ஆண்ட்ரூஸும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சிகள் காரணமாக 1920ல் இந்தக் கொடிய ஒப்பந்தக் கூலி முறை ஒழிந்தது. கடலோரப் பிரதேசங்களைப் பண்படுத்திக் கரும்பு பயிரிடும் நிலமாகச் செய்த பெருமை இந்தியர்களையே சாரும்.

## இன்று...

1970ம் ஆண்டு அக்டோபர் 10ம் தேதி காலை 10 மணிக்கு சுதந்திர பிஜியின் கொடி ஏற்றி வைக்கப்படுகிறது. தீவுகள் ராணி விக்டோரியாவின் ஆட்சிக்கு வந்து 97 ஆண்டுகளாகின்றன. அன்று முதல் இதுவரை 'ஒப்படைத்த தினம்' என்கிற விழா ஆண்டுக்கு ஒரு முறை கொண்டாடப்பட்டு வந்தது. பிஜியை ராணி விக்டோரியாவிடம் ஒப்படைத்த சுதேச மன்னரின் பெயர் காகோபன் **(Ratu Seru Cakoban)** என்பது.

கமிஸே மாரா என்பவர்தாம் சுதந்திர பிஜியின் முதல் பிரதமராகப் பதவி ஏற்கிறார். இத்தீவில் இரு அரசியல் கட்சிகளே உள்ளன. இரண்டும் ஒருமனப்பட்டு வேலை செய்ததால் பிஜிக்கு இப்போது சுதந்திரம் கிடைத்திருக்கிறது. பிஜியின் தலைநகர் ஸுவா **(Suva)**. இங்குள்ள இந்திய வர்த்தக சபை நாடு சுதந்திரம் அடைவதை யொட்டித் தலைநகரில் ஒரு மணிக்கூண்டு கட்டத் திட்டமிட்டுள்ளது. பிஜி சுதந்திரமடையும் அக்டோபர் 10ந் தேதி 10 மணிக்கு எந்தக் குழந்தை பிறக்கிறதோ அதன் பெற்றோர்களுக்கு 51 டாலர்கள் பரிசளிக்கப்படும்.

நாடி என்கிற இடத்தில் ராமகிருஷ்ண மிஷன் ஸ்தாபனத்தினர் பள்ளி, ஆஸ்பத்திரி முதலியன நடத்தி அரும் சேவை செய்து வருகிறார்கள்.

— ரஜன்

17

## 66. அசோகவனத்தில் சீதை

அந்த வனத்து மதில் சுவரின் மேல் நின்றதும், ஹனுமானுடைய உள்ளத்திலும், சரீர அவயவங்கள் முற்றிலுமே ஒருவித ஆனந்த உணர்ச்சி ஊடுருவிப் பாய்ந்தது. சீதை இருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்து விட்டபடியால் தன்னையும் அறியாமல் இந்த மகிழ்ச்சி உற்பவமாயிற்று.

வசந்த காலத்துத் தொடக்கத்தில் மலரும் புஷ்பங்கள் எல்லாம் பூத்து மரங்களும் கொடிகளும் மிக ரம்மியமான காட்சி தந்தன. அடர்த்தியாக மரங்கள் இருந்த ஓர் இடத்தைப் பார்த்து அங்கே ஹனுமான் தாவிச் சென்றான். அந்த அதிர்ச்சியினால் எழுப்பப்பட்ட குயில்களும் மயில்களும் மதுரமாகச் சப்தித்தன. மான்களும் வேறு மிருகங்களும் நடமாடிக் கொண்டிருந்தன. மரங்களிலிருந்து மலர்கள் உதிர்ந்து ஹனுமானுடைய உடல் முழுதும் போர்த்து அவன் உருவம் புஷ்ப மயமாகக் காணப்பட்டது. நந்தவனத்திலிருந்த பிராணிகள் மலர் மயமான ஹனுமானுடைய அழகிய சிறு குரங்கு உருவத்தைப் பார்த்து வசந்த தேவதையே வனத்துக்கு அதிகாலையில் வந்து விட்டது என்று எண்ணின.

அந்தத் தோட்டத்தின் ரமணீயம் யார் மனத்தையும் கவரத் தக்கதாக இருந்தது. அழகிய வாவிகள், தங்கம், வெள்ளி, தந்தம், முத்து, பவழம் இவற்றால் அலங்கரிக்கப்பட்ட தளங்கள், படிகத் தள வரிசைகள், செய்குன்றுகள், ஆறுகள், பூங்கொடிகள், அருவிகள், அவற்றில் விளையாடிக் கொண்டிருந்த அழகிய பறவைகள் — இந்தக் காட்சி ஹனுமானுடைய உள்ளத்தில் ஆனந்தம் உண்டாக்கிற்று. சில மரங்களைச் சுற்றி அழகிய தங்க மேடைகளும் வெள்ளி மேடைகளும் கட்டப்பட்டிருந்தன. மரங்களில் கட்டித் தொங்கிய சிறு மணிகள் காற்றால் அசைக்கப்பட்டு மெதுவாகத் தொனித்துக் கொண்டிருந்தன. தங்க மேடையால் அலங்கரிக்கப்பட்டு உயர்ந்து பரவி நின்ற ஒரு மரத்தின் மேல் ஏறி இலை மறைவில் ஹனுமான் உட்கார்ந்தான்.

"உயிரோடிருப்பாளானால் சீதை நிச்சயம் இந்த அழகிய நந்தவனத்துக்கு வருவாள். ராமனைத் தனியாக இருந்து தியானிக்க இந்த ரமணீயமான இடத்தையே அவள் விரும்புவாள். மரங்களும் கொடிகளும் நிறைந்த வனத்தில் நடமாடுவதில் ஜானகிக்கு மிகப் பிரியம் என்று சொன்னார்கள் அல்லவா? காலைச் சந்தியா காலத்தில் தேவியை உபாசித்துப் பிரார்த்தனை செலுத்த இங்கே நிச்சயமாக வருவாள்."

இவ்வாறு யோசித்துக் கொண்டும், சுற்றிப் பார்த்துக் கொண்டும் இலைகளின் மறைவில் அந்த மரத்தின் மேல் ஹனுமான் உட்கார்ந்து கீழே பார்த்தான். கண்ணைக் கூசும்படி பிரகாசித்துக் கொண்டிருந்த அழகான, நிர்மலமான அந்த மரத்தடி மேடையின் பேரில் ஒரு மானுட ஸ்திரீ இருப்பதைக் கண்டான்.

கசங்கிப் போய்த் தூசி தங்கிய ஒரு மஞ்சள் வஸ்திரம் உடுத்தியிருந்த அந்த ஸ்திரீயின் முகத்தில் புகையால் மூடிய சுடரைப் போல் அழகும் துக்கமும் கலந்து நின்றதைக் கண்டான். அடிக்கடி பெருமூச்செறிந்து உபவாசத்தால் நலிந்து, முதல் நாள் பாலசந்திரனைப் போல் கண்டும் காணாமலுமாக இருந்தாள். அவளைச் சுற்றிச் சில அரக்கிகள் உட்கார்ந்திருந்தார்கள். பெரும் துக்கத்தால் பீடிக்கப்பட்ட அந்தப் பெண்ணுருவத்தைக் கண்டதும் இவளே சீதை என்று ஹனுமான் நிச்சயித்தான்.

தெய்விக காந்தி வீசிய முகத்தில் தீராத துயரத்தைக் கண்டான். கொடிய அரக்கிகளால் சூழப்பட்டு வேட்டையாடப்பட்டுத் தன் கூட்டத்திலிருந்து

பிரிந்து போய், பயந்து நாலா பக்கமும் விழித்துத் தவிக்கும் ஒரு மானைப் போல் காணப்பட்டாள். கறுத்த நீண்ட தலைமயிர் பின்னப்படாமல் தொங்கிற்று. துக்கம் என்பதே அறியாத ஒருத்தி பெருந் துயரத்தில் சிக்கிப் போய் இன்னது செய்வது என்று தெரியாமல் அலைந்தவளாகக் காணப்பட்டாள். துக்கத்தாலும் உணர்வின்றியும் இளைத்துப் போய், அழுக்குப் படிந்த ஆடை உடுத்தி ராக்ஷஸிகளுக்கிடையில் உட்கார்ந்திருக்கும் இந்த அழகி, சீதையே என்று ஹனுமான் நிச்சயித்து விட்டான்.

ஆபரணங்கள் அணிய வேண்டிய அழகிய தேகமாக இருந்தது. ஆனால்

ஆபரணமின்றியிருந்தது. மேகம் மூடிய சந்திரனைப் போலிருந்தது அவள் முகம். பார்க்கப் பார்க்க அந்தத் தங்க மேடையின் மேல் ஆபரணங்களின்றிக் கவலையும் பயமும் நிரம்பிய முகத்தோடு உட்கார்ந்திருந்த அந்த ஸ்திரீயின் தோற்றம், மெய்ப்பாடுகள் எல்லாம் கவனித்து அவளே சீதை என்பதாக உறுதி கொண்டான்.

ராமனுக்காகப் பூமண்டலம் முழுதும் வானரர்களால் தேடப்பட்ட சீதையைக் கண்டுவிட்ட மகிழ்ச்சி பெரிதாயினும், கண்ட உருவத்தின் கடல் போன்ற துயரமானது அந்த மகிழ்ச்சியைக் கரைத்து இல்லாமல் செய்து விட்டது.

பார்க்கப் பார்க்க ஹனுமானுடைய கண்களுக்கு அந்த ஸ்திரீயின் தெய்விகத் தோற்றத்தின் அழகும் தேஜஸும் வளர்ந்தன. ''ராமனுடைய பெருந் துக்கத்தின் காரணத்தை இப்போது கண்டேன். இவளை இழந்த எவன் தான் துயரப்பட மாட்டான்? ராமன் தன் உயிரை வைத்திருப்பதே அற்புதம். எத்தகைய தேவி! எத்தகைய புருஷன்!'' என்று எண்ணி எண்ணி ஹனுமானுடைய உள்ளம் அந்தச் சமயம் சமுத்திரத்துக்கு வடக்கே யிருந்த ராமனிடம் சென்றது.

அப்போது நீல வானத்தில் நிர்மலமான நீர் நிறைந்த ஏரியில் அழகிய அன்னம் மெதுவாகச் செல்வதைப் போல் சந்திரன் வாயுபுத்திரனுக்கு உதவி செய்வதற்காகவே வந்ததுபோல், உயரக் கிளம்பிப் பிரகாசித்தான்.

ஹனுமான் இலைகளிடையில் மறைந்து பார்த்துக் கொண்டும், இன்னது செய்வது என்று யோசித்துக் கொண்டும், கடல் மத்தியில் ஒரு பெருங் காற்றடித்து ஆடி அலையும் ஒரு பாரம் ஏற்றிய கப்பலைப் போல் கவலைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த சீதையின் முகத்தை நன்றாகப் பார்த்தான். சுற்றிக் காவலிருந்த ராக்ஷஸிகளின் வடிவங்களோ பார்த்துப் பொறுக்க முடியாத கோர அவலக்ஷண வடிவங்கள். ஒருத்திக்கு ஒரே கண். ஒருத்திக்கு ஒரே காது. சிலருக்குக் காதுகளே கிடையாது. சிலருக்கு மூக்கு இல்லை. சிலருக்கு மூக்கு ஊர்த்துவம் நோக்கி நின்றது. சிலருக்குத் தலையில் மயிரே கிடையாது. சிலருக்கோ விபரீதமான ஜடை. சிலருக்குக் கீழே தொங்கும் பெரிய வயிறு, சிலருக்கு ஒட்டகம் போன்ற உதடுகள். சிலர் கூனிகள். சிலர் குள்ளமானவர்கள். சிலர் பனைமரம் போல் நீண்டு உயர்ந்து வளர்ந்தவர்கள். சிலருக்குப் பன்றி முகம். சிலருக்குப் புலி முகம். சிலருக்கு எருமை முகம். சிலருக்கு நரி முகம். சிலருக்கு ஆட்டு முகம். இப்படி இன்னும் பல பயங்கர அவலக்ஷண சொரூபங்களாகச் சூலங்கள் முதலிய ஆயுதங்களோடு அரக்கிகள் இருக்க, அவர்களுக்கு இடையில் தன் சீலம் ஒன்றுலேயே ரக்ஷிக்கப்பட்டவளாகத் தரையில் ஆதரவற்றுப் படர்ந்து கிடக்கும் பூங்கொடி போல் ஜானகி வாடிய முகத்தோடு நடுங்கிக் கொண்டிருந்தாள்.

இப்படிக் காட்சி தந்த சீதாதேவியைப் பார்த்து, 'காணுமற் போனவளைக் கண்டு விட்டேன்' என்று ஹனுமான் மகிழ்ச்சியடைந்தான். கூடவே, அவள் நிலையைப் பார்த்துத் துக்கப்பட்டான். அவளுக்காக வெகுதூரத்தில் அலைந்து துயரப்பட்டுக் கொண்டிருக்கும் ராம லக்ஷ்மணர்களை நினைத்தான். அவர்களைத் தியானித்து நமஸ்கரித்தான்.

* * *

அச்சமயம் இன்னும் இருள் தீர்ந்து நன்றாக விடியவில்லை. வேத கோஷங்களாலும் இனிய சுப்பிரபாத கீதங்களாலும் ராவணன் படுக்கையிலிருந்து எழுப்பப்பட்டான். எழுந்தவுடன் சீதையை நினைத்துக் கொண்டு அவளை வைத்திருந்த நந்தவனத்துக்குக் கிளம்பினான்.

பரிவாரம் சூழ அந்தப்புரத்து நந்தவனத்துக்கு வந்தான். வாசனை வீசும் தீபங்களும், சாமரங்களும், குடையும் பிடித்துச் சென்ற பெண்கள் கூட்டத்துக்கிடையில் தானும் ஆபரணங்கள் பூண்டு பரிசுத்தமான வெள்ளை உத்தரீயம் ஒன்று தரித்துக் கண்ணை கவரும் இரண்டாவது மன்மதனைப் போல் ராவணன் வந்தான். வாயிலண்டை வந்த பரிவாரத்தின் கோஷமும், கூட்டமாக வந்த பெண்களின் பாதநூபுர ஓசையும் மாருதியின் காதில் விழுந்தன.

கொஞ்ச நேரத்தில் ராக்ஷச மன்னன் வருவதைக் கண்டான். உடனே ஹனுமான் அடர்ந்த இலைகளுக்குள்ளே முன்னைவிட நன்றாக மறைந்து கொண்டான். ராவணன் சீதை இருக்குமிடம் வந்தான். ராவணனுடைய பலமும் பராக்கிரமமும் வீரியமும் தேஜஸும் அற்புதக் காட்சியாக இருந்தன. அவன் வருவதைக் கண்டவுடனே சீதையின் தேகம் சுருங்கிப் போய் விட்டது. பெருங்காற்றில் வாழை மரம் நடுங்குவது போல் நடுங்கினாள். (தொடரும்)

# தவளைக்குள் வாழும் பாம்புகள்

பக்கத்து வீட்டிலே ஒரு பாம்பு வந்தது என்றால் பத்து நாட்களுக்கு நம்மால் தூங்க முடிவதில்லை. ஆனால் தம் வீட்டிலேயே நான்கு நல்ல பாம்புகள், எட்டு அடி நீள முள்ள மலைப் பாம்பு இன்னும் சில விஷமில் லாத பாம்புக் குட்டிகள் இவற்றுக்கெல்லாம் இடமும் உணவும் கொடுத்து ஆசையோடு வளர்த்து வருகிறார், திரு ஹாரி மில்லர். தெருவில் வரும் பாம்பாட்டிகளிடம் உள்ள பல் பிடுங்கப்பெற்ற நோஞ்சான்கள் அல்ல இவை. ஒவ்வொரு நாளும் இந்தடி னம். எலிகளையும் தவளைகளையும் உண்டு கொழுத்து வஞ்சனையின்றி வளர்ந்திருக்கின் றன! ஆவடிக்கருகில் உள்ள திருமுல்லைவாயில் கிராமத்தில் மரங்களடர்ந்த தோட்டத்தின் நடுவே இருக்குமிடம் தெரியாமல் ஒளிந்திருக் கும் அவரது வீட்டின் பெயர் 'தவளைகள்' (The Frogs). வீட்டின் முன்புறம் ஒரு குட்டை. தவளைகளின் வாசஸ்தலம் போலும்!

செல்லமாக வீட்டில் வளர்க்க இந்தக் கொடிய விஷ ஜந்துக்கள்தானா அகப்பட்டன மில்லருக்கு? பாம்புக்குப் பால் வார்த்தால்..?

மில்லர் கூறுகிறார்: "இந்தியாவில் உள்ள பல்வேறு பாம்பு வகைகளில் மூன்று வகை விரியன்களும் நல்ல பாம்பும்தான் விஷம் உள்ளவை. நல்ல பாம்பு யாரையும் துரத்திக் கொண்டு போய்க் கடிப்பதில்லை. அதனை நாம் துன்புறுத்தினால்தான் கடிக்கும். 'நல்ல' பாம்பு என்று அதற்குச் சும்மாவா பெயர் வைத்தார்கள்? பாம்பு கடித்த பலர் 'டெடா னஸ்' காரணமாகத்தான் இறக்கிறார்கள். விஷம் உள்ளிறங்கி இறப்பவர்கள் ஒரு சத விகிதத்துக்கு மேல் இராது!"

மில்லரின் உதவியாளர் குமார் எட்டடி நீள முள்ள ஒரு மலைப் பாம்பைச் சுமக்க முடியா மல் சுமந்து வருகிறார். "ஹேய், பிக்கிள்ஸ்!" என்று செல்லமாக அழைத்து அதன் கழுத்தை லாகவமாகப் பிடிக்கிறார், மில்லர். 'ஊறு காய்!' — நல்ல பெயர்தான்!

"இதற்குப் பல் இல்லையா?" என்று நான் கேட்டதும், "ஏன் இல்லை?" என்று திரும்பக் கேட்டுவிட்டு, ஒரு சிறு குச்சியின் உதவியால் அதன் வாயைப் பிளந்து காட்டுகிறார். ரம்பம் போன்று சிறு சிறு பற்கள் தெரிகின்றன.

"இது கடிக்கும். ஆனால் விஷமில்லை. பெரிய பிராணிகளைக் கூட இது சிறிது சிறிதாக விழுங்கிவிடும். இதன் வாயின் கீழ்ப்புறம் அதற்கு உகந்தவாறு அமைந்துள்ளது. எவ் வளவு கனம் தெரியுமா? தூக்கிப் பாருங்கள்!" என்று அதன் கழுத்தைப் பற்றிக்கொண்டு உடலைத் தேர் வடம் போல் சுற்றி என்னிடம் நீட்டுகிறார், மில்லர். நடுங்கும் கைகளால் அதனைத் தூக்கிப் பிடிக்கிறேன். கயிறு இழுக் கும் போட்டிக்கு உபயோகிப்பார்களே அந்த வடத்தை விடப் பருமனும் அதிகம்; கனமும் அதிகம்! இவை நன்றாக நீந்துமாம். மரம் ஏறவும் தெரியுமாம்.

நாங்கள் தோட்டத்தின் மறுபுறம் செல் லும்போது எங்களை நோக்கி ஓடி வருகிறது ஒரு கீரி. 'ப்ளாப்!' என்று அன்போடு செல்லப் பெயர் சொல்லி அழைத்து அதனைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொள்கிறார் மில்லர். அவரது தோளின் மீது அது சொகு சாகச் சாய்ந்து கொள்ளுகிறது.

"அது சரி. பாம்பும் கீரியும் பகைவர்க ளாயிற்றே? இரண்டையுமே நீங்கள் வளர்த்து வருகிறீர்களே...?"

"மக்கள் அப்படி நினைக்கிறார்கள். ஆனால் நல்ல பாம்பைக் கீரியால் எளிதில் கொன்று விட முடியாது. நீண்ட நேரம் சண்டையிட்ட பிறகுதான் கீரி வெற்றி பெறும். எளிதில் கிடைக்கக் கூடிய பல்லி, வெட்டுக் கிளி, எலி முதலிய சிறு பிராணிகள் இருக்கும்பொழுது அதை விட்டு விட்டுப் பாம்பைத் தேடிக் கொண்டு போய்ச் சண்டை போட வேண்டிய அவசியம் என்ன வந்தது கீரிக்கு?" என்று அவர் திருப்பிக் கேட்கிறார். நியாயமாகத் தான் தோன்றுகிறது. அவரைப் பின் தொடர்ந்து சென்று ஒரு பெரிய கம்பி வேலிக் கூண்டை அடைந்ததும் உள்ளே ஒரு மரக் கிளையில் கொய்யாப் பழத்தைக் கடித்துக் கொண்டிருக்கும் இரு பெரிய மலபார் அணில் களைக் காண்கிறேன். (படத்தில் இவற்றில் ஒன்று குளிப்பாட்டப்படுகிறது!) மில்லர் கூண்டுக்குள் நுழைந்து ஒரு பிஸ்கோத்துத் துண்டை வாயில் ஊட்டிவிட்டு அவற்றைத் தடவிக் கொடுக்கிறார்.

"ஐந்து வருடங்களுக்கு முன்பு விலங்கு களைப் பற்றி நான் எழுதிய கட்டுரைகளில் ஒன்றைப் படித்துவிட்டுக் கேரள அன்பர் ஒருவர் இந்த மலபார் அணில்களை அன் பளிப்பாக அனுப்பி வைத்தார். இவை சாக பட்சிணிகள். பெரும்பாலும் பழங்கள்தாம் இவற்றின் உணவு. புதிய மனிதர்கள் நெருங் கினால் கடித்துவிடும்" என்று கூறுகிறார்.

ஒரு சமயம் பூமியைச் சமதளமாகச் செப்ப னிடுகையில் ஓர் அம்பெலட்டான் சிமெண்ட் வீட்டின் கீழ் 49 நல்ல பாம்பு முட்டைகள் இருப்பதைக் கண்டாராம், திரு ஹாரி மில்லர். 'இது ஓர் உலக ரிகார்ட்' என்று பிரிட்டிஷ் மியூஸியம் அதிகாரி ஊர்ஜிதம் செய்து எழுதினாராம். பேட்டி: 'பாணன்'

சிதம்பர ரகசியம்
கதை:
சித்திரம்:
ராஜு
12
இப்போ என்ன செய்யறதா உத்தேசம்?

ரங்கதுரை!
தொடரும்

# கொஞ்சுமிளம் தென்றலோ, குலவ வரும் மல்லிகையோ!

கம கமக்கும் மல்லிகை மணம். இளமை கொழிக்கும் மேனியெழில். இரண்டையும் உங்களுக்கு வழங்கவே ஜேய் அழகு சோப். வில்லை கரைந்தாலும் சுகந்தம் குறையாத அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. உங்கள் பைந்தளிர் மேனி என்றும் பதினாறுகப் புதுமையுடன் பொலிய உபயோகியுங்கள் ஜேய்—ஜிகினத் தாளுறை தரித்த ஒரே அழகு சோப்!

**உங்கள் புத்தெழில் பெருக ஜேய் அழகு சோப் மணங்கவர் மல்லிகை மணம் கமழ்வது.**

**டாடா** தயாரிப்பு.

## 48

ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார்:

''நான் அநேக இடங்களில் பார்த்திருக்கிறேன்; இன்னும் அநேகம் பேர்— ஆண்களும் பெண்களும் — மரப் பாவைகளையும், கல்சிலைகளையும், மரத்தையும், செடியையும் பூஜை செய்து வருகிறார்கள். உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த படித்த பெண்மணிகளும்கூட இத்தகைய மூடவழக்கத்தை விடவில்லை. அவர்களில் சிலர் வாதம் செய்வது என்னவென்றால், இயற்கை உலகத்திலுள்ள தெய்வீக அம்சத்தைப் பக்தியோடு பூஜை செய்கிறோம். இதில் என்ன தவறு என்கிறார்கள். இது சாவித்திரி பூஜை என்கிறார்கள். இந்த வாதமெல்லாம் எனக்குச் சரி என்று தோன்றவில்லை. இதைப் பற்றித் தாங்கள் விளக்கம் கொடுக்க வேண்டும்.''

இந்தக் கடிதத்தில் உள்ள கேள்வியை நான் வரவேற்கிறேன். மூர்த்தி பூஜை தவறு என்று எண்ணி இவ்வாறு எழுதியிருக்கிறார். மூர்த்தி பூஜையை நான் ஆதரிப்பவன். ஆனால் ஒருவிதத்தில் எதிர்க்கவும் செய்கிறேன். மூர்த்தி பூஜையானது சுத்த மூட நம்பிக்கையாகிவிட்டால் அதை எதிர்க்க வேண்டியது அவசியமாகிறது. பொய்யும் அறியாமையும் கலந்த மூர்த்தி பூஜையை எதிர்க்கத்தான் வேண்டும். ஆயினும் பக்தி செலுத்துவதற்கு ஏதேனும் ஒரு லிங்கம் இன்றியமையாதது. இது மனிதனுக்கு இயற்கையான குறைபாடு. பக்தி செலுத்துவதற்கு மூர்த்தி பூஜை மிகவும் பயன்படுகிறது. புனித நூல் என்று நாம் கருதும் ஒரு கிரந்தத்தை வைத்து வணங்கினாலும் அதுவும் மூர்த்தி பூஜையேயாகும். அதில் தவறில்லை. ஒரு கோவிலுக்கோ, மசூதிக்கோ பக்தியோடு சென்றோமானாலும், ஒரு தீர்த்த யாத்திரை செய்தாலும் அதுவும் மூர்த்தி பூஜையேதான். அதில் ஒரு தவறுமில்லை. ஆண்டவனை வழிபடுவதற்கு ஏதேனும் ஒரு சின்னம் வைத்துக்கொள்வது அவசியமாகிறது.

மரத்துக்குப் பூஜை செய்வதில் நான் ஒரு குற்றமும் காணவில்லை. அது மிகவும் அழகான பூஜை முறையாகும். மரங்கள் தங்கள் இலைகளாகிய பல்லாயிரம் நாக்குகளையும் கொண்டு ஈசனுடைய புகழைப் பாடுகின்றன. மரங்களை விட வேறு எந்த அழகிய பொருளை நாம் காண முடியும்? வன பதி உலகம் இல்லையாயின் மனிதன் பூமியில் எப்படி வாழ முடியும்? உயிருக்கு ஆதாரமல்லவோ தாவரம்? தாவர வர்க்கம் சரியாகப் பாதுகாக்கப்படாமலும், மரங்கள் அழிந்துபோயும் வருகின்ற நம்முடைய நாட்டில் மரங்களைப் பூஜை செய்யும் வழக்கம் மிக நல்ல வழக்கம் என்றே சொல்லுவேன். மரத்தை வலம் செய்து பக்தி செலுத்தும் பாமர ஸ்திரீகள் அந்தப் பூஜையின் தத்துவத்தை அறியாமல் இருக்கலாம். எடுத்துச் சொல்லவும் அவர்களால் முடியாது. ஆயினும் அவர்களுடைய பக்தியைப் பற்றி ஒரு குறைவுமில்லை. அவர்களுடைய உள்ளத்தின் சுத்தம் அவர்களைக் காக்கும். அவர்களுடைய பக்தி பெருஞ் செல்வமாகும். அதைப் போற்றுவது நமது கடமை.

இது என்னுடைய கொள்கையாயினும் இது வேண்டும், அது வேண்டும் என்று வேண்டுதலை செய்து கொள்ளும் முறையை நான் அங்கீகரிக்க மாட்டேன். வேண்டுதல் செய்து கொண்டு சுயநல ஆசையோடு மரத்தைப் பூஜை செய்தாலும் சரி, கோவில் — மசூதி — தீர்த்தங்களுக்குச் சென்றாலும் சரி, எந்தப் பூஜையும் குற்றமேதான். சுயநல ஆசைகளோடு செய்யும் பூஜை பயனற்றது. மூர்த்தி பூஜையாயினும் மூர்த்தி யில்லாத பூஜையாயினும் இந்தக் குற்றம் வழிபாட்டைப் பழுதுபடுத்தும். ஒரு விக்கிரகத்தின் முன் நின்றோ, விக்கிரகமில்லாமல், மசூதியிலோ வேறு ஆலயத்திலோ சுயநலக் கோரிக்கைகள் சொல்லி வரம் கேட்பது தவறு.

இதையெல்லாம் நான் சொல்லி மரங்களை வழிபடும் வழக்கத்தை ஆதரித்த போதிலும், எல்லாரும் மரங்களைப் பூஜை செய்யும் வழக்கத்தைக் கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. பக்தியோடு தாவரத்தின் முன் வணங்கிப் பூஜை செய்பவர்களை நான் குற்றம் சொல்ல மாட்டேன் என்பதே என் கருத்து. ஆண்டவனுடைய வடிவத்தை எண்ணற்ற பொருள்களில் காணலாம். அவனைத் தியானித்து நாம் எதையும் வணங்கலாம் என்பது என் கொள்கை.

(யங் இந்தியா, 26-9-29)

# வலியைப்
# போக்கிடும்
# 'ஆஸ்ப்ரோ'

'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன் செய்யப்படுகிறது
<u>அதிவேகமாக</u> வலியை வெளியே இழுப்பதற்காக

நிகோலஸ் (N) தயாரிப்பு

A.G.45.TM

# இரு கோணங்கள்

சமீபத்தில் நடந்த பாங்கு ஊழியர்களின் பகுதி நேர வேலை நிறுத்தத்தினால் சில நாட்கள் வியாபார உலகம் ஓரளவு ஸ்தம்பித்தும் போயிருந்தது. பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரான சிறு தொழில் நிறுவன சொந்தக்காரர், திரு ராஜகோபால், அகில இந்திய பாங்கி ஊழியர் சங்கத்தின் உதவிக் காரியதரிசி திரு சம்பத்தைச் சந்தித்தார். அவர்களிடையே நடந்த சம்பாஷணை சூடாகவும் சுவையாகவும் இருந்தது!

"வணக்கம்!... நீங்கதானே மிஸ்டர் சம்பத்! அகில இந்திய பாங்கி ஊழியர்கள் சங்கத்தின்..."

"வணக்கம்! வாங்க... ஆமாம்! அகில இந்திய பாங்கிச் சங்கத்தின் உதவிக் காரியதரிசி. தமிழ் நாட்டுக் கிளையின் காரியதரிசி. நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா? ரொம்பக் கோபத்தோட வந்திருக்காப்போலே இருக்கு!"

"ஆமாம். கோபந்தான். என் பேரு எஸ். ராஜகோபாலன். அடையாறிலே காந்தராஜ் இஞ்சினீயரிங் கார்ப்பரேஷன்னு ஒரு சிறு தொழிற்சாலே நடத்திக் கொண்டிருக்கிறேன். உங்கள் ஊழியர்களின் சமீபத்திய வேலைநிறுத்தம் எங்களைப் போன்றவர்களையெல்லாம் எவ்வளவு பாதித்திருக்கும் என்று கொஞ்சமாவது யோசித்துப் பார்த்திருப்பீங்களா? உங்க தொழிலுக்கு இந்த ஸ்டிரைக் எல்லாம் அவசியம்தானா?"

"உங்க கோபத்தோட காரணம் புரிகிறது! உட்காருங்க, பேசலாம்! முதலாவதாக நாங்க வேலை நிறுத்தம் செய்தோம் என்று நீங்க நினைத்துக் கொண்டிருப்பதே சரியில்லே. நாங்க பெரும்பாலான நேரத்திற்கு வேலே செய்து கொண்டுதானிருந்தோம். தினசரி ஒரு மணி நேரம், ஒன்னரை மணி நேரம் அடையாள வேலைநிறுத்தம் செய்தோம். அவ்வளவேதான்!"

"என்ன சார் கதை விடறீங்க? காருக்குப் பெட்ரோல் போட்டுக் கொண்டு வழக்கம் போல் என் நண்பர் செக் கொடுத்தார். பெட்ரோல் பங்க் காரர் செக்கை வாங்க மறுத்துப் பணமாகக் கேட்டார். பாங்கு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தினால் செக்குகள் 'கிளியர்' ஆவதில்லை என்று பங்குக்காரர் சொன்னார். ஏன்? நானே என் நிர்வாகத்தில் உள்ள சிப்பந்திகளுக்குச் செக்கை வைத்துக் கொண்டு, மாற்றிப் பணம் கொடுக்க முடியாமல் திணறினேன். 'கையிலே பணமில்லாமல் பாங்கி மீது பழி போடறு'ன்னு அவங்க சொன்னது எல்லாம் என் காதிலே விழத்தான் செய்தது. இதெல்லாம் உங்களால்தானே? நீங்க கலாட்டாச் செய்யாமல் இருந்திருந்தா, இந்த செக்குகள் கிளியரன்ஸ் ஒழுங்கா நடந்திருக்குமில்லே?"

"நீங்க கலாட்டான்னு சொல்றதை நாங்க உரிமைக் குரல் என்று சொல்கிறோம். இந்தக் கிளியரன்ஸ் குழப்பத்துக்கு உரிமைக் குரல் எழுப்பிய ஊழியர்கள் காரணமில்லே என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த செக்குகள் கிளியரன்ஸ் விவகாரம் பாங்கு நிர்வாக சங்கம், அதாவது இந்தியன் பாங்கர்ஸ் அசோசியேஷன் மேல் பார்வையில் இயங்குவது. நாங்கள் வேலே செய்த நேரத்தில் செக்குகளை ஏற்றுக் கொள்ளவே செய்தோம்! ஆனால் பாங்கர்ஸ் அசோசியேஷன், 'கிளியரன்ஸ் ஹவுஸ்' வேலை செய்வதைத் திட்டமிட்டு நிறுத்தி விட்டது. பொதுமக்களுக்கு இந்த நுணுக்கங்கள் புரியாது. ஆகவே அவர்கள் எங்கள் செய்கையால்தான் செக்குகள் பணமாக மாறுவது தடைப்பட்டு விட்டது என்று நினைத்து விட்டார்கள். இந்த எண்ணம் ஏற்பட வேண்டும் என்பதுதான் பாங்கர்ஸ் அசோசியேஷன் விருப்பம். நான் பணியாற்றும் பாங்கிக் காரியாலயத்தில்மாத்திரமே நிலைமை சரியானதற்கு மறுநாள் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் பெறுமானத்துக்குச் சேர்ந்திருந்த செக்குகளை கிளியரன்ஸ் ஹவுஸிற்கு அனுப்பினேம். இப்போது என்ன சொல்கிறீர்கள்?"

"அது சரி மிஸ்டர் சம்பத்! பாங்கி ஊழியர்களுக்குத்தான் ஏகப்பட்ட சம்பளம் தருகிறார்கள் என்று கேள்விப்படுகிறோமே! இன்னும் சம்பளம் அதிகம் வேண்டும் என்கிற கோரிக்கையில் நியாயம் இருக்கிறது என்று நம்புகிறீர்களா?"

"எங்கள் இந்தச் சமீபத்திய போராட்டம் நீங்கள் நினைப்பது போல் சம்பள உயர்வுக்காக இல்லே. அகில இந்திய பாங்கு — அதாவது தேசிய மயமாக்கப்பட்ட-நிர்வாகத்தினருடன் நடந்து கொண்டிருந்த பேச்சு வார்த்தைகளில் தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் அடையாள வேலைநிறுத்தம் செய்தோம். பாங்குகளை ஏ., பி, ஸி என்று மூன்று வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். பாங்கிகள் இயங்கும் ஊர்களும் ஜனத் தொகைக் கேற்பப் பல பிரிவுகளின் கீழ் வருகின்றன. இந்தப் பிரிவுகளுக்கு ஏற்ப ஊழியர்களின் சம்பள விகிதம், படி அளவுகள் முதலியவை மாறுகின்றன. ஆனால் எந்தப் பிரிவு பாங்கியிலும், எந்த ஊரிலும், எங்கள் வேலையின் தரம் ஒரே மாதிரிதான். இந்தப் பிரிவுகளினால் விளையும் சில 'அனுமலீஸ்'

## கோழைக்கு விருந்து

ஸ்பானிஷ் படையில் வீராதி வீரன், தலைவன் ஸிட் இருந்தான். அவன் படையில் அஸ்திரியஸ் கோமகன் மார்ட்டின் உடல் வலிமை பெற்றிருந்தாலும் மனத்தில் கோழையாக இருந்தான். மார்ட்டினின் கோழைத்தனத்தை எப்படியாவது நீக்க முடிவு செய்தான் தலைவன் ஸிட்.

தலைவன் ஸிட்டும் அவனது படை வீரர்களும் வலன்சியா நகரத்தின் மீது படையெடுத்துச் சென்றபோது மார்ட்டின் தன் தங்குமிடத்துக்குச் சென்று பதுங்கிக் கொண்டான்.

தலைவன் ஸிட் மார்ட்டினிடம் வந்து "நீ வீர சாகஸங்கள் புரிந்தாய். உன்னைக் கௌரவிக்கிறேன். என்னுடன் அமர்ந்து சாப்பிடலாம், வா'' என்று இழுத்துச் சென்றான்.

அடுத்த நாள் வலன்சியா நகரின் மீது படையெடுத்தபோது ஸிட் தனக்குக் கொடுத்த கௌரவம் நினைவு வந்து மார்ட்டினுக்கு மன வலிமை கொடுத்தது. போரில் முன்னணியில் சென்றான். ஆனால் அத்தனை வீரர்களுக்கு மத்தியில் இருந்தபோதும் கோழைத்தனம் தலைதூக்கி அவனது இருப்பிடத்துக்கு விரட்டியது.

அவனது செயல்களை உற்று நோக்கிய தலைவன் ஸிட், அவன் உணவருந்த வந்தபோது "இந்தா! இன்று ஒரே தட்டில் என்னுடன் உணவைப் பகிர்ந்து கொள்! நேற்றைய விட இன்று நீ செய்த வீரச் செயலுக்கு இந்தக் கௌரவம் உனக்குத் தேவை!'' என்றான்.

தனது கோழைத்தனம் தலைவனுக்குப் புரிந்து விட்டதைக் கண்ட மார்ட்டின் வெட்கினான். அடுத்த நாள் போரில் அவனே அறியாமலே தன் கோழைத்தனத்தை விட்டுப் போரிட்டான். அன்று உணவருந்தச் சென்றபோது தலைவன் ஸிட், "நண்பனே! இனிமேல் என் பக்கம் அமர வேண்டாம். மற்ற வீரர் சிங்கங்களுடன் தோழனாக அமர லாயக்குள்ளவனாக உன்னை இன்றைய உனது வீரச் செயல்கள் ஆக்கி விட்டன!'' என்றான்.

— பி. எஸ். எம்.

---

அதாவது விசித்திர வித்தியாசங்களைப் போக்க வேண்டும் என்றுதான் நாங்கள், பேச்சு வார்த்தை தொடங்கினோம். ஆரம்பத்தில் நிர்வாகம் இந்தப் பிரச்னையைத் தீர்க்க ஒப்புக் கொண்டது. பிறகு இந்தப் பேச்சு வார்த்தைகள் நடக்காதது போல அறிக்கை விட்டது. அதனால்தான் நாங்கள் இந்த அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட வேண்டியிருந்தது.''

''சில பாங்குக் கிளைகளிலே இந்தச் சமயத்தில் செக்குகளை வாங்கி வைத்துக்கொள்ளக் கூட மறுத்து விட்டார்களே ஏன்?''

''என் காதிலும் அந்தச் செய்தி விழுந்தது. இது அவசியமில்லாத செய்கை. ஒருவேளை முன்ஜாக்கிரதையாக இருந்து விட்டார்களோ என்னவோ? நான்தான் ஏற்கனவே சொன்னேனே! நாம் பணியாற்றும் கிளையில் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய்களுக்கான செக்குகளை வாங்கி வைத்திருந்தோமென்று!''

''இந்தப் பகுதி நேர வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாதவர்களும் இருந்திருப்பார்கள் இல்லையா?''

''அகில இந்தியாவில் சுமார் இரண்டு லட்சம் பாங்கு ஊழியர்கள் இருக்கிறார்கள். இவர்களில் சுமார் ஒன்றரை லட்சம் பேர் இந்தச் சமீபத்திய போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். ஸ்டேட் பாங்கிற்குத் தனி ஊழியர் சங்கம் உண்டு. அவர்கள் இதில் கலந்து கொள்ளவில்லை. தமிழகத்திலுள்ள இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் ஊழியர்களும் கலந்துகொள்ளவில்லை.''

''உங்கள் சங்கம் ஏதாவது அரசியல்வாதிகளின் தொடர்பு கொண்டதா? தொழிற் சங்கம் என்றால் அரசியல்வாதிகள் எப்படியோ புகுந்துவிடுகிறார்களே?''

''எங்கள் சங்கம் முழுக்க முழுக்க ஊழியர்களால் நடத்தப்படுவது. இப்போது பணியாற்றும் ஊழியர்கள், மாஜி ஊழியர்கள் என்று இரு வகையினர்தாம். அரசியல்வாதிகள் கலக்காத சங்கம் என்று நான் பெருமையாகவே சொல்லிக் கொள்கிறேன்.''

''மற்ற தொழில் துறையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், ஊழியர்களுக்குக் கிடைக்கும் ஊதிய விகிதத்தை விட உங்கள் ஊதிய விகிதம் அதிகம்தானே? ஆனாலும் உங்களிடையே சதா ஏன் அதிருப்தி நிலவுகிறது?''

''எங்கள்தொழில், நிர்வாகத்துக்கு நிறைய லாபம் சம்பாதித்துக் கொடுக்கிறது. உயர் மட்டத்திலிருக்கும் சிலருக்கு ஏகமாக ஊதியம் கிடைக்க ஏற்பாடாகிறது. ஏன் நாங்களும் அதிக ஊதிய விகிதம் பெறக் கூடாது? பல மருந்து தயாரிக்கும் நிறுவனங்களின் ஊழியர்கள் எவ்வளவு உயர்ந்த விகிதத்தில் ஊதியம் பெறுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். பாங்கி விகிதத்தை விடப் பலமடங்கு அதிகம்! எங்கள் தொழில் பொறுப்பையும் நீங்கள் உணர வேண்டும். பாங்கிக் கவுண்டரில் வாடிக்கைக்காரர்களைத் திருப்திப்படுத்த நோட்டுக்களைத் துரிதமாக எண்ணிக் கொடுக்கும்போது ஒரு நூறு ரூபாய் நோட்டுக் கூடப்போனால் ஒரு வாரச் சம்பளம் கோவிந்தா! லெட்ஜர்களில் மீதித் தொகையைக் கழித்துக் கணக்கிட்டுப் போடும்போது சற்றுக் கவனப் பிசகாக ஒரு சைபரைக் கூடப் போட்டால் ஆயிரக் கணக்கான நஷ்டத்துக்கு அந்தச் சிப்பந்தி பொறுப்பாளி!... இவற்றை யெல்லாம் நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமல்லவா?''

''உங்களுடைய திடீர்ப் போராட்டங்கள் பாங்கி வாடிக்கைக்காரர்களின் அலுவல்களை ஸ்தம்பிக்கச் செய்து அவர்களை அல்லல் படுத்துகிறது என்பதையும் நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமல்லவா?''

''அந்த நிலைக்காக நாங்கள்வருந்துகிறோம். ஆனால் எங்கள் நலனையும் நாங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கிறதே!''

''சரி சம்பத்! நான் வருகிறேன்.''

''வணக்கம் ராஜகோபால்! உங்கள் கோபம் குறைந்ததா?''

''கோபம் குறைந்தது. ஆனால் மனம் நிறைவு பெறவில்லை.''

''நாம் ஒரே விஷயத்தை வெவ்வேறு கோணங்களிலிருந்து அவரவர் மனநிலைக்கு ஏற்பப் பார்க்கிறோம்! அவ்வளவுதான்! போய் வாருங்கள்.''

— பட்டினத்தார்

# காணிக்கை

ஆர்வி

## அத்தியாயம் 3

அஜிதாவும் பாஸ்கரனும் அன்று பேசியதெல்லாம் நாகலக்ஷ்மி மாமிக்குப் புரியாமல் ஒன்றும் போகவில்லை. அவளுக்குப் புரிய வேண்டியிருந்தது ஒன்று தான். சாப்பாடெல்லாம் முடிந்து பாஸ்கரன் புறப்பட்டுப் போனதும் போகாததுமாக அவள் அஜிதாவிடம் அதைத் தான் கேட்டாள்.

''அது சரி, இவனை நீயாத் துணைக்குக் கூட்டிண்டு வந்தியா, அவனுக் கொண்டு வந்து விடறேன்னு வந்தானு?''

''எதுக்கு இந்தக் கேள்வி? நானுத் தான் கூட்டிண்டு வந்ததாக அப்பவே சொன்னேனே!'' என்று எரிச்சல் தொனிக்கச் சொன்னுள் அஜிதா.

தாய் தன் மகளையே சிறிது நேரம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அஜிதாவின் நெஞ்சிலே ஓடுகிற எண்ணங்களை யெல்லாம் கண்ணுலே பார்க்க முடிந்தால் எத்தனை நன்ருக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றிற்று.

''இது என்ன பெரிய அதிசயம்? இப்பக் கழுதை குதிரையெல்லாம் கூடத் தான் அமெரிக்கா போறேங்கிறது. என்னமோ பெரிசாத் திகைக்கப் போறியே? பொட்டையன் கழுத்திலே மாலையைக் கொண்டு வந்து போட்டுதாம் பட்டத்து யானை. அந்த மாதிரி இருக்கும் போலிருக்கு இதுவும்!''

அம்மாவின் அறியாமையைக் கண்டு அஜிதா அலுத்துக் கொண்டாள்.

''எதையாவது சொல்லிச் சமாதானப்படுத்திக்கோ. சாயங்காலம் அந்தக் கார்டனுக்கு வந்து பார்த்திருந்தா, அப்பத் தெரிஞ்சிருக்கும் உனக்கு. இது எல்லாருக்கும் அத்தனை சுலபமா வந்துடற சான்ஸ் இல்லேம்மா!''

''எல்லாருக்கும் கிடைக்காதது இவனுக்குக் கிடைச்சிருக்கு. அதுதானே! இவனுக்குக் கிடைச்சது வரையில் எனக்கும் திருப்திதான். ஆனு இவன் அம்மா பார்வதியை நினைச்சாத்தான் இந்தத் திருப்தி யெல்லாம் போய் எரிச்சலா வர்றது எனக்கு. அல்பத்துக்கு வாழ்வு வந்தாப்பலே அவளுக்கு இனிமேல் கால் பூமியிலே பாவாது. நம்மை யெல்லாம் கண்டாக்கூட இனிமேல் அவளுக்கு ஒரு லட்சியமாப் படாது. படிக்கிறபோதே பிள்ளையாண்டான் ஓசத்தியாப் பாஸ் பண்ணியிருக்கான், வடக்கே எங்கேயோ டிரெயினிங் போயிட்டு வந்திருக்கான்னு அப்பவே உங்க அப்பாகிட்டே சொல்லிப் பெருமைப் பட்டுண்டாளாம். இப்பச் செலவு இல்லாமே அமெரிக்காவுக்குப் போகப் போறுன்னு சொன்னுக் கேக்கணுமா? ஒரு நிலையாத்தான் நிக்கப் போறுள்!'' என்று சொல்லித் தோள்பட்டையில் மோவாயை இடித்துக் கொண்டாள் நாகலக்ஷ்மியம்மாள்.

''உனக்கு அந்த மாதிரிப் பெருமைப் பட்டுக்கிறதுப்பலே ஒண்ணுமில்லே. இருந்தால் நீயும் எப்படி இருப்பியோ?'' என்று பதிலுக்குச் சொல்லி விட்டு மாடிப் படி ஏறிச் சென்றுள் அஜிதா.

அப்பொழுதுதான் அந்த எண்ணம் நாகலக்ஷ்மி அம்மாளின் மூளையில் பளிச்சென்று உதயமாயிற்று: 'இந்தப் பெருமையை அப்படியே அந்தப் பார்வதிக்கு விட்டு விடுவதாவது? அதற்குமேல் ஒரு படி பெருமைப்படும்படி செய்து கொள்கிறேனு. இல்லையா பார்!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

இப்படி ஒரு யோசனை திடீரென்று தோன்றியதற்காக அவள் பெருமைப் பட்டுக்கொண்டாள். உடனே நாகநாதன் படுத்திருந்த இடத்துக்கு விரைந்து சென்றுள்.

''தூக்கமா, சும்மாப் படுத்திண்டிருக்காப்பலேயா?''

''உம்...'' என்று அவர் கண்ணைத் திறந்து பார்ப்பதற்குள் நாகலக்ஷ்மியம்மாள் விளக்கைப் போட்டாள்.

''கண்ணைக் கூசறது. விளக்கு எதுக்கு இப்ப?''

''எல்லாம் காரியமாத்தான்; பேச வேண்டியிருக்கு.''

''இத்தனை நாழிக்கு மேலே என்ன பேச்சு? கார்த்தாலே பேசிறைப் போச்சு.''

''அதுக்கு ஒரு நேரம் இல்லையா? எனக்குத் தெரியாதா எதை எப்பப் பேசணும்னு?''

''சரி, சொல்லு.''

''பாஸ்கரன் வந்திருந்தான்; இப்பத் தான் சாப்பிட்டுட்டுப் போறான்!''

''ஊஹ்ஹூம். தேவலையே!''

''என்ன தேவலையே, மாவிலையே... எதுக்கு வந்தான்னு கேக்காமே!''

''அதான் நீ சொல்ல வந்திருக்கியே. நீயே சொல்லு.''

''சொல்லிப்பிட்டாத்தான் என்ன? அப்படியே சொன்னபடி முடிச்சிண்டு தான் வந்துடுவேன். அப்பவும் கூட நான் இல்லாட்டாக் காரியம் நடக்காது.''

''இதைச் சொல்லத்தான் எழுப்பினியாக்கும் என்னை!''

''இதைச் சொல்லலேன்னு உங்களுக்குச் சுறுசுறுப்பு எங்கே வரப் போறது?''

''சரி, சரி, விஷயத்தைச் சொல்லு.''

''பாஸ்கரன் அமெரிக்காவுக்குப் போறானும்!''

''பார்வதி சொல்லிண்டிருந்தாள். செலக்ஷன் ஆயிடுத்தாமா?''

''ஆயிடுத்தாம். ரெண்டு மாசத்திலே புறப்படணுமாம்!''

''போயிட்டு வரட்டும். போகவேண்டியவன்தான் அவன். எனக்கு அப்பவே பட்டதுதானே. இவனுக்குச் செலக்ஷன் ஆகலேன்னு வேறே யாருக்கு ஆகப் போறது? போகட்டும்; போயிட்டு வரட்டும்.''

''போறதெல்லாம் சரிதான். நீங்களே அவனை அனுப்பிச்சுட்டு வந்துடுவேள் போலிருக்கே. அதுக்குள்ளே ஓர் ஏற்பாட்டைச் செய்து அனுப்புங்கோ. உங்களை வேண்டாங்கலே. இன்னும் ரெண்டே மாசந்தான் இருக்கு!''

''என்ன ஏற்பாட்டைச் செய்யச் சொல்றே நீ?''

''பார்வதிக்குத்தான் அவன் பிள்ளையா, உங்களுக்கும் அவன் மருமான் இல்லையா? அவன் விஷயத்திலே உங்களுக்கும் பொறுப்பு இல்லையா?''

''இது என்ன இப்படித் திடீர்னு! நீயா இப்படிப் பேசறே?''

''திடீர்னுதான் தோணித்து: பேசறேன். ஏன் நான் பேசப் படாதா? எனக்கும் அவன் மருமான் இல்லையா?''

''போறது: இப்பவாவது சொல்லிக் கிறயே.''

''எதை எப்பச் சொல்லிக்கணும்னு எனக்குத் தெரிஞ்சதனலேதான் சொல்றேன். இதுவரையிலே சொல்லலேன்னு அஜிதாவுக்கு இன்னும் எத்தனையோ ஒசத்தியான இடம் கிடைக்கும்னுதான் சொல்லலே. ஆனா அஜிதாவுக்கு இருக்கிற பிரமிப்பைப் பார்த்தா இவனே தேவலேன்னு எனக்குப் பட்டுட்டுது. அதுவும் இப்பத்தான் பட்டுது. உடனேயே உங்ககிட்ட வந்து சொல்லிப் புட்டேன். உங்ககிட்டச் சொல்லலேன்னு எனக்குத் தூக்கமே வராது. அதை மட்டும் கெட்டியா முடிஞ்சுக்குங்கோ!''

''சரி, சரி, அப்புறம்சொல்லு.''

''சொல்றது என்னத்தை? கதையா சொல்லிண்டிருக்கேன். சட்டுப் புட்டுனு

மேலே நடக்க வேண்டியதைப் பார்க்கணும் என்கிறதுக்குன்னு சொல்றேன். இதுதான் சரியான சமயம். அமெரிக்கா போயிட்டு வந்தப்பறம் பார்த்துக்கலாம்னு நெனேச்சா, அவன் கையிலே அகப்படுவான்னு என்ன நிச்சயம்? கையிலே வெண்ணெயை வைச்சிண்டு எதுக்காக நாம நெய்க்கு வேண்டி நிக்கணும்? இப்பன்னு அவன் கைக்குள்ளே இருக்கான். நம்ம தயவும் இப்பக் கொஞ்சம் வேண்டி யிருக்கும். சொன்னுத் தட்டமுடியாது. அப்புறம்னு எது எப்படியோ? ஒரு வருஷம் கழிச்சு வரப்போறுன். உங்களுக்கான உடம்பு ஒரு ஸ்திதியிலே இல்லே. இருக்கிறதை விட்டுப்புட்டு நிக்கலாமோ?''

''சரி; அஜிதாவைக் கேக்க வேண்டாமா? அவள் என்ன நினேச்சிண்டிருக்காளோ?''

''அது எனக்குத் தெரியாதா? எல்லாம் தெரிஞ்சிண்டுதான் சொல்றேன். அவள் பேசறதையும் சிரிக்கிறதையும் பார்த்துட்டுத்தான் சொல்றேன். இப்பத்தான் அவளுக்கே அவனண்டை ஒரு மதிப்பு வந்திருக்கு!''

''தேவலேயே, அப்படின்னு நாளைக்கே பார்வதியைப் பார்த்துப் பேசிப்புடுவோம். அவ்வளவுதானே?''

''அவ்வளவேதான். பொழுது விடிஞ்சதும் முதல் காரியமா இதைக் கவனிக்கணும். அதுக்குத்தான் இப்ப எழுப்பி இவ்வளவு அவசரமாச் சொல்றேன். பாஸ்கரனைப் பத்தி விசாரிக்கிறதுமாதிரி போய், இந்த ஐடியா திடீர்னு அப்பத்தான் வந்தாப்பலே பேசி, காரியத்தைப் பக்குவமா முடிச்சிண்டு வரணும். இதுக்கு நான் கூட முதல்லே வரப்படாது. வந்தால் சந்தேகப்படும்படி இருக்கும். அதுக்கு இடம் கொடுப்பானேன்? நான் அப்புறமா வந்துக்கறேன்.''

நாகலக்ஷ்மி இத்துடன் பேச்சை முடிக்கவில்லே. இந்தச் சம்பந்தத்திஞல் ஏற்படக் கூடிய பண மிச்சத்தைப் பற்றியும் அநுகூலங்களைப் பற்றியும், அந்தப்

பார்வதி தன் பிள்ளை என்று ஒரு பங்கு பெருமைப்பட்டுக் கொண்டால், தங்களுக்கு அவன் மாப்பிள்ளை என்று இரட்டிப்புப் பங்கு பெருமைப்பட இடமிருப்பது பற்றியும் அவரிடம் வெகு நேரம் வரையில் அலசிப் பேசித் தீர்த்துவிட்டுத்தான் தூங்கப் போனாள்.

நாகநாதனுக்கு இது உண்மையிலேயே பெரிய மகிழ்ச்சியாக இருந்தது. அவருக்கு உள்ளூற இப்படி ஓர் ஆசை உண்டு. ஆனால் நாகலக்ஷ்மி இருக்கிற வரையில் அது எங்கே நடக்கப் போகிறது என்று அவர் அந்த நப்பாசையே படாமல் இருந்து விட்டார். இப்போது அவளே வலிய வந்து அந்தப் பேச்சை எடுப்பது ஆச்சரியம் இல்லையா? ஆண்டவனைப் பார்த்துத்தான் தம்மீது இரக்கப்பட்டு இவளுக்கு இப்படி ஒரு நல்ல புத்தியைக் கொடுத்திருக்கிறான் என்ற நிம்மதியுடன் தூங்கப் போனார். நல்ல தூக்கம் தூங்கி எத்தனை நாள் ஆகிறது!

அதேபோல் மறுநாள் காலையில் அவர் பார்வதியைப் பார்க்கப் புறப்பட்டுப் போனார். வண்டிவரை வந்து வீரத்திலகமிட்டு அனுப்பாததுதான் குறை. மற்ற உபசரணைகள் அத்தனையும் செய்து, சொல்ல வேண்டியதை யெல்லாம் படித்துப் படித்துச் சொல்லிக் கொடுத்து, சொகுசாக அனுப்பி வைத்தாள் நாகலக்ஷ்மி. போகிற காரியம் நிச்சயம் பலித்துவிடும் என்று அவளுக்கு நம்பிக்கைதான். இருந்தாலும் போனவர் வந்து அந்தச் செய்தியைச் சொல்கிற வரையில் அவளுடைய பரபரப்பு அடங்காது போலிருந்தது. அங்கே போய் இவர் என்ன கேட்டார், அதற்குப் பார்வதி என்ன சொன்னாள், பாஸ்கரன் நடுவில் வந்து ஏதாவது பேசினானா, கேட்டானா என்பதெல்லாம் டெலிவிஷனில் தெரிவது போல் தெரிந்தால் எத்தனை நன்றாக இருக்கும்?

நேரம் ஆக ஆக அவள் கவலை அதிகரித்தது. இரண்டு மணி நேரத்துக்கு மேலாகியும் வண்டி திரும்பி வராததைப் பொறுக்காமல் வாசலை எட்டி எட்டிப் பார்த்துவிட்டு வந்தாள். தானும் அவரோடு கூடவே போகாதது தப்பு என்று பலமுறை தனக்குள் சொல்லிக்கொண்டாள். அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

''வரட்டும், சொல்கிறேன்'' என்று ஆத்திரத்தோடு சோபாவில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

வாசலில் கார் சத்தம் கேட்டது. கதவு சாத்தும் சத்தம் கேட்டது. வேண்டும் என்றே அவள் திரும்பிப் பார்க்கவில்லை.

''சார் இருக்காரா?''

''இங்கே சாரையும் காணோம்; காரையும் காணோம்!'' என்று வெடுக்கென்று சொல்லிவிட்டு அப்புறம்தான் வந்த மனிதரைத் திரும்பிப் பார்த்தாள்.

சின்ன வயதானாலும் பெரிய செல்வந்தர் போலிருந்தது. தெரியாமல் இப்படிப் பேசிவிட்டோமே என்று எழுந்திருக்கப் போனாள்.

முகத்தில் புன்னகையுடன் அவர், ''பரவாயில்லை அம்மா! இருக்கட்டும். பம்பாயிலிருந்து வந்திருக்கிறேன். அப்புறம் ஆபீசில் சந்திக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினார்.

நாகலக்ஷ்மிக்கு வேறு ஒன்றும் பேசத் தோன்றவில்லை.

## அத்தியாயம் 4

மணி ஒன்பதைத் தாண்டி விட்டது.

''அப்பாவை எங்கேம்மா அனுப்பிச்சிருக்கே?'' என்று கேட்டுக்கொண்டே மெல்ல மாடியிலிருந்து இறங்கி வந்தாள் அஜிதா.

''நன்னாத்தான் இருக்கு நீ கேக்கறது! நான் ஒண்ணும் அனுப்பல்லே. அவராத்தான் போயிருக்கார்.''

''அதான் எங்கே என்கிறேன்?''

''யாருக்குத் தெரியும்? வந்ததும் அவரையே கேளேன். போக இடமா இல்லே? தங்கை பிள்ளை அமெரிக்கா போறானாமே. போய் விசாரிச்சுட்டு வரலாம்னு போயிருக்கலாம். இதெல்லாம் என்கிட்டே சொல்லிட்டா போறார்?''

''சொல்லாமப் போக மாட்டாரேன்னுதான் கேக்கறேன்! ராத்திரி ரொம்ப நேரம் என்னமோ பேசிண்டிருந்தே போலிருக்கே. அதனாலே கேக்கறேன்.''

''ஆமாம், அப்படியே வச்சுக்கோ, போ. நான்தான் அவரை அனுப்பிச்சிருக்கேன். அதிலே என்ன தப்பு? எது எதைச் சொல்லி அனுப்பணுமோ அது அதை யெல்லாம் சொல்லி யனுப்பத்தானே வேண்டியிருக்கு! உனக்கும் சரி, உங்க அப்பாவுக்கும் சரி, சொல்லாமே என்ன செய்யறது?''

அஜிதா இதைக் கேட்டு மெதுவாகச் சிரித்தாள்.

''இப்பச் சொன்னியே அது அப்பா வரையில் சரி. நீ சொல்றதைத் தப்பா

மல் அவர் கேட்டுத்தான் ஆகணும். ஆனால் என்னை யாரும் கட்டுப்படுத்தி எதுவும் செய்யச் சொல்ல முடியாது!'' என்று சொல்லிக் கொண்டே பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டாள் அஜிதா.

நாகலக்ஷ்மி சட்டென்று நகர்ந்து உட்கார்ந்து கொண்டே, ''ஆமாம், என்ன சொல்லறே நீ? உன்னை யார் இப்பக் கட்டாயப்படுத்தி என்ன செய் யச் சொல்லிப்புட்டா?'' என்று கேட் டாள்.

''பொதுவா எதுக்குமே சொல்றேன், உனக்கு!''

''பொதுவாச் சொல்றது இருக்கட் டும்; இதுக்கு என்ன சொல்றே நீ? உங்க அப்பா பாஸ்கரனையும் அவன் அம்மா வையும் பார்த்துப் பேசத்தான் போயிருக்கார். நான்தான் போகச் சொன்னேன்னு வச்சுக்கோயேன்...''

''அப்படி வா வழிக்கு!''

''நான் ஒண்ணும் வழியை விட்டுத் தாண்டிப் போயிடல்லே. பாஸ்கரனை விட நல்ல வரன் நமக்குச் சட்டுன்னு கிடைச்சுடப் போறதில்லே. எல்லாத்தை யும் யோசிச்சுத்தான் அப்பாவைப் போகச் சொல்லி யிருக்கேன்.''

''அதான் தெரியறதே. ஆனா என்னை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? என் அபிப்பிராயம் தெரிஞ்சுக்க வேண் டாமா?''

''தெரிஞ்சதா நினைச்சுத்தான் போகச் சொன்னேன். உனக்குப் பிடிக் கல்லேன்னு இப்பத்தான் சொல்லேன் அதை!''

அஜிதா சற்றுப் பேசாமல் இருந்தாள். பிறகு, ''அதைப் பற்றி யெல்லாம் நான் யோசிக்கவே யில்லே'' என்றாள்.

''நேத்திக்கெல்லாம் அப்படி ஒண் ணும் தெரியல்லியே எனக்கு. ஒரே யடியாய் அப்படிச் சிரிச்சிண்டு இருந் தாப்பலே பட்டுதே. இனிமேதான் யோசிக்கப் போறியாக்கும், ஒழிஞ்சாப் பலே. நீ யோசிக்கச் சொல்லப் போற தைத்தான் நான் இப்பவே சொல்லி அனுப்பிச்சிருக்கேன்.''

''நானும் இப்பவே என்ன பதில் வரப்போறதுன்னு சொல்லட்டுமா? நீ வேணுமானால் பார்த்திண்டே யிரு. நீ நினைக்கிறாப்பலே பதில் வராது. நான் தெரிஞ்சுதான் சொல்றேன். உனக்கு இதெல்லாம் புரியாதுன்னு!''

''புரியாமல் இருந்தால் இருந்திட்டுப் போகட்டும். நீயே எல்லாம் புரிஞ்ச வளா, தெரிஞ்சவளா இருந்திட்டுப் போ, வேண்டாங்கலே. அவ்வளவுதானே? உனக்கு ஒண்ணும் பிடிக்காமல் கசந்து போயிடல்லியே. அத்தோட விடு'' என்று ரோசத்தோடு சொல்லிவிட்டு,

அமெரிக்காவில் இரண்டுபேர் செல்ல வசதியாகச் சில சைக்கிள்கள் நீளமாகத் தயாரிக்கப்படுகின் றன. இருவரும் பெடல் செய்யலாம்.

பிக்னல் விக் - முத்து

அந்த இடத்தை விட்டே எழுந்து போனாள் நாகலக்ஷ்மி.

போனவள் சற்றைக்கெல்லாமே வாச லில் கார் சத்தம் கேட்டுத் திரும்பி வந்தாள். நாகநாதன்தான் திரும்பி வந்திருந்தார். அவர் வந்த தோரணையி லிருந்து போன காரியத்தின் முடிவைக் கண்டறிய முயன்றாள் நாகலக்ஷ்மி. நாக நாதன் உற்சாகத்துடன் இருப்பதாகத் தான் பட்டது. இருந்தாலும் அத்தனை சுரத்தைக் காணும்.

''இத்தனை நாழி என்னவாம்?''

''பேசிண்டே இருந்ததுலே நேர மாயிட்டுது.''

''அது சரி, போன காரியம் என்ன ஆச்சு? காயா, பழமா?''

''அதை எப்படின்னு சொல்றது? பழம்தான். ஆனா முக்கால் பழம்.''

''அப்படின்னா புரியல்லியே. சரியாத் தான் சொன்னால் என்ன?''

''போனேன்; பேசினேன். அம்மா, பிள்ளை இரண்டு பேருக்குமே இந்த விஷயத்தில் சம்மதம்தான். ஆனால்...''

''அப்புறம் என்ன ஆனால் ஒண்ணு நடுவிலே!''

''இது வந்து இரண்டு மாசத்துக் குள்ளே முடியாதுன்னு தோணறது.''

''ஏனாம்? யார் அப்படிச் சொல்றது, பார்வதியா?''

''இல்லே, இல்லே; அவனேதான் சொன்னான்.''

''அவன்தான் அதுக்கு மேலே இருக் கிறதுக்கு இல்லே போலிருக்கே!''

''அதனாலேதான் சொல்றான்!''

''கல்யாணம்னா இவன் என்ன செய்யப்போறானாம்? நாமன்னா எல்லாம் செய்யப் போறோம். இவனுக்கு வேலையிருந்தால் அதைப் பார்த்துக்கட்டுமே. ஒரு வாரம், பத்து நாளிலே நிச்சயமாகிக் கல்யாணம் நடக்கிறதில்லையா?''

''அதை நான் சொல்லியாச்சு. அவ்வளவு அவசரப்படுவானேன் என்கிறான்.''

''அப்ப எப்ப வச்சுக்கலாமாம்?''

''வந்த பிறகு ஆகட்டும் என்கிறான்.''

''என்னது, அங்கே யெல்லாம் போய்விட்டு வந்தப்புறம், ஒண்ணரை ரெண்டு வருஷம் கழிச்சா?''

''அப்படித்தான் இருக்கு அவன் பேச்சு.''

''ரெண்டு வருஷம்னு சொன்னா யார் எங்கேயோன்னு நீங்க சொல்லப்படாதோ?''

''சொல்லாமலா இருப்பேன்? அதெல்லாம் ஒண்ணும் ஆகாதாம்.''

''இது என்ன, போகாத ஊருக்கு வழி மாதிரின்னா இருக்கு!''

''அப்படி இழுத்தாப்பலேயும் சொல்லல்லியே. வந்த பிறகு வச்சுக்கலாம்னு தானே சொல்றான்.''

''அப்பறம் என்னதான் சொல்லிட்டு வந்திருக்கேளாம்?''

''அவன் நினைக்கிறது ஒரு விதத்திலே நியாயமாப் பட்டாலும், இந்த மாதிரி சுபமான காரியங்களை ஒத்திப்போடறது எனக்குச் சரியாகப் படலேன்னு சொல்லிட்டு, எதுக்கும் யோசிச்சுச் சொல்லும்படி சொல்லிட்டு வந்திருக்கேன். பார்வதியும் சொல்லிப் பார்க்கிறதாச் சொல்லியிருக்கா.''

''அவனுக்குச் சம்மதம்தானாக்கும்?''

''நா ளை க் கே செய்யறதானாலும் அவன் ரெடி.''

''நான் நேர் மாறுதலா நினைச்சிண்டிருந்தேன். ஒரு சமயம் அம்மாவுக்கு எதுத்தாப்பலே இப்படித்தான் சொல்லணும்னு சொல்றானோ, என்னமோ? எதுக்கும் நான் போய்ப் பேசிக்கறேன். எங்கே, அவன் எங்கிட்டே இந்தமாதிரி சொல்லட்டும், பார்க்கலாம். எனக்குத் தெரியும். வாயையே திறக்க மாட்டான்.''

அஜிதா இதையெல்லாம் கேட்டுக்கொண்டு அங்கேயேதான் எதிலேயும் சம்பந்தப்படாதவள் மாதிரி உட்கார்ந்திருந்தாள். நாகலக்ஷ்மி அவளைப் பார்த்தபோது அவள் முகத்தில் ஒரு குறுநகை நெளிந்தது.

''அஜிதா என்ன சொல்றாள்?'' என்று கேட்டார் நாகநாதன்.

''நான் அதை அப்பவே அம்மாகிட்ட சொல்லிட்டேனே! அம்மா போடற பிளான் எதுவும் அவன்கிட்டப் பலிக்காதுன்னு எனக்கு அப்பவே தெரியும். போறதுக்கு முந்தி எப்ப என்னிடம் ஒண்ணும் கேக்கல்லியோ, அதேபோல இப்பவும் என்னிடம் ஒண்ணும் கேட்க வேண்டாம். நான் ஏதாவது சொல்வேன்; அம்மா வருத்தப்படுவாள். எதுக்கு வீண் வம்பு? அவளே போய்ப் பேசிப் பார்த்துட்டு வரட்டுமே!'' என்று நிதானமாகச் சொன்னாள் அஜிதா.

அதற்கு மேல் நாகலக்ஷ்மியும் பேச்சைத் தொடர விரும்பாமல் பம்பாயிலிருந்து யாரோ தேடிவிட்டுப் போனதைச் சொன்னாள்.

'' பா த் தி யா, பம்பாயிலேருந்து நாராயணன் தன் பிள்ளை என்னைப் பார்க்க வர்றதாக நேத்திக்கே டிரங்கிலே கூப்பிட்டுச் சொன்னான். அதை மறந்தே போயிட்டேன், இந்தக் கலவரத்திலே. இங்கே வந்து ஆக வேண்டிய காரியங்களை முடிக்கிறதுக்காக வர்றானாம். என்னைக் கலந்து கொண்டு செய்யும்படி நாராயணன் சொல்லி அனுப்பிச்சிருக்கானாம். வந்தவன் என்ன கேட்டான், நீ என்ன சொன்னே?''

'' நான் சொல்றதுக்குள்ளேதான் அவன் அப்புறம் ஆபீசிலே பார்க்கறதாப் போயிட்டானே. பாஸ்கரனுக்கு மேலே இருப்பான் போலிருக்கு. சொல்றதைக் காதிலே போட்டுக்காமெ போறதிலே!'' என்றாள் நாகலக்ஷ்மி.

''அவனை என்ன லேசுன்னு நினைச்சிண்டிருக்கியா? நாராயணனுக்கு ஒரு பிள்ளை; ஒரு பொண்ணு. பெரிய பிஸினஸ் மாக்னெட். இருக்கிற பணத்துக்குக் கணக்கே தெரியாது. என்னோட தான் ஸ்கூல் பைனல் படிச்சுட்டு, ரெயில் டிக்கட்டுக்குக் கூட வழியில்லாமெ பம்பாய்க்குப் போனான். இப்பக் கொழிக்கிறான். ஆனா அவன் பிள்ளையை நான் பார்த்ததில்லே. எப்படி இருக்கான் பார்க்க''' என்று கேட்டார் நாகநாதன்.

''அதெல்லாம் ஆடுதன் ராஜாபோல நன்னாத்தான் இருக்கான். சிரிச்ச முகமா நைலாத்தான் பேசறான்!''

''அப்ப நான் ஆபீசுக்குப் புறப்படறேன்! அங்கேயும் வந்து பார்த்துட்டு இல்லேயென்னு நினைக்கப் போறான்!'' என்று எழுந்தார் நாகநாதன்.

''சாப்பிடாமலா?'' என்றாள் நாகலக்ஷ்மி.

''சாப்பிட்டுட்டே போயிடறேன். அந்த நாராயணன் பையனைக்கூட ஒரு

நான் இங்கே சாப்பிடக் கூப்பிடணும். நான் எல்லாம் பம்பாய் போனால் அவன் எப்படி உபசாரம் செய்வான்!'' என்று சொல்லி வைத்தார் அவர்.

''அதுக்கென்ன, கூப்பிட்டாப் போச்சு!'' என்று அனுமதி வழங்கிவிட்டாள் நாகலக்ஷ்மி.

''அப்பா! நானும் உங்களோட ஆபீசுக்கு வரப்போறேன். எனக்கு வண்டி வேணும். திரும்பி வரபோது உங்களை அழைச்சுண்டு வந்துடறேன்'' என்றாள் அஜிதா.

''வண்டி சரியாகவே இல்லே. ரிப்பேருக்கு அனுப்பணும். உங்கப்பா காலையிலே போயிட்டு வரதுக்குள்ளே அத்தனை கவலையாப் போயிட்டுது'' என்றாள் நாகலக்ஷ்மி.

''வேண்டாததற்கெல்லாம் கவலைப்படறதுதான் உனக்கு வழக்கமாப் போச்சே. இன்னிக்கு என்ன புதிசு?'' என்றாள் அஜிதா.

''அப்பாவுக்கு ஒண்ணும் சரியான உடம்பில்லே. அவரை மணிக்கணக்கா உக்காந்திருக்கும்படி வெச்சுடாதே!''

''நீங்க என்னப்பா பார்க்கிறேன். உங்களுக்காகக் கரிசனப்பட்டுச் சொல்லலே. நான் வண்டியை எடுத்திண்டு போய்ச் சுத்தினால் பெட்ரோல் செலவாயிடுமேன்னுதான் சொல்றாள் அம்மா!''

அப்பாவும் பெண்ணும் நாகநாதன் அண்டு கம்பெனி வாசலில்போய் இறங்குவதற்கும், பின்னாலேயே இன்னொரு வண்டி வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. வண்டியிலிருந்து இறங்கி வந்தவனைப் பார்த்ததுமே, ''நாராயணன் பிள்ளையா?'' என்று முக மலர்ச்சியோடு கேட்டார் நாகநாதன்.

''எஸ் சார், நான்தான் முரளி!'' என்று அவனும் புன்முறுவலோடு கூறிவிட்டு, வண்டியை விட்டு இறங்காமலே இருந்த அஜிதாவைப் பார்த்தான்.

ஆனால் அஜிதாவின் வண்டி அதற்குள் புறப்பட்டுவிட்டது. (தொடரும்)

---

# ராவணன் புழு

நம் தேகத்தில் ஏதேனும் காயம் ஏற்பட்டால் அது சில நாட்களில் ஆறித் தோல் தன் பழைய அழகை அடைகிறது. உடைந்த எலும்பு கூட ஒன்றுகூடிப் பழையபடி ஒன்றாகிவிடுகிறது. இவை மனிதனிடம் உள்ள புதுப்பிக்கும் திறனைக் காண்பிக்கிறது. ஆனால் மனிதனால் இழந்த தன் கையை மீட்க முடியாது. கையில் விரல் ஏதேனும் துண்டிக்கப்பட்டு விட்டால் அது முன் போலவே திரும்ப வளருவதில்லை. ஆனால் முதுகெலும்பில்லாத பிராணிகளிடம் இந்தச் சக்தி அதிகம். இவை இழந்துபோன தம்முடைய உறுப்புக்களை மீண்டும் உண்டாக்குகின்றன.



தாம் இழந்த உடலுறுப்புக்களை மறுபடியும் உண்டாக்கும் சக்தி தட்டைப் புழுக்களிடையே மிகவும் அதிகம். அதிலும் 'பிளனேரியா' (Planaria) என்று அழைக்கப்படும் ஒருவிதத் தட்டைப் புழு. இதற்குப் பெயர் பெற்றதாகும்.

பிளனேரியா என்னும் இந்தத் தட்டைப் புழு ஒருவிதப் புல்லுருவி (Parasite)யாகும். குளங்களில் கற்களிடையே நகர்ந்து செல்வதை நாம் காணலாம். தட்டையாக இலை போன்று இருக்கும். பலவித நிறங்களில் காணப்படும். நீரிலுள்ள சிறு புழுக்களே இதன் ஆகாரம்.

ஒரே ஒரு பிளனேரியாவை வைத்துக்கொண்டு நாம் மூன்று பிளனேரியாக்களை உற்பத்தி செய்யலாம். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஒரு புழுவை இரண்டு இடங்களில் வெட்டினால் நமக்கு முறையே தலை, உடல், வால் ஆகிய மூன்று துண்டுகள் கிடைக்கின்றன. மூன்று துண்டுகளும் சிறிது நாட்களில் மூன்று தனித் தனி புழுக்களாக மாறிவிடுகின்றன! அதாவது தலைப் பகுதி, தனக்கில்லாத உடலையும் வாலையும் உண்டாக்கித் தனிப் புழுவாகி விடுகிறது. அப்படியே மற்றவையும். இந்தச் சக்தி ரொம்ப அதிசயமானதாகும்.

இந்தப் பிளனேரியாவின் தலையை மேலிருந்து கீழாகப் பத்துத் துண்டுகளாக வெட்டி அவை மீண்டும் இணையாதவாறு பார்த்துக் கொண்டால் ஒவ்வொரு துண்டும் ஒரு தனித் தலையாக வளர்ந்துவிடுகிறது. ராமாயணத்திலே பத்துத் தலை ராக்ஷஸனான ராவணனைப் பற்றிப் படிக்கிறோம். ஆனால் பார்த்ததில்லை. இப்பொழுது பிளனேரியாவை, அந்த ராக்ஷஸனான ராவணனைப் போன்ற உருவத்தில் காண்கிறோம்.

- லலிதா பத்மநாபன்

ஜோடி அர்விந்தும்,
நீங்களும்
அர்விந்த்
மில்ஸ் லிமிடெட்
அகமதாபாத்-2.
Arvind Mills Ltd.
LALBHAI GROUP

**விளங்கும் விஞ்ஞானம்**



# பிளாஸ்டிக் புரட்சியா - யார் சொன்னது?

அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாநிலத்தில் பாண்டியாக் என்று ஓர் ஊர். இங்கு பிரசித்தி பெற்ற ஒரு கம்பெனி 1200 ஏக்கரை நீண்ட நாள் வாடகைக்கு எடுத்தது. அந்நகர மக்கள் பெரிய தொழிற்சாலை உருவாகப் போகிறது என்று ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகுதான் தெரிந்தது; அவ்விடத்தைக் குப்பைகளைக் கொட்டக் குத்தகைக்கு எடுத்திருக்கிறது அந்த நிறுவனம் என்று. சிக்காகோ நகரிலிருந்து நாளொன்றுக்கு இரண்டாயிரம் டன் வீதம் அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு அங்கே குப்பை குவியப்போகிறது என்பது புரிந்தது.

பாண்டியாக் ஊர்வாசிகள் திகைத்தனர். அந்த ஊருக்கு வாடகைப் பணம் நிறையக் கிடைப்பது என்னவோ வாஸ்தவம்தான். ஆனால் இந்த விதமாகத்தானா பணம் வர வேண்டும்? ஊரின் மேயர் சொன்னார்: ''நாங்கள் நாற்றத்துக்குப் பயப்படவில்லை. ஆனால் குப்பை கொட்ட என்று எங்கள் ஊரைத் தேர்ந்தெடுத்தார்களே அந்த அவமானத்தைத்தான் தாங்க முடியவில்லை!''

பாண்டியாக் ஊர்க்காரர்கள் துரதிர்ஷ்டசாலிகள் என்பது சரி; ஆனால் பிரச்னைக்கு வழி என்ன?

முன்னேற்றம் அடைந்த நாடுகளின் மிகப் பெரிய பிரச்னை — குப்பை!

குப்பையைக் கொளுத்தலாம்; குழி தோண்டிப் புதைத்து மக்க வைக்கலாம். ஆனால் வளர்ச்சி மிக்க தேசங்களில் பெரும்பாலான குப்பை சுலபத்தில் எரியாது; மக்காது. காரணம்? கடையில் வாங்கும் பொருளைப் பிளாஸ்டிக் டப்பியிலோ கண்ணாடி சீசாவிலோ 'பாக்' செய்து தருகிறார்கள். பொருளை எடுத்துக் கொண்டு மக்கள் சீசா, டப்பி முதலியவற்றை வீசிவிடுகிறார்கள். இவை அழுத்தமாகவும் உறுதியாகவும் தயாரிக்கப்பட்டிருப்பதால் அழிவதில்லை.

குப்பைப் பொருள்கள் சிலவற்றைப் புதுப்பிக்க முடியும் என்பது உண்மையே. ஆயின் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் புதுப்பிக்க ஆகும் செலவை விடப் புதுப் பொருள்கள் தயாரித்தலே மலிவு.

குப்பையிலிருந்து புதுப்பிக்கப்படக் கூடிய பொருள்களைத் தனியே பிரித்து எடுக்க வேண்டும். இதற்கான இயந்திர வசதிகள் ஓரளவு இருக்கிறது என்றாலும் மனிதர்களையும் சம்பளம் கொடுத்து நியமிக்க வேண்டும். செலவைப் பார்க்கும்போது இதனால் லாபமில்லை என்று விட்டு விடுகிறார்கள்.

மிக அதிகமான வெப்பத்தில் அனைத்தையும் கருக்கிச் சாம்பலாக்கி விடலாம் என்றாலும் இதிலிருந்து கிளம்பக் கூடிய வாயுக்கள் மக்கள் சமூகத்துக்குக் கேடு விளைவிப்பவையாக இருக்கின்றன. முக்கியமாகப் பிளாஸ்டிக் எனப்படும் பாலி வினைல் க்ளோரைடு (பி. வி. சி.) எரிக்கப்படும்போது குளோரின் சம்பந்தப்பட்ட வாயுக்கள் வெளியாகின்றன. சுற்றுச் சூழ்நிலையையே கெடுத்து விடுகின்றன. மேலும் இவற்றை இப்படி மிக அதிக உஷ்ணத்தில் கருக்கிச் சாம்பலாக்கவும் ஏகமாகச் செலவாகிறது.

உள்ளதற்குள் சுலபமான, வழி எங்காவது விசாலமான இடம் கிடைத்தால் அங்கே கொண்டு போய்க் குப்பையைக் கொட்டி விடுவதுதான். இதற்கும்தான் நிலத்துக்கு வாடகை என்றும் குப்பையை ஏற்றிச் செல்லும் லாரிக்கென்றும் செலவு ஆகிறது.

ஆகவே பொருள்களை 'பாக்' செய்யப் பயன்படும் பிளாஸ்டிக் குப்பிகள் கண்ணாடி சீசாக்கள் போன்றவை மீது கட்டுப்பாடு கொணர யோசித்து வருகிறார்கள்.

பால் பாட்டில் போல் பல தடவை பயன்படுவதானால் பரவாயில்லை. ஆனால் ஒரு தடவைக்கு மேல் பயன்படாத பாட்டில்கள் பெரும் தொல்லை. கண்ணாடி அழியாதது, ஆபத்தானது. மக்காத, எரியாத பிளாஸ்டிக் டப்பாக்களுக்கும் தடை விதிக்க வேண்டியது தான். அவற்றின் உறுதியான தன்மையே அவற்றுக்குத் தடை விதிக்கக் காரணமாகிறது!

தகர டப்பாக்கள் இருந்துவிட்டுப் போகலாம். அவற்றைக் குப்பையிலிருந்து பிரித்துப் புதுப்பிப்பது எளிது. இல்லாதபோதிலும், அவை துரு ஏறி அழியும் தன்மை கொண்டவை. காகிதம், அட்டை போன்றவை மக்கி விடும் — கவலையில்லை.

பிளாஸ்டிக் ஆராய்ச்சி புரிந்த விஞ்ஞானிகள் வருஷக் கணக்காகப் பாடுபட்டு உறுதியான, அழிக்க முடியாத—பிளாஸ்டிக்கை உருவாக்கினார்கள். இனி அவர்கள் அதற்கு நேர்மாறாக, மக்கக் கூடிய, நாளாவட்டத்தில் பொடித்துப் போகக் கூடிய பிளாஸ்டிக் வகைகளைத் தயாரிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்!

— மைக்கேல் ஆர்னால்டு

படம்: பம்பாயில் ''தோஸ்டாலென்'' பிளாஸ்டிக் தொழிற்சாலை

# போராட்டங்கள்

## 12. தோல்வியில் மகிழ்ச்சி

சில ஆண்டுகளுக்கு முன்னால் கல்லூரியில் நடந்த சம்பவம் முரளியின் நினைவில் படரத் தொடங்கியது.

கல்லூரி இலக்கிய சங்கத்தின் தலைமைப் பதவிக்கு முரளி போட்டியிட்ட போது அவனை எதிர்த்து வேலை செய்தாள் சாரதா.

ஒரு நாள் மாடிப் படிகளில் எதிரும் புதிருமாக இருவரும் சந்தித்தபோது அவளை மறித்துப் பேசினான் முரளி.

''இலக்கிய சங்கத்துக்கு நான் போட்டியிடுகிறேன். உங்களுடைய ஒத்துழைப்பு வேண்டும்'' என்றான்.

''இலக்கிய சங்கத்தின் தலைவராகப் போட்டி யிடுபவருக்கு இலக்கியத் திறன் வேண்டுமே?'' என்றாள் சாரதா. அவளுடைய குத்தலான பேச்சு முரளிக்கு உள்ளூறக் கோபத்தைக் கிளறியது.

''ஓ...அதனால்தான் நீங்கள் போட்டியிடவில்லையோ?'' என்று கேட்டான் முரளி. பக்கத்திலிருந்த மாணவிகள் குபீரெனச் சிரித்தார்கள். சாரதாவுக்கு அவமானத்தால் முகம் சிவந்தது. முரளியை முறைத்துப் பார்த்தாள். பதில் ஒன்றும் சொல்லாமல் வேகமாக இறங்கிப் போய்விட்டாள். அவள் கோபத்துடன் படியிறங்கும் அழகை ரசித்துக் கொண்டு நின்றான் முரளி.

அவனுக்கு எதிராகத் தீவிரமாகத் தேர்தலில் வேலை செய்தாள் சாரதா. தேர்தலில் முரளியை எதிர்த்து நின்றவன் வெற்றி பெற்றதை அறிந்ததும், முதலில் கைதட்டி ஆரவாரம் செய்தவள் சாரதாதான். தேர்தல் முடிந்து மாடியிலிருந்து கீழே இறங்கியபோது வராந்தாவில் முரளியைச் சந்தித்தாள். அவனைக் கண்டதும் முரளி நழுவிச் செல்ல முயன்றான்.

''மிஸ்டர்!...மிஸ்டர்!...''—சாரதா கூப்பிட்டாள். முரளி நின்று திரும்பிப் பார்த்தான். சாரதா சிரித்தபடியே அவனை நெருங்கி வந்தாள்.

''எனது மனமார்ந்த அநுதாபங்கள்'' என்றாள். அவளுடைய குறும்புச் சிரிப்பிலும், விஷமப் பார்வையிலும் ஒரு கணம் சொக்கி நின்றான் முரளி. ஒன்றும் பதில் சொல்லாமல் அவளையே புன்முறுவலுடன் உற்றுப் பார்த்தான்.

''ரொம்ப நன்றி... உங்களுக்குத் திருப்திதானே?'' என்று கேட்டான்.

''எதில்?''

''நான் தோற்றதில்.''

''திறமை உள்ளவர்கள் வெற்றி பெறுவார்கள்'' என்றாள் சாரதா. சொல்லடி மீண்டும் விழுந்ததை உணர்ந்து கொண்டான். பதிலுக்கு அடிக்க விரும்பாத முரளி, தான் சொல்ல நினைத்ததைச் சொல்லாமல் உள்ளேயே அடக்கிக் கொண்டு இலேசாகச் சிரித்து விட்டுப் போய் விட்டான்.



ஆரம்ப காலத்தில் இப்படி இரு துருவங்களாக ஆரம்பித்த அவர்களுடைய தொடர்பைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருந்த முரளியை ஃபோன் மணி சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.

பேராசிரியர் கமலசாமி பேசினார். அன்று இரவு அவனை வீட்டுக்கு அழைத்தார். முரளியும் சம்மதித்து விட்டு போனைக் கீழே வைத்தான்.

* * *

பேராசிரியர் கமலசாமியின் வீட்டை நோக்கி இரவு ஒன்பது மணிக்கு முரளியின் கார் சென்று கொண்டிருந்தது. முரளியின் உள்ளத்தில் சாரதாவின் நினைவு உறுத்திக் கொண்டிருந்தது.

கடந்த நான்கு ஆண்டுகளில் அவளோடு பழகியது, பேசியது, கனவு கண்டது எல்லாமே வெறும் பிரமை தானோ என்றுகூடச் சந்தேகித்தான். அவனுக்குத் தந்தை இல்லை, தாய் இல்லை. உள்ளன்போடு பழக யாருமே இல்லாது

ர. சு. நல்லபெருமாள்

வளர்ந்துவிட்ட முரளி, சாரதாவின் உறவில்தான் இனிமையை உணர்ந்தான். அது வரை புத்தகங்களிலேயே மனத்தைப் பறி கொடுத்து அறிவுப் பசியை மட்டுமே தணித்துக் கொண்டவனுக்குச் சாரதாவைக் கண்ட பிறகுதான் இதயத்திலும் ஒரு பசி உண்டென்னும் உணர்வு தட்டியது.

கல்லூரியில் அவள், அவனுடைய எதிரி மாதிரிதான் பழகினாள். அவனுடைய ஒவ்வொரு முயற்சியிலும் அவள் தலையிட்டாள். அதற்குக் காரணமும் இருந்தது. அதுவரையில் அவள் படித்து வந்த வகுப்புக்கள் அனைத்திலும் அவள்தான் முதன்மையாகத் தேறி வந்தாள். அவளோடு போட்டியிட்டு அவளுக்கு ஈடாகப் பரீட்சைகளில் வெற்றி பெற யாருமே இல்லை. இதனால் கர்வம் கொண்டிருந்த சாரதாவுக்கு எம். ஏ. வகுப்பில் சவாலாக அமைந்துவிட்டான் முரளி. அதனால் எழுந்த பொறாமை உள்ளே படரத் தொடங்கியதின் விளைவுதான் சாரதாவை அவனுக்கு எதிராகவே இருக்க வைத்தது. அதே சமயம் அவனுடைய இனிமையான குணமும், எதையும் ஒரு புன்சிரிப்போடு ஏற்றுக் கொள்ளும் தன்மையும் அவளைக் கவரத் தவறவில்லை. அவனோடு பேசிக் கொண்டிருப்பதிலும், அவனுடைய புன்முறுவலைக் காண்பதிலும், ஒருவித ரசனையைச் சாரதா உணர்ந்தாள்.

பேராசிரியர் கமலசாமி, அவன் மீது கொண்டிருந்த பிரியமும், மதிப்பும், சாரதா அவன்மீது கொண்டிருந்த வீம்பைக் குறைத்தன.

அவளை அவள் எதிர்க்க எதிர்க்க, அவள் மீது அவனுடைய அக்கறை மிகுந்ததே தவிர, தணியவில்லை. ஒன்றை மட்டும் நன்கு புரிந்து கொண்டான் — என்னதான் சாரதா அவனை அலட்சியப்படுத்தினாலும், அவனால்

everest/969i/ACW tm

அவனை மறக்கவோ, விட்டு விலகவோ முடியாது என்பதை நன்கு உணர்ந்து கொண்டான்.

அவனைக் கவர்ந்தது, அவளுடைய அழகா அல்லது அவனை எதிர்த்துக் கொண்டேயிருக்கும் அவளுடைய இயல்பா....?

அடிக்கடி எதிர்த்துப் பேசிச் சண்டையிடும் அவளுடைய குழந்தைத் தனமும், பேச்சிலேயே சுருக்கென்று குத்தும் குறும்புத்தனமும், முரளியின் உள்ளத்தை அடிமைப்படுத்தி விட்டன. தனியனாகவே வளர்ந்துவிட்ட முரளிக்குச் சாரதாவின் தொடர்புதான் தெம்பூட்டியது. அவளோடு பேசிச் சண்டைவிட்டுப் பொழுதைக் கழிப்பதற்கென்றே அவள் வீட்டுக்கு அடிக்கடி வருவான்.

எம். ஏ. வகுப்பின் கடைசி வருஷப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்த சமயத்தில், ஒரு நாள் இரவு, இரண்டு மணிக்குத் தூக்கத்திலிருந்து எழுந்த முரளி, சன்னல் பக்கம் சென்ற போது, ஹாஸ்டல் வார்டனாயிருந்த பேராசிரியர் கமலசாமியின் வீட்டு மாடி அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்ததைக் கண்டான். சாரதா, கையில் ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு மாடி அறைக்குள் அங்கும் இங்குமாக அலைந்துகொண்டே படிப்பதும் தெரிந்தது. அந்தப் பரீட்சையில் எப்படியும் முரளியை மிஞ்சிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டியிருக்கிறாள் என்பதை முரளி அறிவான். அவளுக்கு முதல் வகுப்பில் வெற்றி பெறுவதில் சிரமமில்லை. முரளியை மிஞ்சும்படியாக மார்க் வாங்கிவிட வேண்டும் என்ற வைராக்கியத்தில் இருந்ததால், இரவு இரண்டு மணி வரையும் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்தாள்.

மறு நாள் காலையில் முரளி, கமலசாமியின் வீட்டுக்குப் போயிருந்த போது, சாரதாவின் முகம் தூக்கமின்மையால் களை இழந்து சோம்பி, கண்கள் சிறுத்திருப்பதைக் கண்டு பரிதாபப்பட்டான்.

''இவள் இரவும் பகலும் படிக்கிறாள். ஆனால் என்னதான் பகீரதப் பிரயத்தனம் செய்தாலும் உன்னை இவளால் மிஞ்ச முடியுமா என்பது சந்தேகந்தான்'' என்றார் கமலசாமி.

''தீவிரமாக முயலும்போது வெற்றி கிடைக்கலாம்'' என்றான் முரளி புன்முறுவலுடன்.

''இவர் சொல்லித்தான் வெற்றி கிடைக்கப் போகிறதோ? அப்படி ஒன்றும் நான் தீவிர முயற்சி எடுக்கவில்லை. சாதாரணமாகப் படித்தே என்னால் இவரை மிஞ்ச முடியும்'' என்றாள் சாரதா எரிச்சலுடன்.

''ஓஹோ....! சாதாரணமான முயற்சிக்கே இரண்டு மணி வரையில் படிக்க வேண்டியிருக்கிறதா...? நேற்று நீ படித்தது சன்னல் வழியாகத் தெரிந்ததே'' என்று கூறிவிட்டு அவளைப் பார்த்துச் சிரித்தான் முரளி. அவனை எரித்து விடுபவளைப் போல் முறைத்துப் பார்த்து விட்டு வீட்டுக்குள் சென்று விட்டாள் சாரதா.

கமலசாமி சிரித்துக் கொண்டார்.

''முரளி...! இந்த முறை மட்டும் உன்னை அவள் மிஞ்சி விட்டால், அவளுக்குப் பைத்தியமே பிடித்து விடும். இந்த மாதிரி படிப்பு விஷயத்தில் போட்டி நல்லதுதான். ஆனால் இப்படி வெறி பிடித்து விடக் கூடாது. உன்னை மிஞ்சுவாள் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை'' என்றார். பிறகு சொன்னார்:

''புத்தகங்களைப் படித்து விட்டால் மட்டும் போதாது, முரளி. சிந்தனையிலும், எழுத்திலும், 'ஒரிஜினலிடி' வேண்டும். சொல்லும் விஷயத்தில் தெளிவும் அழுத்தமும் அலங்காரமும் இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் உனக்கு அமைந்திருக்கும் ஆற்றல், நம்முடைய கல்லூரியில் வேறு யாருக்கும் இல்லை. கடந்த பத்து ஆண்டுகளில் எந்த மாணவனும் உன் அளவுக்குத் திறமை பெற்றிருக்கவில்லை.''

பேராசிரியரின் புகழ்ச்சி, முரளியை நாண வைத்தது. அவனுடைய பார்வை வீட்டுக்குள் நுழைந்து துழாவியது. உள்ளே சன்னல் ஓரத்தில் நின்று கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்த சாரதாவின் பார்வையோடு முரளியின் பார்வை மோதியது.

அவளுடைய கண்களில் அப்போது நிழலாடிய பயமும், சந்தேகமும் முரளியின் மனத்தில் சஞ்சலத்தை உண்டுபண்ணின.

கமலசாமி சொல்வது போல் தன்னால் முரளியை வெல்ல முடியாமல் போய் விடுமோ என்னும் சந்தேகம் சாரதாவின் இதயத்தைக் குடைந்து கொண்டிருந்தது.

பரீட்சைகள் முடிந்து அவற்றைப் பற்றிய முடிவு அறிவிக்கப்பட்டபோது எல்லாருமே அதிர்ச்சியுற்றனர். சாரதா மாநிலத்திலேயே முதன்மையாகத் தேறியிருக்கிறாள் என்ற செய்தியைவிட, முரளி தோல்வியுற்றான் என்ற செய்தி தான் பரபரப்பை ஏற்படுத்தியது. சாரதாவுக்குத் தன்னுடைய வெற்றியை எண்ணி மகிழக்கூட முடியவில்லை.

முரளியை யாராலும் பரீட்சையில் வெற்றி காண முடியாது என்றிருந்த வேளையில், அவன் பரீட்சையில் சாதாரணமானவனைப் போல் கூடத் தேறவில்லை என்பதை அறிந்தபோது அவன் மீது அவளுக்குப் பச்சாத்தாபமே ஏற்பட்டது. அவளையும் மீறிக் கண்கள் கலங்கின. அவனோ எவ்வித அதிர்ச்சியும் இல்லாமல் எப்போதும் போல் உற்சாகமாயிருந்தான். அவனுடைய தோல்வியினால் மிகுந்த ஏமாற்றமும், மன உளைச்சலும் பெற்ற பேராசிரியர், அவனுடைய தோல்வியைச் சொல்லி மறுகினார்.

''இவ்வளவு பெரிய அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு உங்களால் எப்படிச் சிரிக்க முடிகிறது ?'' என்று கேட்டாள் சாரதா.

'' தோல்வி அடைவது பெரிய அதிர்ச்சியா? அப்படியே நான் தோற்றாலும் அது உன்னுடைய வெற்றிதானே! நான் வெற்றி பெற்றிருந்தால் என்னை மிஞ்சிய பெருமை உனக்கு வந்திருக்குமா ? உன்னுடைய வைராக்கியம் இப்போது நிறைவேறி விட்டதல்லவா?'' என்றான் முரளி, சிரித்துக் கொண்டு. அவனை வியப்புடன் உற்றுப் பார்த்தார் பேராசிரியர்.

விடைபெற்றுப் பிரியும் போது முரளி கேட்டான்:

''நீ கொண்ட ஆசை நிறைவேறியதால் உனக்குத் திருப்திதானே சாரதா?''

''நீங்களும் வெற்றி பெற்று, அந்த வெற்றியில் உங்களை மிஞ்சியிருந்தால் இன்னும் மகிழ்ச்சியாயிருந்திருக்கும் '' என்றாள் சாரதா. அவளுடைய முகத்தில் வெற்றிப் பெருமிதம் பொங்கி நிறைந்திருந்தது. அவளுடைய மலர்ச்சியில் முரளியின் இதயம் மலர்ந்தது.

அன்று இரவு படுக்கப் போகும்போது டைரியில் எழுதினான் : ''...... நேசத்துக்குரியவரின் உள்ளம் மலரும்போது, நம்முடைய உள்ளமும் மலர்கிறது. இந்த மலர்ச்சியில் கிடைக்கும் இன்பமும், உற்சாகமும் வேறு எதிலுமே இல்லை. பிரியமானவர்களின் மலர்ச்சிக்காகச் செய்யும் தியாகத்தில் இனிமை இருக்கிறது.....''

இப்படி எழுதி விட்டு டைரியைப் புரட்டினான். பரீட்சை நடந்த சமயத்தில் டைரியில் எழுதிய பகுதிகளைப் படித்தான். அதில் அவன் எழுதியிருந்தான் :

''... கேள்விகள் அனைத்தும் இலகுவானவையே. ஆனால், ஒவ்வொரு பரீட்சையிலும் சில கேள்விகளுக்கு வேண்டுமென்றே விடை எழுதவில்லை. சாரதா என்னை வெற்றிகொள்ளட்டுமே. மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பதில் எவ்வளவு இன்பமிருக்கிறது......''

அந்தப் பழைய நினைவுகள் இப்போதும் நெஞ்சில் இனிமையைப் பொழிகின்றன. தன் தோல்வியிலேயே இனிமையை அப்போது உணர்ந்த நினைவு, இப்போதும் இனித்தது.

கடந்த கால நினைவுகளுக்குள் புகுந்திருந்த முரளி, சுயநினைவை அடைந்தபோது அவனுடைய கார், பேராசிரியரின் வீட்டை நெருங்கிவிட்டது.

போர்டிகோவில் காரை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கி நின்று வராந்தாவைக் கவனித்தான் முரளி. வராந்தா விளக்குகள் அணைந்திருந்தன. வீட்டினுள் எரிந்து கொண்டிருந்த விளக்கின் ஒளிதான் வராந்தாவில் விழுந்துகொண்டிருந்தது. அவனுடைய இதயத்தைப் போலவே அந்த வீடும் ஒளி இழந்திருந்தது.

அவனுடைய காரின் சத்தம் கேட்டதும் வழக்கமாகக் கமலசாமியோ அல்லது சாரதாவோ வெளியே வந்து அவனை வரவேற்பார்கள். இன்று, யாருமே வீட்டினுள்ளிருந்து வெளியே வரவில்லை. வேதனையின் அழுத்தம் நெஞ்சை நெருக்க மிகுந்த சோர்வுடன் சிறிது நேரம் வராந்தாவிலேயே நின்றான். திரும்பிப் போய் விடுவோமா என்றுகூட நினைத்தான். ஆனால் கமலசாமியின் இருமல்ஒலி வீட்டினுள்ளிருந்து வரவே, முரளி, வீட்டினுள் எட்டிப் பார்த்தான். முன் பக்கத்து அறையில் பேராசிரியர் ஒரு சாய்வுநாற்காலியில் அமர்ந்திருப்பது தெரிந்தது. வாயில் சுருட்டு புகைந்து கொண்டிருந்தது. சுற்றுப் புறத்தின் நினைவற்று ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் கிடந்தார்.

முரளி, அந்த அறைக்குள் நுழைந்து கமலசாமியின் பக்கத்தில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான். அப்போதுதான் சுய நினைவடைந்து முரளியின் பக்கம் திரும்பினார், கமலசாமி. அவருடைய முகத்தில் எப்போதும் குடிகொண்டிருக்கும் மந்தகாசம் அப்போது இல்லை. தீவிரமான சிந்தனைச் சுழலில் சிக்கித் திணறிய களைப்பு அவருடைய முகத்தில் தெரிந்தது. முரளியைக் கண்டதும் வாயிலிருந்த சுருட்டைக் கையில் எடுத்துக் கொண்டார்.

''ஓ.......! நீ வந்ததுகூடத் தெரியாமல் எதையோ நினைத்துக் கொண்டிருந்து விட்டேன் '' என்று கூறிக் கொண்டே எழுந்தார். முரளியும் எழுந்து நின்றான். இருவரும் வராந்தாவுக்கு வந்து சோபாவில் அமர்ந்தார்கள். வராந்தா விளக்கை முரளி ஏற்றினான்.

"ஏன்டி லக்ஷ்மி! கிளாசுக்கு ஏன் இவ்வளவு லேட்? வெளியே நில்."

"என்னடீ! வெட்கமில்லாமே வெளியிலே நிற்கிறதல்லாமே வேடிக்கை வேற பார்க்கறே?"

"இல்லே டீச்சர்! அவ கட்டிண்டு இருக்காளே அந்த பாவாடையைத் தான் பார்க்கிறேன்."

"அது என்னடீ! அவ்வளவு அதிசய பாவாடை? நானும்தான் பார்க்கறேன். ஓ! அது 'சாஸ்திரி கடை' பாவாடைன்னு."

"அது எப்படி டீச்சர் அவ்வளவு கரெக்டா கண்டு பிடிச்சுட்டீங்க?"

"இது என்னடீ அதிசயம்? எங்க குடும்பமே அவாகிட்டதான். எங்க பாட்டி காலத்திலேயிருந்து அவா புடவைதான். அவாள்து கட்டி கட்டி பழக்கமாய் விட்டதலே வேற வாங்கி கட்டினு சரிப்படலே. கூட அவா 'க்வாலிடி' பார்த்தவுடனே தெரியும்."

"சரி லக்ஷ்மி. உள்ளே வந்து உட்காரு. நீ கட்டிண்டிருக்கயே அந்த கட்டத்துக்கு என்ன பெயரு?"

"இதா டீச்சர். இது 'சாதனு' இன்னும் இதைப்போல எத்தனையோ தினுசு கட்டம். எத்தனையோ புது கலர். நாள்-ஆக ஆக 'வெரைட்டி' கிடைக்காது. அதனால்தான் இன்னிக்கு எங்க வீட்டிலே எல்லாருமே "சாஸ்திரி கடைக்கு" போயிட்டு வந்தோம். அதான் டீச்சர்! இன்னிக்கு கொஞ்சம் லேட் ஆயிடுத்து."

"பரவாயில்லே லக்ஷ்மி."

"ஆமாம் டீச்சர்! நீங்க எப்ப கடைக்கு?"

"அதுவா? இன்னிக்கே போக வேண்டியதுதான். என் 'ஸிஸ்டர்ஸுக்கு' வேற வாங்கி பார்சல் அனுப்பனும்."

"உங்க ஸிஸ்டர்ஸ் எந்தெந்த ஊர்லே இருக்கா?"

"அவாளா? கல்கத்தா, டெல்லி, ஜெம்ஷெட்பூர்லே இருக்கா."

"நல்லதா போச்சு டீச்சர். அந்த ஊர்லே யெல்லாம் "சாஸ்திரி கடை" ஜவுளி விற்கிறது. நோட் பண்ணிக்குங்க: கல்கத்தாவிலே :– 14-A, Park Side Road, Phone : 46-3976. புதுடில்லியிலே :– "MADRAS STORES", 96, Baird Road, Phone : 43632. ஜெம்ஷெட்பூர்லே :– "MADRASI SAMMELANI" 'L' Road. மதராஸில்தான் உங்களுக்குத் தெரியுமே. சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ், வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4. போன்: 71719."

"தாங்ஸ் லக்ஷ்மி. வெளியே நில்லுன்னு சொன்னேன்னு கோபிச்சுக்காதே."

''உன்னோடு நிறையப் பேச வேண்டியிருக்கிறது..... நல்லவேளை சாரதாவும் இல்லை'' என்றார் கமலசாமி.

''சாரதா எங்கே?'' என்று முரளி கேட்டான்.

''வெளியே போயிருக்கிறாள்'' என்று கூறிவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''நேற்று இரவு உன்னுடைய ஆபீஸைத் தாக்கினார்களே, காரணம் என்ன ?'' அக்கறையோடு கேட்டார்.

''கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கி எழுதினேன் அல்லவா, அதுதான் காரணம்.''

''அசட்டுத்தனம் ! இவன்களுக்கெல்லாம் பத்திரிகைச் சுதந்திரத்தையும், பத்திரிகைத் தர்மத்தையும் பற்றி என்ன தெரியப் போகிறது? இருந்திருந்து இந்தக் கட்சியில் போய்ச் சேர்ந்திருக்கிறானே, சிவராமன்....'' என்றார் கமலசாமி வெறுப்புடன். சாரதாகூடத்தான் அந்தக் கட்சியில் சேரப் போகிறாள் என்று கூற நினைத்த முரளி, சொல்லாமலே நிறுத்திக் கொண்டான். அவளைப் பற்றிப் பேசவே அப்போது அவனுக்கு மனம் இல்லை. அவளைப் பற்றிய நினைவுகள் நெஞ்சில் கனத்துக் கொண்டிருந்தன.

''பயங்கரவாதிகள் நிறைந்தது அந்தக் கட்சி. நீ ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும், முரளி. கட்சிக்காக எதையும் செய்து விடுவார்கள். நீ ஒரு துப்பாக்கி வாங்கி வைத்துக்கொள்'' என்றார் பேராசிரியர். முரளி சிரித்தான்.

''பயந்து கொண்டே எத்தனை நாட்களுக்கு வாழ முடியும்?'' என்றான்.

''பயப்பட வேண்டியதில்லை. விழிப்புடன் இருக்கச் சொல்கிறேன்'' என்றார் கமலசாமி. பிறகு கேட்டார்: ''சிவராமனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

இந்தக் கேள்வி முரளியைத் திகைக்க வைத்தது. சிறிது நேரம் பதில் ஒன்றும் கூறாமல் அவரையே உற்றுப் பார்த்தான்.

அந்தக் கேள்வியை ஏன் கேட்டார்? சிவராமனைப் பற்றிப் பேராசிரியர் இப்போது சிந்திக்க வேண்டிய காரணம் என்ன........ ?

முரளி குழம்பினான். பேராசிரியர் முரளியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'' பொதுவாக உன் அபிப்பிராயம் என்ன ?''

''நல்லவன்... என்னுடைய நண்பன். ஏன், உங்களுக்குத்தான் அவனை நன்றாகத் தெரியுமே. உங்களுக்குத் தெரியாததையா நான் சொல்லிவிடப் போகிறேன் அவனும் உங்கள் மாணவன்தானே.''

''எனக்குப் பயமாயிருக்கிறது முரளி. என்னிடமிருந்து சாரதாவைப் பிரித்து விடுவானோ என்று பயப்படுகிறேன்'' என்றார் கமலசாமி.

அவருடைய குரலில் சிறிது நடுக்கம் இருந்ததைக் கவனித்தான் முரளி. அவருடைய பார்வையில் பயத்தின் சாயல் தோன்றியது. இழக்கக் கூடாத ஒன்றை இழந்து விடுவோமோ என்னும் பயத்தின் பரபரப்பு அவரிடம் காணப்பட்டது.

''பெண் என்றால் என்றாவது ஒரு நாள் பெற்றோர்களைப் பிரியத்தானே வேண்டும்?'' என்றான் முரளி.

பேராசிரியர் அவனைக் கூர்ந்து பார்த்தார். ''நான் அதைச் சொல்லவில்லை.

## 6,42,18,770

இவ்வளவு பேர் எக்ஸ்போ-70 கண்காட்சிக்குச் சென்று வந்திருக்கிருர்களாம். கண்காட்சி மைதானத்தில் ஐம்பத்தைந்து திருமணங்கள் நடைபெற்றன. ஒரு குழந்தைகூட பிறந்தது.

ஆதாரம்: டைம் தகவல்: 'பாலி'

தனிப்பட்ட முறையில் அவனைக் குறை கூற முடியாது. ஆனால் அவன் ஈடுபட்டிருக்கும் கட்சி பயங்கரமானது...... இவளையும் கட்சிக்குள் இழுத்துவிட்டால்....? மொத்தத்தில் அவனோடு இவள் பழகுவதையே நான் விரும்பவில்லை'' என்றார் கமலசாமி.

''அவனுடைய நட்பைச் சாரதா விரும்பும்போது....?''

''ஆரம்பத்திலேயே இதைக் கவனிக்கத் தவறி விட்டேன்'' என்று முணுமுணுத்தார் அவர்.

''கவனித்திருந்தால் மட்டும் இரண்டு பேர் பிரியமாக இருப்பதைத் தடுத்து விட முடியுமா?'' என்று கூறிவிட்டு இலேசாகச் சிரித்தான் முரளி.

''ஆரம்பத்திலேயே தடுத்திருந்தால், வளராமல் பார்த்துக் கொண்டிருந்திருக்கலாம்.''

''உங்கள் மீது சாரதாவுக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டு. இப்போதுகூட நீங்கள் தடுத்திருக்கலாமே?'' என்றான் முரளி.

''நோ, நோ.... இனி என்றால் முடியாது.... தனிப்பட்டவனுடைய சுதந்திரத்தில் எனக்கு மிகுந்த அபிமானம் உண்டு. அவனவனுடைய பாதையை அவனவன்தான் வகுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான நல்ல அறிவையும், சிந்திக்கும் சக்தியையும் தாம் ஒரு தகப்பன் தன் குழந்தைகளுக்குக் கொடுக்க முடியும். அதற்குப் பிறகு குழந்தைகளின் பாதை அவர்களுடைய சிந்தனையின் போக்கில்தான் செல்ல வேண்டும்.... ஆனால் அந்த நல்ல அறிவையும், சிந்தனு சக்தியையும், என் மகளுக்கு நான் கொடுக்கத் தவறிவிட்டேனே என்று அஞ்சுகிறேன்...... !''— இப்படிக் கூறிவிட்டு வெளியே பார்த்தார் கமலசாமி. வெளியே இருள் மூடிக் கிடந்தது.

''முரளி...! ஒரு தகப்பன் என்கிற முறையில் அவளிடம் இதைப் பற்றி எப்படி நான் அப்பட்டமாகப் பேச முடியும்? அவளுக்கு மட்டும் ஒரு தாய் இருந்தால்.....'' என்று கூறிவிட்டுப் பெருமூச்சு விட்டார். பேச்சை நிறுத்தி விட்டு மீண்டும் பார்வையை வெளியே செலுத்தினார். திடீரென்று திரும்பி முரளியைப் பார்த்து, ''முரளி! நீ இந்த விஷயத்தில் கொஞ்சம் விழிப்போடு இருந்திருக்கலாம்'' என்றார். இதைக் கேட்டு முரளி திகைத்தான்.

''மற்றவருடைய தனிப்பட்ட வாழ்க்கைச் சுதந்திரத்தில் தலையிட எனக்கு என்ன உரிமை இருக்கிறது.... ஒரு தந்தைக்கு இல்லாத உரிமையா, எனக்கு....?'' என்று கேட்டு விட்டு அவரை உற்றுப் பார்த்தான் முரளி.

''முரளி.... ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லு. சாரதா மீது உனக்கு அக்கறையே இல்லையா?....'' என்று கேட்டார் பேராசிரியர்.

இதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான் முரளி. அவன் கண்கள் படபடத்தன. நெஞ்சை அடைப்பது போலிருந்தது. பதில் ஏதும் கூற முடியாமல் திணறினான். குபீரென்று வியர்த்துக் கொட்டியது.

''எனக்குத் தெரியும், முரளி.... நீ அவள் மீது எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும்... இதை இரண்டு வருஷங்களுக்கு முன்னமேயே நான் புரிந்துகொண்டேன். எம். ஏ. பரீட்சையில் நீ பெயிலானதற்காகக்கூட வருந்தாமல் அவளுடைய வெற்றியை எண்ணி நீ உற்சாகம் அடைந்த போதே நான் புரிந்து கொண்டேன். அவளுக்காக நீ வேண்டுமென்றே பரீட்சையில் தோல்வியை ஏற்றுக் கொண்டாய் என்றுதான் சந்தேகிக்கிறேன்..... உன் மனம் எனக்குத் தெரியும். ஆனால்... ஆனால், உன்னை அவள் புரிந்து கொண்டதாகவே தெரியவில்லையே...?'' — மிகுந்த வேதனையோடு கூறிவிட்டு முரளியை அனுதாபத்துடன் பார்த்தார் கமலசாமி.

''நான் அப்படி....' நீங்கள் நினைக்கிறபடி....'' — முரளி பரபரப்புடன் பேசத் தொடங்கினான். கமலசாமி குறுக்கிட்டார்:

''நோ.....மறுத்துச் சொல்லாதே! எனக்குத் தெரியும்....நான் அதை வரவேற்கிறேன்...உங்கள் இருவரையும் எப்போதும் என் மனம் இணைத்தேதான் பார்த்துக் கொண்டிருக்கிறது'' என்று கூறிவிட்டுப் பேராசிரியர் மிகுந்த வாஞ்சையோடு அவனுடைய தொடையில் கையை வைத்து அழுத்தினார். அவருடைய பாச உணர்ச்சி அவனைச் சிலிர்க்க வைத்தது. (தொடரும்)

டாக்டர் சொன்னார். எழுதுகிறேன். இல்லையென்றால் தலையெழுத்தா என்ன? கேட்கிறேன்.

மனச் சுமையைத் தாளில் இறக்கிவைத்து விட்டு "அக்கடா" என்றிருங்கள் ஸார் என்றார். தட் வில் டூ யூ லாட் ஆஃப் குட்!"

காக்கா ஸைஷ்ஷ்! பல்லை உடைத்து, தொட்டியில் போட்டு ஆராரோவும் பாடுவார்கள் இந்த டாக்டர்கள். மனம் மலமென்று அல்லோபதிகூட ஸனாதனமாவது வருத்தமாக இருக்கிறது.

எழுதத்தான் போகிறேன். யாரையாவது கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டும் போலிருக்கிறது. ஆனால் நான் இருக்கும் மேல்தட்டு நாகரிகத்தில் கொலை என்பது அற்பமான விஷயம். கொலையுணர்வுக்கு 'நகாசு' வேலை செய்து ரத்தத்தைக் கண்ணில் காட்டாமல் செய்யக் கூடிய கலைகள் ஆயிரம் இருக்க, கொலை செய்வானேன்?

பைத்தியக்காரன். என் டிரைவர் காளிமுத்துவைச் சொல்லுகிறேன். அவனுக்கு நளினக் கலைகள் எதிலும் தேர்ச்சி யில்லாததால், பச்சை ரத்தம் பெருகப் பெருகத் தன் மனைவியைக் கொன்றான்.

நான் எழுதுகிறேன், அதுவும் டாக்டர் சொல்லி.

"சோரம் போற களுதெங்களைக் கசாப்புக் கடையிலே வெட்டற மாதிரி துண்டு துண்டா வெட்டணும் ஸார்!" ஜெயிலில் போய்ப்

ஓய்ந்துபோன கிழட்டுக் கணவனைக் குரூரமாக ஆட்டி அலைக்கழிக்கும் இளம் மனைவியாக எழுத்து என்னைச் சித்திரவதை செய்கிறது.

மாயாவை ஆளமுடியவில்லை. எழுத்தை ஆள நினைக்கிறேன். மூளியைப் போலியான வெற்று வார்த்தைகளால் நிரப்பப் பார்க்கிறேன். தவிக்கிறேன்.

உள்ளக் குமுறல்கள் கத்திக்குத் தாவாமல் எழுத்துக்குத் தாவுவதால் விஷயம் வேறாகி விடாது. இது ஒரு கொலைதான். டாக்டரின் ஆலோசனைப்படி செய்யப்படும் கொலை.

கொலைதான் இயற்கையான நியதி. இந்தத் தத்துவத்துக்கு டார்வின் முத்திரை உண்டு. கொலை, உயிர்ப் போராட்டத்தின் — உய்வுப் பிணைப்பின் மிக முக்கிய அம்சம். தக்கதுதான் நிலைக்கும். தடியெடுத்தவன்தான் ராஜா.

அவள் ஒரு புதிர். மாயா இல்லை அவள். மாயை. பாம்பா பழுதையா என்று சொல்ல முடியாத ஒரு புதிர். சக்கரவட்டமாக, ஒரு கோட்டை இழுத்து 'இதற்குள் இருக்கிறதே, அதுதான் அது' என்று சொல்லக் கூடிய விஷயமில்லை. உபநிஷதங்கள் 'இது இல்லை, இது இல்லை' என்று சுற்றி வளைத்துவிட்டு, கடைசியில், 'அதுதான், அதுதான்' என்று எதையோ காட்டுகிறதே, அதுபோல்தான் மாயாவைப் பற்றியும் கூற வேண்டும். தர்பாரா, நாயகியா என்ற அர்த்தமில்லாத தவிப்பு!

# முடிச்சுகள்

## பொன்னித்துறைவன்

பார்த்தபோது என் டிரைவர் உதிர்த்த பொன்மொழி நினைவுக்கு வருகிறது.

வயிற்றெரிச்சலை வெட்டித் தீர்த்துக் கொள்வது அவன் வட்டத்து நியாயம். கீழ்த்தட்டு தருமம்.

எழுத்தில் கொட்டித் தீர்த்துக் கொள்வது எனது நாகரிகம்; வடிகால்.

எழுதுகிறேன்.

மசியாகப் புகுந்து எழுத்தாக வெளிவருவது ஓர் அற்புதம். ஒவ்வோர் எழுத்தும் ஓர் உயிர்த்துளி. குழந்தை.

அப்பப்பா! எவ்வளவு குழந்தைகள்! நான் பெற்ற செல்வங்கள்! எனக்குப் பிறந்த பிள்ளைகள்!

எனக்கா? குழந்தைகளா? பிரமை..அத்தனையும் பிரமை. கடைசல் பிடித்த பிரமை.

ஆயினும் எழுத்தைக் குழந்தையாகப் பாவிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் எழுத்துக்கூட என்னைத் தந்தையாக ஏற்க முரண்டு பிடிக்கிறது. சிந்தனை எழுத்தாகப் பரிணமிப்பதற்குள் காக்காய் கொத்திக்கொண்டு போய் விடுகிறது. அகப்பையிலிருந்து இலையில் விழாமல் தரையில் விழுந்து விடுகிறது.

எங்கு, எப்படி, ஏன் போய்விட்டாள் என்றும் என்னால் கூற முடியாது. திடீரென்று ஒரு நாள் அவளைக் காணோம். டாக்டர் என்னைப் பற்றி ஒரு பிரகடனம் விடுத்தார். அப்பிரகடனம் வெளியான சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் மாயாவைக் காணோம்.

மாயா போனதிலிருந்து தூக்கமில்லை. அப்படி அவள்மேல் உயிரையே வைத்திருந்தேனா என்றால் அதுவுமில்லை. உயிருக்குயிராய் நேசிக்கும் வழக்கம் எங்கள் வட்டத்தில் கிடையாது. உறவு என்று இருக்குமே ஒழிய ஒட்டிக் கொண்டு பிய்த்து எடுக்கிற மாதிரி ஒன்றும் நிகழ்ந்து விடாது. கொஞ்சம் சிந்தனை செய்தால் உறவு என்பதே கண்ணியமான வியாபாரம் என்பது விளங்கும். 'கொடுக்கல் வாங்கல்' இல்லாத உறவு கிடையாது. வாங்கல் என்றிருக்கிறபோது, அது வியாபாரம்தான். ஒன்றை எதிர்பார்க்கிறோம், ஒன்றைக் கொடுக்கிறோம். பிறக்கிறது உறவு. கணவன்–மனைவி உறவும் இதற்குட்பட்டதுதான். எதிர்

பார்த்தது கிட்டவில்லையானாலும் உறவு முறிவ தில் தவறில்லை. இது மேல் தட்டு நியாயம். நடுத்தர, மற்றும் கீழ்த்தட்டுக்காரர்களுக்கு இது புரியாது. அஞ்ஞானத்தில் உழலுபவர் களுக்கு விடிவு ஏது?

மாயா எந்த உலகம்? என் உலகத்தைச் சேர்ந்தவளா என்று கேட்டால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். என் உலகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டவள் என்பதுதான் பொருந்தும். குளவி கொட்டுவது போல் கொட்டிக் கொட்டி அவளை எனது சிந்தனை பரிபக்குவத்துக்கு இணையாகக் கொண்டு வரு வதற்கு நான் பட்ட பாடு எனக்குத்தான் தெரியும்.




மாயாவின் பூர்வோத்திரம் 'மிட்டில் கிளாஸ்' எனப்படும் இடைத்தட்டுத் தான். 'நாலு பேர்' என்ன சொல்லு வார்களோ என்று பயந்து பயந்து பாதை தவறும் பரம்பரைதான். எப்படியோ தடம் புரண்டு என் உலகத்துப் பக்கம் சாய்ந்து விட்டாள்.

நேற்று நடந்ததைப் போலிருக்கிறது. ஒரு லேடி செக்ரடரியை வைத்துக் கொள்ள நினைத்து பேப்பரில் 'பாக்ஸ்' விளம்பரம் கொடுத்ததைச் சொல்லுகி றேன். மனுக்கள் குவிந்தன. அவைகளி லிருந்த புகைப்படங்களைக் கண்ணோட் டம் விடும்போது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளைச் சொன்னால் விரஸமாக இருக்கும். ஆனால் கொழிக்கும் இளமை யைப் பிரதிபலிப்பதாக எந்தப் படமும் தோன்றவில்லை. விழிகளில் பளபளப்பை விடச் சோகமும் ஏக்கமும்தான் அதிகம் இருந்தன.

ஓர் அப்ளிகேஷனில் போட்டோ இல்லை. அது இருக்க வேண்டிய இடத் தில் ஒரு சித்திரம் வரையப்பட்டிருந்தது.

ஒரு பாம்பு. பக்கத்தில் ஒரு கயிறு. அதற்குக் கீழே அச்சடித்தாற்போல் கொட்டை எழுத்துக்களில் 'மாயா'

## அட்டைப் படக் கதை

என்ற பெயர். அதற்கும் கீழே நுணுக்கிய எழுத்துக்களில் ''நன்றி: சங்கரா'' என்று வரையப்பட்டிருந்தது.

மாயாவின் மனுவைப் படித் தேன். இரண்டே வரிகள்:

''நான் மந்தையோடு போகும் ஆடல்ல. தனி. மிகத் தனி. சுயம் வரத்துக்குரிய ஓலையை அனுப்பி வைத் தால் வந்து சேருகிறேன்.''

எனக்கு வியர்த்துவிட்டது. இப்படி ஒரு பெண் இந்த நாட்டில் இருக்கக் கூடுமோ என்ற நினைப்பில் நான் அப்படியே சமைந்துவிட்டேன்.

இன்டர்வியூவுக்கு மாயா வந்தாள். அவள் அருகுக்கு முன், மொழி ஒரு தோன்றினாள். அதை அப்படியே விவரிக்காமல் விட்டுவிடுகிறேன்.

நீட்டியா என் கரத்துக்குள் அவளது தந்தக் கை புகுந்து கொண்டது. இசைவான அச் செய்கை நம்பிக்கை யூட்டுவதாக இருந்தது.

''ஸோ நைஸ் டு ஹாவ் கம்!''

''தாங்க் யூ!''

''வெல், இது என்ன, இந்தப் பாம்பு, கயிறு, சங்கராவெல்லாம்?''

''அதுதான் மாயா!''

''வாட்?''

''நானில்லே. அது வேறு மாயா. மாயை, போதுமா?''

''நான் கேட்டிருந்தது போட்டோ அல்லவா?''

''போட்டோவுக்குப் பதில் ஒரு சித்தாந்தத்தைப் போடுவது மேல் என்று பட்டது. அந்தச் சித்திரங்களே என் பெயரை விளக்கப் போதுமானவையாகவும், புதுமையாகவும் இருந்த காரணத்தால் அப்படிச் செய்தேன்.''

''சித்தாந்தம் எங்கிருந்து வந்தது?''

''சங்கரான் பிலாஸபி தெரியாதா?''

''நீதான் சொல்லேன்!''

''சங்கரான் அத்வைதா... ஸர்பென்ட் அன் தி ரோப்... மாயா... மாயை... தெரியாது?''

''தெரியாதே!''

''த்ஸு த்ஸு த்ஸு! நிஜமாவே தெரியாது?''

''சத்தியமாச் சொல்றேன், தெரியாது. உனக்குத் தெரியுமா? கொஞ்சம் விளக்கமாச் சொல்லேன்!''

''ஸாரி! எனக்கும் தெரியாது! பெரிய ஜெனரல் மானேஜராச்சே, உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்னு நெனெச்சேன். எனக்கும் சத்தியமாத் தெரியாது! இப்போ என்ன பண்றது?'' அவள் கலகலவென்று சிரித்தாள். அவளது பல் வரிசையின் சிறப்பைக் கண்டு நான் பிரமித்தேன்.

பிறகு வெகு நேரம் பேசினோம். மற்றப் பெண்களை வீட்டுக்கு அனுப்பி விட்டு, சாவகாசமாகப் பேசினோம். பேசினோம், பேசினோம். அப்படிப் பேசினோம்.

விடைபெறும் நேரம் வந்தது. எனது கரத்தை நீட்டினேன். முன்பை விட அதிக இறுக்கமாக அவளது கையைப் பற்றி ஒரு குலுக்குக் குலுக்கினேன். விழிகளின் சந்திப்பில் ஒருவரையொருவர் எடை போட்டோம்.

''கங்கிராட்ஸ், மாயா! நாளையிலிருந்து நீ எனது அந்தரங்கக் காரியதரிசி!''

மாயா பதில் பேசவில்லை. மாறாக, தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

''வாட் இஸ் இட்!'' நான் பதறினேன்.

அழுகை அதிகமாயிற்று.

''வெரி ஸாரி. ப்ரொக்ரெஸிவ் டைப் என்று நினைத்தேன்....''

விசும்பலோடு மாயா இரண்டு வார்த்தை பேசினாள். ''அப்பாவுக்குத் தெரிஞ்சா என்னைப் பற்றி எவ்வளவு கேவலமா நினைப்பார்?''

ஒரு கணம் அசந்து விட்டேன். அடுத்த நிமிஷம் ஊரைக் கூட்டுகிற மாதிரி பலமாக வாய் விட்டுச் சிரித்தேன்.

மாயா அழுகையை நிறுத்தினாள். கண்களைத் துடைத்துக் கொண்டு என்னைப் பார்த்தாள். ''எதுக்குச் சிரிப்பு?'' என்பதுபோலிருந்தது அவள் பார்வை.

அவளது அசட்டுத்தனமான அழுகையில் ''மிடில் கிளாஸ்'' முத்திரை இருந்தது என்பதுதான் முக்கியம்.

இதை எதற்குச் சொல்ல வந்தேன்?

ஓ. எஸ். மாயா ஓர் இடைத்தட்டுக்காரி தான் என்பதை உணர்த்த இதைவிட ஒரு சிறந்த உதாரணம் இருக்க முடியுமா?

அரைக் கிணறு தாண்டும் அசட்டுக் கும்பல்.

அது போகட்டும். அந்த நிகழ்ச்சி எங்கள் உறவுக்கு வித்தாக அமைந்தது. எனக்கு ''பிரைவேட் செக்ரடரியாக'' வந்து அமர்ந்தாள் மாயா. வேலையென்று ஒன்றும் கிடையாது. கை நிறையச் சம்பளம். அவளுக்கு அது மிகவும் உதவியாக இருந்தது. கல்லூரி, ஹைஸ்கூலில் படிக்கும் தம்பி தங்கைகள் வேறு. ஓரிரண்டு முறை என்னை அவள் வீட்டுக்கும் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தாள். மாயா கவர்ந்த அளவுக்கு அவள் வீட்டிலிருந்த மற்ற யாரும் என்னைக் கவரவில்லை. ரொம்ப ரொம்பச் சாதாரணமான மனிதர்கள். சவுக்கு விறகு வைத்துச் சமைக்கும் குடும்பம். சிக்குப் பிடித்த ஈஸிசேரில் அமர்ந்தபடி அனவரதமும் செய்தித் தாள் படிக்கும் அப்பா. எப்பொழுதும் ஆவி பறக்கும் அலுமினியக் கரண்டியோடு வந்து குசலம் விசாரிக்கும் அம்மா. நடுத்தர வகுப்பிலும் கடைசித் தட்டு.

எனக்கும் மாயாவுக்கும் இருந்த உறவுக்கு அவர்களது மறைமுக ஆசி இருந்ததையும் நான் உணர்ந்தேன். இருந்தும் அவர்கள் என்னைக் கவரவில்லை. அவர்கள் காட்டிய அதீதமான பரிவும், உபசரணையும் அவர்களது பேராசையைத்தான் வெளிப்படுத்தினவேயன்றி, என்னிடம் விசேஷ மரியாதை இருந்ததாகப் படவில்லை. என்னை அறியாமலேயே என்னுள் ஒரு கசப்புணர்ச்சி தோன்றி, அவர்களை எப்படியும் விலக்கிவிட வேண்டுமென்று ஓர் உணர்வு ஏற்பட்டது.

ஒரு வழி செய்தேன். முன் பின் ஒன்றும் சொல்லாமல் ஒரு நாள் எல்லாவித முன்னேற்பாடுகளுடனும் ரிஜிஸ்தார் ஆபீஸுக்கு மாயாவை அழைத்துச் சென்றேன்.

போகும் வழியில் காரில் மாயாவிடம் விஷயத்தைச் சொன்னேன். அவள் ஒரேயடியாகக் குழம்பிப் போய்விட்டாள். ''அப்பா என்ன நினைப்பார்?'' என்ற பல்லவியைத் தொடர்ந்தாள். இலேசாக அழக்கூட ஆரம்பித்ததாக நினைவு. ''அப்பாவிடம் நான் சொல்லிக் கொள்கிறேன்'' என்று ஆறுதல் சொன்னேன். அவள் சிணுங்கினாள். நான் காரை ஓர் ஓரமாக நிறுத்தினேன். பிறகு அவள் பக்கமாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டு, ''உன் ஸென்டிமென்டல் அப்ஜெக்ஷனை யெல்லாம் மூட்டை கட்டி வச்சுடு. இதுக்கு இஷ்டமா இல்லையா? நான் பலவந்தப்படுத்தப் போறதில்லே... சொந்த முறையில் என்னைக் கேட்டால் எனக்கு இதுகூட அவசியமில்லே. பேசாமல் உன் வீட்டை விட்டுட்டு என் பங்களாவுக்கே வந்துட்டேன்னு, அதுவே போதும்... இருந்தாலும் உனக்கு ஒரு திருப்தி இருக்கணும்னுதான் இதுக்கு ஏற்பாடு செய்தேன். இப்போ என்னடான்னா நீ முகத்தைத் தூக்கிக்கிறே! ஹூம், சொல்லு?''

சிறிது மௌனத்துக்குப் பிறகு அவள் பேசினாள். ''எனக்குப் பயமா யிருக்கு. 'என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லலே

யே'ன்னு அப்பா கேட்டால் என்ன சொல்றது?''

''சொல்லத்தானே போறோம்? இது முடிஞ்ச உடனே காரை நேரா உங்க விட்டுக்கு விட வேண்டியதுதான்...''

''இது என்னமோ பாந்த மில்லாமல் இருக்கே!''

''எது பாந்தமா இருக்கும், அதைச் சொல்லு கேட்டுக்கிறேன்...''

''ஒரு மேளச்சத்தம் இல்லாம, அக்னி இல்லாம, மந்திரமில்லாமே...''

''ஆரம்பிச்சுட்டே பார்த்தியா?''

''எனக்குத் நிஜமா இருக்கு!''

''நீ ஒரு பைத்தியக்காரி!''

''மூணு முடிச்சு ஏறாமல் அது எப்படிக் கல்யாணம் ஆகும்? இல்லே, கேட்கிறேன்...''

சட்டென்று 'பன்னெண்டு பன்னெண்டு நூற்றி நாற்பத்தி நாலு' என்று சொல்ல வராத நாகரிகம் இந்த இடைத்தட்டு நாகரீகம். ''ஒரோண் ஒண்ணு'' என்று அடியிலிருந்து ஆரம்பித்தால்தான் அவர்களுக்கு ஒரு பத்திரமிருக்கும். மாயா கேட்டது அது மாதிரி இருந்தது.

என்னைப் பொறுத்த வரை இரண்டாண்டுகளுக்கு மேல் அவ்வளவு அந்தரங்கமாகப் பழகிவிட்டு, கல்யாணம் என்று ரிஜிஸ்தர் ஆபீசுக்குப் போவதே, ராகம் — தானம் — பல்லவியை முடித்து விட்டு அடதாள வர்ணத்தை எடுத்துக்கொள்வது போல் சம்பந்தமில்லாமல் இருந்தது. நடுவில் 'மூன்று முடிச்சு' பாவனையும் குறுக்கிட்டது எனக்குப் பிடிக்கவேயில்லை. முடிச்சு முடிச்சாக உறுத்துவது போலிருந்தது. மாயாவின் கழுத்தின் மென்மையில் மூன்று முடிச்சுக்களைப் பொருத்திக் கற்பனை செய்வதுகூட என் ரஸனைக்கு சூனி வந்து விட்டது போல் தோன்றிற்று.

''ப்ளீஸ்! இந்த உபயோகமற்ற பத்ததிகளிலிருந்து விடுபட்டு நாம் வாழ முடியாதா? மேலிருந்து தொங்கும் பாரம்பரியக் கயிற்றின் முனையைப் பிடித்துக் கொண்டு அந்தரங்கத்தில் காற்றை உதைத்துக் கொண்டுதான் தவிக்க வேண்டுமா? புதிய பாதையில் கால்கள் பதியப் பதிய நடப்பது உனக்கு இதமாக இருக்காது? சொல்லு மாயா, ப்ளீஸ், சொல்லு...''

எனது சட்டைப் பொத்தானைத் திருகிக் கொண்டே குனிந்து தனது தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்தாள் மாயா. அந்தப் பார்வையில் ததும்பியது, கெஞ்சலா, கண்டிப்பா, கோபமா, ஏமாற்றமா என்பதை என்னால் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. பிறகு என்னை இறுகத் தழுவி எனது மார்பில் முகத்தைப் பதித்தவாறே சில கணங்கள் இருந்தாள். பிறகு கேட்டாள் ஒரு கேள்வி: ''அப்படியென்றால் பதிவு மட்டும் செய்வானேன்?''

''சபாஷ்!'' என்று துள்ளிக் குதித்தேன். ''அதைத்தான் உன்னிடமிருந்து எதிர்பார்த்தேன். நீயே சொல்லிவிட்டாய். உன்னைப் பாராட்ட வார்த்தை இல்லே...''

மாயா பேசாமலிருந்தாள்.

''நாளையிலிருந்து உனது இருப்பிடம் ஸாரி, நமது இருப்பிடம்....?''

''பங்களா'' என்று முடித்தாள் மாயா.

''உனது பெற்றோர்கள்?''

''கவலைப் படவேண்டாம்!...''

இப்படியாக மாயா என் பங்களாவுக்கு வந்து சேர்ந்தாள். அவள் பெற்றோர்களிடம் என்ன சொன்னாள் என்பதைப் பற்றி நான் கேட்கவில்லை. அதைப் பற்றி நான் கவலைப் படவுமில்லை. மாதா மாதம் எனது 'காரியதரிசி'யின் சம்பளத்தை மட்டும் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன், மாயாவின் விருப்பப்படி.

நாங்கள் செய்து கொண்ட இந்த ஏற்பாட்டில், ஏதோ ஓர் இடத்தில் வியாபார வாடை வீசுவதை நாங்கள் இருவருமே உணர்ந்தோம். வாங்கியது யார், விற்றது யார் என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அந்த ஏற்பாட்டில் பணம் ஒரு முக்கிய அங்கம் வகித்தது. அவ்வளவுதான். பணம் அங்கம் வகிக்காத இடம் கிடையாது என்று தெளிந்தவர்களுக்கு விரஸம் கிடையாது. வெட்டிப் பேச்சு வேண்டாம். பணத்தின் அருமை பணக்காரனுக்குத்தான் தெரியும்.

**நா**னும் மாயாவும் ஒரே வீட்டிலிருந்து கொண்டு தாம்பத்தியம் நடத்த ஆரம்பித்த பன்னிரண்டாவது மாதம் அது பிறந்தது. எது? ஏமாற்றம்.

குழந்தை வேண்டும் என்று ஏங்கிய நாங்கள் டாக்டரிடம் போனோம். இருவரையும்

சாதாரண ஆண்டும் கல்கியில் இடம் பெறும் சிறப்புச் சிறுகதைகள் அனைத்திலும் சிறந்த சிறுகதையைத் தேர்ந்தெடுப்பதில் வாசகர்களாகிய உங்கள் அபிப்பிராயமும் கோரப்படுகிறது. ஆகவே இந்த இதழையோ அல்லது இந்தக் கதை அச்சாகியுள்ள பக்கங்களையோ பத்திரமாக வைத்திருக்கவும்.

**ஆசிரியர், கல்கி**

'சோதனை'களுக்கு உள்ளாக்கிக் கொண்டோம். ரிஸல்ட் வந்தது. மாயா பாஸ். நான் பெயில்.

மயக்கத்தில் இமைகள் மூடின. உள்ளுணர்வு வீறு கொண்டெழுந்தது. அழுதது: புலம்பிற்று; சிரித்தது. விரக்திப் போர்வைக்குள் புகுந்து கொள்ளப் பார்த்தது. முடியாமல் தவித்தது. ''மாயா, மாயா'' என்று உள்ளுணர்வு எழுப்பிய விறல் ரத்த ஓட்டத்தை ஸ்தம்பிக்கச் செய்தது.

தோற்றங்களும், பிரமைகளும், ஆசைகளும் நிராசைகளும் இல்லையென்றால், உலகம் ஒரு சுடுகாடு. மாயச் சேலையால் போர்த்தப்படாத உண்மை ஓர் உண்மையா? ஆண்டவன் படைத்த ஆக்க இலக்கியம் மாயை. இலை மறை காய் மறைவாயிருக்கும் உண்மையைத் தேட வேண்டும் என்ற உந்தலுக்கு வித்திடுவது மாயை.

மாயையின் தரிசனம் முடிந்து பிரக்ஞை வந்தபோது மாயாவின் முகம் தெரிந்தது.

மாயா ஒரு வாரம் சேர்ந்தாற்போல் அழுதாள். அவளிடம் நெருங்குவதற்கே எனக்குக் கூச்சமாய் இருந்தது.

டாக்டரின் பிரகடனத்துக்குப் பிறகு மாயாவின் அழுகு எனக்கு ஒரு பாரமாகி விட்டது.

''வேண்டாம் இப்பொழுது'' என்று அருப்புச் சீட்டை என் கையில் வைத்திருந்ததாகக் கனவு கண்டு கொண்டிருந்த நிலை மாறி, ''முடியாது'' என்ற நிதரிசன நிலை என்னைப் பிழிந்தெடுத்தது. தாழ்வுணர்ச்சி விகவரூபமெடுத்து, ஆணவேண்டுமென்ற அரக்கவெறி எழுந்தது. விழிப்பான கண்காணிப்புக்குள் இருக்க வேண்டிய பரிசுப் பொருளாக மாயா மாறிவிட்டதாக ஓர் எண்ணம் வலுப்பட்டது. மேல் தட்டுக்காரியாக மாற வேண்டுமென்று நான் அவளுக்குச் சொல்லிக் கொடுத்த பாடங்களையெல்லாம் மறக்கடித்துவிட வேண்டும் என்று துடித்தேன்.

சும்மாக் கிடந்த சங்காகத்தானே இருந்தாள் அவள்? நான்தானே எடுத்து 'பூம் பூம்' என்று ஊதித் தொலைத்தேன்?

அவளுக்குக் கர்நாடக இசையில் ஏழு வருஷப் பயிற்சி இருந்தது. தெருடலான உருப்படிகளை யெல்லாம் கட்டுக்கோப்புச் சிதறாமல் வார்த்தைகளைச் சிதைக்காமல், சுருதி, தாள வரைகளுக்குட்படுத்திப் பிசிறில்லாமல் பாட அவள் பயின்றிருந்தாள். ஏன், சில சம்பூர்ண ராகங்களுக்குக் கற்பனு ஸ்வரம் போட்டுப் பாடுவதற்குக் கூடப் பாண்டித்தியம்இருந்தது. ரொம்ப சரி. ஆனால் அத்தனையும் இடைத்தட்டு நாகரிகம்தானே? 'காக்டெயில்', 'பால் ரூம்' நடனம், காபரே ஆகியவைகளில் மூழ்கித் திளைக்கும் மேல்தட்டுக்காரக் கணவனுக்கு இணையான மனைவியாய்த் திகழ, வெறும் கர்நாடக இசை மட்டும் எவ்வளவு தூரம் கைகொடுக்கும்?

ஆக, சங்கை எடுத்து 'பூம் பூம்' என்று ஊதினேன் ஒரு நாள். வீட்டிலேயே பால்ரூம் நடனப் பயிற்சி ஆரம்பமாயிற்று. குரு விக்டர். கோவாக்காரன். திமிரான சதைப் பிடிப்பு, தடித்த அகலமான, முழுமையான உதடுகள், போதை யூட்டும் புன்னகை.

மாயாவிடம் எனக்கு நம்பிக்கை இருந்தது-அப்பொழுது.

டாக்டர் பிரகடனத்துக்குப் பிறகு என் பார்வையே மாறிவிட்டது. டப்பென்று ஒரு நாள் நடனப் பயிற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தேன்.

இன்னும் பல காபந்துகளையும் செய்ய முனைந்தேன்.

மாயாவின் உதடுகள் அளவுக்கு மீறிச் சிவப்பா யிருப்பதாக ஒரு நாள் எனக்குத் தோன்றிற்று. 'லிப்ஸ்டிக்' போடுவதிலும் ஏற்படும் சில தீமைகளைப் பற்றி எங்கேயோ படித்ததை யெல்லாம் மிகைப்படுத்தி அவளிடம் கூறி அதை நிறுத்திவிடும்படி சொன்னேன். தெருக்கோடியிலிருந்த 'ப்யூட்டி பார்லரு'க்குப் போவதைக்கூட எப்படியோ சொல்லித் தடுத்தேன். டெலிபோன் மணி அடிக்கும்போதெல்லாம் பாய்ந்து சென்று நானே ரிஸீவரை எடுத்து, அது மாயாவுக்காக இருந்தால், யார், என்ன என்று குடைந்து விசாரித்த பிறகுதான் அவளிடம் கொடுப்பேன். அவள் பேசி முடிக்கும் வரையில் நகர மாட்டேன். ஆபீஸ் பக்கம் போவதையே மறந்தேன். அடைகாப்பது போல் மாயாவை எனது பிரத்தியேகக் கண்காணிப்பில் வைத்தேன். நான் வெளியே போக நேரிடும் போதெல்லாம் இந்தக் கண்காணிப்பு உத்தியோகத்துக்கு வேலைக்காரியிடம் ரகசியமாகச் சொல்லி வைத்திருந்தேன். அதற்காக விசேஷ 'அலவன்'ஸும் கொடுத்தேன்.

ஆனால் மாயாவின் உணர்ச்சிகளை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. எப்போதும்போல் அவள் ஒரு புதிராகவே இருந்தாள். நான் செய்த கெடுபிடிகளுக்கு அவள் ஒரு வார்த்தை பேசவில்லை. ஏன் என்று கேட்கவில்லை.

என் கெடுபிடிகளின் விளைவு விபரீதமாயிற்று. உண்மையில் அவள் துறந்துவிட்ட அழகுச் சாதனங்களெல்லாம் சேர்ந்து என் மாயாவின் அழகை இத்தனை நாள் வெளிக்காட்டாமல் மூடி வைத்திருந்தன என்பதை முதன் முதலாக அறிந்து வெம்பித் துடித்தேன்.

அவள் உதடுகளின் இயற்கையான இளஞ் சிவப்பிலிருந்த யௌவனம் என்னைச் சித்திரவதை செய்தது. கன்னங்களின் ரோஸ், அசட்டையாக விடப்பட்டிருந்த கேசச் சுருள், பகட்டில்லாத காது, மற்றும் கழுத்தணிகள், சாதாரண நூல் புடவை எல்லாமாகச் சேர்ந்து அவளது இளமையையும் லாவண்யத்தையும் பன்மடங்கு பெருக்கிவிட்டன. அந்தப் போலிப் பூச்சற்ற உண்மையின் தேஜஸைக் கண்டு கண்கள் கூசின. சவுக்கடி பட்டவன் போல் துடித்தேன். ''இந்த யௌவன உடல் இருக்க வேண்டிய இடம் இதுவல்ல'' என்று சவால் விடுவது போலாகி விட்டது அவள் அழகு.

பிறகு ஒரு நாள் என் அகங்காரத்தையும் ஆண் நினைக்கும் அசட்டுத்தனத்தையும் விட்டு விட்டுத் தீவிரமாகச் சிந்திக்கையில் ஞானம் பிறந்தது. அது பிறந்த சுருக்கில் பட்டவர்த்தனமாகச் சொல்லியும் விட்டேன்.

''இல்லை, மாயா! நீ கெட்டிக்காரத்தனமாக ஒரு முடிவுக்கு வரவேண்டும். எனக்குத் துளிக்கூட அப்ஜெக்‌ஷனில்லை... தாபங்களை மூடிவைத்தால் ஒரு நாள் இக்கட்டான தருணத்தில் படீரென்று வெடித்துச் சிதறும். அந்தத் தருணம் எப்பொழுது வருமோ வருமோ என்று நடுங்கிக் கொண்டேயிருக்க எனக்குத் திராணி இல்லை. பாரம்பரியக் கயிற்றுச் சுருக்கிலிருந்து விடுவித்துக்கொண்டு புதிய பாதையில் கால்கள் பதியப் பதிய நடக்க வேண்டு மென்று சொன்னேனே, அதற்குரிய தருணம் இதுதான். நான் மூனி. களை... சாக்கு மூட்டை.... உனக்குப் பூரண சுதந்திரம் அளிக்கிறேன் மாயா... நீ எது வேண்டுமானாலும் செய்யலாம்...''

இதைச் சொல்லும்போதே எனக்கு ஓர் அசட்டுத்தனமான நம்பிக்கையும் இருந்தது. 'ஆம்ப்டர் ஆல்' மாயா ஓர் இடைத்தட்டுக் காரிதானே, சௌகர்யார்த்தமாக அவசரப்பட்டு எதையும் செய்துவிட மாட்டாள் என்று முட்டாள்தனமாக நம்பினேன்.

மாயா விரக்தி போதை ஒரு பார்வை பார்த்தாள். பிறகு இலேசாகச் சிரித்தாள்.

# மனநிம்மதிக்கு ஐ.ஓ.பி யில் ஒரு பிக்சட் டிபாசிட் கணக்கு

மறவாதீர்கள்! வருடத்திற்கு ரூ. 3000 வரை வட்டியாக கிடைக்கும் பணத்திற்கு வருமானவரி கிடையாது. மேலும் ரூ. 1,50,000 வரை பாங்கில் டிபாஸிட் செய்யும் தொகை சொத்து வரியினின்றும் விலக்கப்படுகிறது.

**ஐ.ஓ.பி.யுடன் உங்கள் சேமிப்பும் வளரட்டும்.**

**இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்**

மத்திய அலுவலகம் : 151, மவுண்ட்ரோடு சென்னை-2

IOB-5817

மறுநாள் அவளில்லை. கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியேறினதாகக் கூர்க்கா சொன்னான்.

அறிவையும் மீறிக் கொண்டு திமிறி வெளியேறும் இயற்கையான ஏக்கங்கள் அவரவர்கள் மனோநிலைக்குத் தக்கவாறு எல்லோரையுமே — மேல் தட்டுக்காரர்கள் உள்பட நீ அழித்துக் கொண்டிரா விட்டால் இந்த மனுஷ ஜாதிக்குச் சாவேது?

உறவு போய் ஏக்கம் மிஞ்சிற்று. தூக்கம் போயிற்று. 'மனம், மனம்' என்றார் டாக்டர். எழுதச் சொன்னார்; எழுதுகிறேன். இது கதையல்ல; மருத்துவ சிகிச்சை.

மனம் என்பது ''பிளீடிங் மதராஸ்''. சாயத்துக்கு மேல் சாயமாய்ப் பல வண்ணங்களைத் தன்னகத்தே அடக்கி வைத்து, கொதிக்கும் காலத் துளிகள் அமைக்கும் ''வெள்ளாவி''யில் ஒவ்வொரு ''சலவை''க்கும் ஒவ்வொரு வண்ணத்தை இழந்து, அடுத்த வண்ணத்தை ஏற்றுத் திகழும் சாயத் துணி. இல்லையென்றால் மாயாவிடம் நான் சந்தேகம் கொள்வானேன்? அல்லது அவள்தான் என்னை விட்டுப் போவானேன்?

நான் அவளைத் தேடி அலையவில்லை. மாறாக என்னையே நான் துருவித் தேடிக் கொண்டிருக்கிறேன். உள்ளுணர்வு புலம்புகிறது. தருணத்தின் பரபரப்பில் தும்மல், இருமல் போன்ற அனிச்சைச் செயல்களாய் நிகழ்ந்து விட்ட கடந்த கால நிகழ்ச்சிகள் அடித்துப் புரட்டிக் கொண்டு நினைவில் வருகின்றன. எங்கிருந்தோ வந்தாள். பாம்பும் கயிறும் வரைந்து என்னை வியப்பில் ஆழ்த்திக் களித்தாள். அந்தச் சித்திரத்தின் புதுமையை ரசித்தவனுக்கு அது உணர்த்திய தத்துவத்தை உணர முடியவில்லை. பூர்வம் என்ற நிலையில் தான் எல்லாம் புரிகிறது. வந்தவள் மாயா இல்லை; மாயை.

இதோ தபால்காரர் வருகிறார். ஒரு கவரை நீட்டுகிறார். அச்சுக் கையெழுத்து... மாயாவின் கடிதம்.

''நமஸ்காரம். ஆத்திரத்துடன்தான் கிளம்பினேன். வைராக்கியத்துடன் இருக்க வேண்டும் என்றுதான் நினைத்தேன். முடியவில்லை.

இதைத் தஞ்சாவூரிலிருந்து எழுதுகிறேன். இங்கு என் அத்தை இருக்கிறாள். இங்கு வருவதுதான் எனக்கு இதமாக இருந்தது. ஆனால் நான் எங்கு போனேன், ஏன் போனேன் என்றெல்லாம் நீங்கள் கவலைப்பட்டிருக்க மாட்டீர்கள். புதிய பாதையில் கால்கள் பதியப் பதிய நடப்பதற்குப் பர்மிஷன் கொடுத்தவராயிற்றே!

ஆயினும் என் அத்தை வீட்டுக்கு வந்த காரணத்தை உங்களுக்குச் சொல்லி வைக்கிறேன். இந்த வீட்டில் ஓர் அற்புதம் நிகழ்ந்து வருகிறது. எனது அத்தை புருஷன் இருக்கிறாரே அவருக்கு முப்பது வருஷங்களாகப் பாரிச வாயு. படுத்த படுக்கை. ஜீவச் சவம்! குழந்தைகள் கிடையாது. அத்தைக்கு அவர்தான் குழந்தை. தினமும் ஸ்நானம் செய்வித்து உடை உடுத்தி, வாயில் உணவையும் ஊட்டுகிறாள். முப்பது வருஷங்களாக அலுப்பில்லாமல் இதைச் செய்து வருகிறாள். இது ஒரு பதச் சோறுதான். இது போன்ற ஆயிரமாயிரம் குடும்பங்கள் இன்றும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கின்றன. 'மிடில் கிளாஸ்' என்று நீங்கள் இளக்காரமாகப் பேசும் வட்டாரத்தில் நடக்கிற விஷயம் இது. உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.. நம் விஷயத்தை ஆதியோடந்தமாக விளக்கி அத்தைக்குச் சொன்னேன். என்னைக் கட்டிக் கொண்டு ஓவென்று அழுதாள். பிறகு என்னைச் சமாதானம் செய்யும் வகையில், ''சரிதான். விடுடி. டாக்டர் சொன்ன ஆயிடுத்தா? அவனுக்கு மேலே இன்னொருத்தன் இருக்கான். நீ கவலைப்படாதே'' என்று சொல்லி எனக்குச் சில சுலோகங்களையும் சொல்லிக் கொடுத்து, ஒரு மந்திரத்தகட்டையும் கொடுத்திருக்கிறாள். ஆனால் நமது அறிவுக்கு இதெல்லாம் ஏற்காது. அது மகா சமுத்திரமாய் வளர்ந்துவிட்டது. அதன் உப்பில் கரைந்துவிட்ட நமக்கு ருசியே மாறிவிட்டது. ''நமக்கு'' என்று என்னையும் சேர்த்துக் கொள்ளத்தான் பார்க்கிறேன்.. இருந்தாலும் ஒட்டாமல் தனியாக நிற்பது போலத்தான் ஒரு பிரமை நிழலாடுகிறது. எனக்கு அறிவு வளரத்தானில்லை. ஔவையார் மாதிரி டமாரென்று கிழவியாகிவிட மாட்டோமா என்று எவ்வளவு நான் மனத்துக்குள் கதறியிருக்கிறேன்... எப்பொழுதையும்விட இப்பொழுது உங்கள் அருகில் இருக்க வேண்டிய முக்கியத்தை நான் பரிபூரணமாக உணருகிறேன். டாக்டர் பிரகடனம் என்னை வதைக்கவில்லை. உங்கள் சந்தேகம்தான் என்னை வாட்டியது. அந்த ஆத்திரத்தில்தான் கிளம்பிவிட்டேன். ஆனால் வைராக்கியம் கை விட்டு விட்டது. திரும்பி வரத் துடித்துக் கொண்டிருக்கிறேன். திரும்புவதற்கு உங்கள் அனுமதி தேவையில்லை... ஆனால் இன்னொன்றுக்கு உங்கள் அனுமதி வேண்டும்....மன்றாடிக் கெஞ்சுகிறேன்.... அந்த பாக்கியத்தை எனக்குக் கொடுங்கள். மூன்று முடிச்சுகளைப் போட்டு விடுங்கள்....

நமது படுக்கை அறையில் மாட்டுவதற்கென்று ஒரு பாலகிருஷ்ணர் படம் கொண்டு வருகிறேன். படம் சற்றுப் பெரிதாக இருக்கும். காருடன் ஞாயிற்றுக்கிழமை காலை உங்களை ஸ்டேஷனில் எதிர்பார்க்கும் ...மாயா''.

இனியும் எழுதிக் கொண்டிருந்தால் நான் ஒரு முட்டாள்.

## அக்டோபர் ஜாக்கிரதை!

இது அக்டோபர் மாதம். தினப்படி கிழிக்கும் தாள்கள் கொண்ட 'காலண்டர்களில்' முக்கால் வாசிக்குமேல் கிழிபட்டு காலண்டரின் பின்புறத்திலிருந்து தாள்களைப் பொருத்துவதற்காக அடிக்கப்பட்ட ஆணிகள் நீட்டிக் கொண்டிருக்கும். அசதி மறதியாய்ச் சாய்ந்து விடாதீர்கள்!

—தேஜ்

## வெறும் கனவல்ல!

ஆர். எல். ஸ்டீவன்ஸனுக்குப் பல கற்பனைகள் கனவிலே உதித்தவைதாம்! 'டாக்டர் ஜெக்கில் அன்ட் மிஸ்டர் ஹைட்' கதை கனவில் உருவானதே.

கவிஞர் கோலிரிட்ஜ் கனவு கண்டு எழுந்து பேனவுடன் எழுத ஆரம்பித்து விடுவார். அவரது மகத்தான பிரசித்தி

யான ''குப்ளாகான்'' கனவில் பிறந்ததே!

ஐஸக் நியூட்டன் கணிதப் பிரச்னை பலவற்றுக்கு வழி கண்டு பிடித்ததும் கனவு மூலமே!

நீரழிவு நோய்க்குக் கண்டு பிடிக்கப்பட்ட 'இன்சுலின்' தோன்றக் காரணமும் கனவு தான்.

தொகுப்பு: ஏ. சுவாமிநாதன்



ஆசிரியர்: மின்னலுக்கும் மின்சார சக்திக்கும் என்ன வித்தியாசம்?

மாணவன்: மின்னலுக்கு மாதா மாதம் பணம் கட்ட வேண்டாம்!

- 'ஜெயந்தி'

ஒழுக்கம் பிச்சைக்கார உருவில் இருந்தாலும் கௌரவிக்கப் படும் - ஜெர்மானியப் பழமொழி

- ரூபி

சந்திரன்:

"நாளைக்கு அமாவாசை சார், லீவு வேணும்!"

"முரளி"



## சமையலறையில் கம்ப்யூட்டர்

1972ல் ஜெர்மனியில் 'மியூனிச்'சில் நடக்கவிருக்கும் இருபதாவது 'ஒலிம்பிக்' பந்தயங்களுக்கான ஸ்டேடியங்கள் ஏற்கனவே உருவாகத் தொடங்கி விட்டன. சுமார் 10000 வீரர்கள் கலந்துகொள்ள விருக்கும் இந்தப் பந்தயங்களுக்கான செலவு 1000 மிலியன் ஜெர்மன் 'மார்க்கு'களுக்குமேல் ஆகுமாம்.

'ஒலிம்பிக் கிராம'த்தில் மூன்று சமையலறைகள் இருக்கின்றன. இவற்றில் உள்ள நவீன சாதனங்கள் ஐரோப்பாவில் எங்குமே காண முடியாதவை. தானே

இயங்கும் ஒரு வகைக் குக்கர், கம்ப்யூட்டரால் இயக்கப்படுகிறது. தேவையான மூலப் பொருள்களை மட்டும் கொடுத்து விட்டால் வறுத்தல், கொதிக்க வைத்தல், துண்டங்கள் போடுதல், இனிப் பூட்டுதல் எல்லாவற்றையும் செய்து மிக உயர்ந்த பண்டங்களை அது தயாரித்து விடுமாம். அவற்றைச் சாப்பிடக் காத்திருப்பவர்களுக்கு எங்கே இடம் இருக்கிறது என்று காட்ட விடுதிகளின் முகப்பில் இதற்கென்றே நிறுவப்பட்ட டெலிவிஷன்களும் இருக்கும்!

சமையலுக்கே 'கம்ப்யூட்டர்கள்' என்றால் பந்தயங்களின் நேரத்தையும், தூரத்தையும் துல்லியமாகக் கணக்கிடக் கருவிகளுக்குக் கேட்பானேன்!

தகவல்: ''கப்பல்''

மற்றவர்களைச் சிரிக்க வைக்க நான் விகடமாக எதுவும் பேச வேண்டிய தில்லை. நமது அரசாங்கம் செய்வனவற்றைச் சொல்வேன். அவ்வளவு தான். கேட்போர் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். - வில் ரோஜர்ஸ்

- வி. ந. ஸ்ரீதரன்

திருமண வயது தாண்டியும் கன்னியா யிருக்கும் பெண், தபாலில் போடாத கடிதம் போன்றவள்.

- குஜராத்திப் பழமொழி

- ரூபி

ஆஸ்திரேலியக் காதலர் இருவர் தங்கள் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டப் போவதில்லை. ஒன், டூ, திரீ என்று வரிசையாக அழைக்கப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். - டிட்பிட்ஸ் - நாயக்



"நம் வீட்டு 'செப்டிக் டாங்க்'குக்கு காலம் ஆயிட்டது போலிருக்கு..."

"உம்..."

நீலு எது சொன்னாலும் ராஜாராம் 'உம்' என்று சொல்லிவிட்டு அவளையே பார்த்துக் கொள்ளும்படி விட்டுவிடுவதுதான் வழக்கம்.

ஒவ்வொரு முறை தேர்தல் வரும்போதும், ஒவ்வொரு கட்சிக்காரருக்கும், 'பாதாளச்சாக்கடைத் திட்டத்தைத் தாம் கொண்டு வருவதாகச் சொல்லிக்கொள்ள ஓர் இலட்சியமாகப் பொதுமக்கள் இவர் கொண்டு வருவாரு, அவர் கொண்டு வருவாரு' என்று ஜனநாயக உணர்வுடன் அவரைப் பார்க்க ஒரு வாய்ப்பாக



# மல்லிகைப்பூ

## ராஜம் கிருஷ்ணன்

இன்னமும் அந்த வசதி கிடைக்காத நிலையில் இருப்பதால் ஊரின் ஒவ்வொரு தெருவிலும் அந்தச் சாக்கடைப் புதைகுழி இல்லாத வீடுகளும் பல இருக்கின்றன. காலை உதயத்தில் புகையிலையைச் சுருட்டி வாயில் அடக்கிக் கொண்டு பளபளவென்று மின்ன எண்ணெய் விட்டு வாரிய கொண்டையுடன் வலது மேலாக்கும் ராஜ கம்பீர நடையுமாக வாளியை எடுத்துக் கொண்டு தாய்க் குலத்தினர் அந்தந்த வீடுகளுக்குள் புகுந்து புறப்படுவது அன்றாடக் காட்சி. எனவே, நிரம்பிய வாளிகள் ஒவ்வொரு தெரு முனையிலும், சில வீட்டு வாசல்களிலும் அவற்றைச் சேகரித்துச் செல்லும் டப்பா வண்டி ஊர்வலம் வரும் வரையில் தெருவில் நடப்பவர்களின் கண்களையும் மூக்குகளையும் கவர்ந்து இழுத்துக் கொண்டு காட்சி அளிப்பதுண்டு. வண்டி ஒன்பது ஒன்பதரை மணிக்குத் தெருவை நிரப்பிக் கொண்டு வரும்.

ஒன்பது மணிக்கு நீலு குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, தெரு முனையில் தோன்றப் போகும் டப்பா வண்டியை எதிர்பார்த்து நிற்கிறாள். அவள் எதிர்பார்ப்பது போலவே, ஒற்றை மாட்டு வண்டி ஒன்று டகடகவென்ற தகர டப்பா ஒலிக்க, வண்ண வண்ண நூல் துண்டுகளால் பின்னப் பெற்ற முண்டாசுடன் அலட்சிய மிடுக்கோடு வீற்றிருக்கும் சாரதியுடன் பவனி வருகிறது.

நீலு தடுத்தாட்கொள்வது போல் குறுக்கே நிற்கிறாள்.

"ஏம்பா? செப்டிக் டாங்கைக் கொஞ்சம் துப்புரவு பண்ணணுமே?"

சாரதி சாட்டையுடன் கீழே துள்ளினாற்போல் குதித்து வருகிறான்.

"எங்கேம்மா? நம்மூட்லா?"

"ஆமாப்பா. பத்து வருஷமாச்சு."

வண்டி இல்லாமல் பார்த்தால் அவனையும் அந்த வண்டியையும் இணைக்கத் தோன்றவில்லை. முரட்டுத்தனத்துக்குரிய அம்சங்கள் ஏதும் இல்லாத வாளிப்பான தோற்றமுடைய இளைஞன். உயர் கல்வி கற்க, மெருகு பெற வரும் இளைஞர்களின் கண்களில் கூட அதிகமாக இந்நாட்களில் காண முடியாத கவடு படியாத ஒளி.

பெட்டிப் பலகைக்கு மேல் சரம் கசிந்த நிலத்தைப் பார்வையிட வந்த அவனுக்கு, அண்மையில் வேலியில் தன் பசும் கொடிகளை நீட்டிக்கொண்டு குவியலாக அடர்ந்திருக்கும் மல்லிகைப் புதரில் பார்வை பதிகிறது. பச்சைக் குவியலில் சலவை வெள்ளையுடன் குண்டு குண்டாகக் கட்டியிருக்கும் மல்லிகை அரும்புகள்....

"யம்மா, மல்லிப்பூத்தானே?"

"ஆமா..."

"குண்டுமல்லி. வாசம் ரொம்ப இருக்குமில்லே?"

நாற்றுப் புகைகுழியைப் பார்க்க வந்தவன் மல்லிகைப்பூ வாசனையைப் பேச வந்தது, அவளே எதிர்பாராத தொன்று.

"ஆமா. பாத்தியா? இதுதான் டாங்க். துப்புரவு செய்யணும்."

அவன் கால் பெருவிரலால் ஈர மண்ணைச் சீந்திப் பார்க்கிறான். "கிளீன் பண்ணலாம்மா. நான் வந்து செஞ்சிடறேன். யாரையும் கூப்பிடாதே."

"முனிசிபாலிடிக்கு எழுதணுமில்லே?"

"ரெண்டு ரூபா கட்டி சலான் வாங்கணும். அப்பத்தான் வண்டி குடுப்பாங்க. அதெல்லாம் நானே பண்ணறேன். நீ யாரிட்டயும் குடுக்காதே."

"அது சரி. என்ன ஆகும்?"

"எழுபது ரூபா ஆகும்."

"எழுபது ரூபாயா?"

"ஆமாம்மா. நீ யாரிட்ட வேணு கேட்டுப் பாரு. நாலாள் வேலை இருக்கும்..." என்று வேறு எங்கெங்கோ நாற்றிருபது நூற்றைம்பதுக்குத் துப்புரவு செய்த விவரங்களை விடுக்கிறான்.

"சரி. எனக்கு அதெல்லாம் வேணும். நான் இதில் போய் உங்களை மோசம் செய்ய மாட்டேன். எனக்கு இது விஷயம் தெரியாது. நீ நியாயமான கூலியைச் சொல்லு."

"நீ யாரிட்ட வேணு கேட்டுக்கம்மா. இது அறுபதுக்குக் குறையாது..."

"சரி. ஐயாகிட்டக் கேட்டு வைக்கிறேன். நாளைக்கு வா."

அவன் வாயிற்புறம் நோக்கிவிட்டுக் குரலைத் தாழ்த்துகிறான். "சரிம்மா. உனக்காக அம்பத்தஞ்சு வச்சுக்க. ஒரே பேச்சு. நீ ஒரு ஈ காக்காகிட்ட மூச்சு விடாதே. நானே வந்து சுத்தம் பண்ணிடறேன்."

"சுத்தமாப் பண்ணிடுவேல்ல?"

"எறங்கிப் படுத்துக் காட்ட மாட்டேன்?"

ஏன் கேட்டோமென்று பரிவு பிறக்கிறது. அவன் ஓடிப்போய் வண்டியில் ஏறிக் கொள்கிறான்.

**ம**றுநாட் காலையில் ராஜாராம் வெளிக் கிளம்பு முன் நகராட்சிக்கு வண்டிக்கான கோரிக்கைக் கடிதம் ஒன்று எழுதி வாங்கி வைத்துக் கொண்டு அவனுக்காகக் காத்திருக்கிறாள். ஒன்பது மணிக்கு வண்டி போகிறது. பல வண்ண முண்டாசு தெரிகிறது. ஆனால் அவன் இப்போது இறங்கி வரவில்லை. பதினொரு மணிக்கு வந்து கடிதத்தையும் இரண்டு ரூபாயையும் வாங்கிக் கொள்கிறான்.

"இன்னும் என்னப்பா ?"

"மேஸ்திரிப் பய பொல்லாத ஆளு. காப்பிக்குத் துட்டுக் கேட்பான். பிறவு வேறே கேட்பான். இன்னொரு ரூபா குடும்மா. நீ யாரிட்டயும் சொல்லாதே. ராத்திரி வந்து கிளீன் பண்ணிடறேன்."

பின்னும் ஒரு ரூபாயைக் கொண்டு வந்து கொடுக்கிறாள் நீலு.

அவன் மீண்டும் குழைந்து நிற்கிறான்.

"என்னய்யா ? இப்பவே உனக்கும் அட்வான்சு வேணுமா ?"

"ஐயோ, இல்லேம்மா.... வந்து...அந்தப் பூ.... மல்லிப் பூ.... அது... வீட்ல...இப்பத் தான் கண்ணாலங்கட்டி...."

முகத்தில் அந்தப் பலவண்ண முண்டாசைப் போல் உணர்ச்சிகள் மின்னுகின்றன.

"பூத்தானே? சரி, பறிச்சு வைக்கிறேன்!"

மாலை ஆறு மணிக்கு மேல்தானே வரப் போகிறான் ?

அவள் ஐந்தரை மணிக்கே நிலவுப் பாலில் குளித்துச் சிரிக்கும் மொட்டுக்களைப் பறிக்கிறாள்.

இளைஞன். புதிதாக மணந்து கொண்டிருக்கிறான்.

அவளும் காலையில் வாளி தூக்குபவளாக இருப்பாளோ ?

கருகரு வென்ற கூந்தலில் எண்ணெய் மின்னச் சிறும்பல் தெரியாமல் வாரி முடித்த கொண்டையில் மல்லிகைச் செண்டு வளையத் துடன் ஊரின் கழிமலங்களைக் கையில் ஏந்திக் கொண்டு செல்லும் அவளைக் கற்பனை செய்து பார்க்கிறான். பரிவு கனிந்து வேதனை குறு குறுக்கிறது.

இந்த மல்லிகை பூக்கும் நாளில் ஆசை யோடு மணவாட்டிக்குக் கொண்டு செல்லக் கேட்ட அவனுக்கு இந்த ஒரு நாள்தான் கொடுக்க வேண்டுமா ? பல நாட்கள் கொடுக்கலாமே ?

குண்டு மல்லிகையைக் கோத்து வட்டச் சரம் பின்னி வாழை இலைக்குள் வைக்கிறான். ஆனால் மாலைபோய் இரவு வந்தும், வண்டி வரவில்லை. பெரிய முண்டாசும் புஸ்தி மீசையுமாக ஒருவன் வாயிலில் நின்று கூப் பாடு போடுகிறான்.

''யாரம்மா ? யார் ஐயா, யார் வூட்ல?''

''ஏய்யா? யாரு?''

தோற்றமும் குரலும், அருகே நெருங்கும் துணிவை விழுங்கி விடுகின்றன. அவன் உள் வாயிலிலேயே நிற்கிறான்.

''முனிசிபாலிடி மேஸ்திரி. செப்டிக் டாங்க் கிளீன் பண்ணனும்னு சொன்னியா ?''

''ஆமா, வண்டிலே வருவாரே அவரு வந்து.....''

யாரிடமும் சொல்லாதே என்ற எச்சரிக் கையை மீறி உண்மை வெளியேறி விடுகிறது. நாவைக் கடித்துக் கொள்கிறான்.

''அவன் கிடக்கிறும்மா, திருட்டுப் பயல், அவன் இதுக்கு வரக் கூடாது. கிளீன் பண்ற வங்க வேற ஆளு.....''

''சரிப்பா, ஏதோ சொல்லிட்டேன், அவங் கிட்ட.....''

''என்ன பேசினே ?''

''என்ன வழக்கம்?''

''அறுபது ரூபா குடுத்திடு. அவன் மோசக் காரப்பய. ஒல்பாடி வேறேஆளு செய்யணும்.''

''சரி. சொல்றேன் போ. ஐயா வந்து ஏற்பாடு செய்வார்.....''

**ம**று நாள் மாலைக்குள், மேஸ்திரி அனுப்பி வைத்ததாக, ஒவ்வொருவராய் அவர்களுக்கே இந்தப் பணியை ஒப்புவிக்க வேண்டும் என்று பலர் வந்து போகிறார்கள். இந்த வெறுப்பூட் டும் வேலைக்கும் இவ்வளவு போட்டி இருக் கிறதா ? ஆண்டவனே !

மூன்று நாட்கள் மூச்சுப் பேச்சில்லை. பிறகு ஒரு நாள் பிற்பகல் மூன்று மணிக்கு மல்லிகைப் புதரடியில் நீலம் பச்சை மஞ்சள் சிவப்பு முண்டாசு தெரிகிறது.

''ஏம்பா ! வண்டி கொண்டாறியா, இன்னிக்கு ?''

''இப்ப வந்திடும்மா. ஒரு மணிலே கிளீன் பண்ணிடறேன். கடப்பாரையும் மம்முட்டி யும் கொண்டாங்க.''

''நீ ரெண்டு ரூபாய் கட்டி செலான் வாங் கினியா?''

''போம்மா, மேஸ்திரிப் பய ரூபாயைப் புடுங்கிட்டான். நான்தான் ஒருத்தரிடமும் சொல்லாதேன்னேனே. கேட்டியா?''

''ஏம்பா? நானு சொன்னேன்? பொழுது விடிஞ்சா பேர் பேரா வந்து எங்கிட்ட வேலை யைக் கொடுன்னு உயிரை வாங்கறாங்க!''

''சரி, கடப்பாரையைக் கொண்டாங்க.''

''இப்ப நீ இறந்தா யாரினும் கேட்டா என்ன சொல்லுவே? போறும் போகுதுன்னு இன்னொரு ரெண்டு ரூபா தரேன். கட்டிட்டுச் சாயங்காலமா வண்டி கொண்டாறியா?''

''சரி, கொண்டாங்க.''

''கடுதாசி வச்சிருக்கியா?''

''இருக்குது. ஊட்லே'' என்று வண்டியில் தாவி உட்கார்ந்து கொள்கிறான்.

அன்றும் அவள் மல்லிகைப் பூக்களைப் பறித் துச் செண்டு கட்டி வைக்கிறாள். அவனையும் வண்டியையும் தவிர்த்து, மேஸ்திரியும் இன் னும் மூன்று பேரும் வந்து போகிறார்கள்.

நாட்கள் ஓடுகின்றன.

ஒருநாள் பிற்பகல் மூன்று மணி இருக்கும். மீசைக்கார மேஸ்திரி குட்டையான ஒருவ னுடன் வந்து வாயிலில் நின்று கூவுகிறான்.

''என்னய்யா பொழுது விடிஞ்சா உங்க தொந்தரவு பெரிசாப் போச்சு. ஐயாவிடம் சொல்லி ஏற்பாடு பண்ணச் சொல்றேன். போங்க நீங்க!''

''கோவிச்சுக்காதேம்மா. வண்டி கொண் டாந்திருக்கோம்!''

அவளுக்கு அந்த இளைஞன் வரவில்லையே என்ற ஆதங்கம். மேலும் அவன் அவளிடம் எட்டு ரூபாய் வாங்கிப் போயிருக்கிறானே? இரண்டு ரூபாய் சில்லறை இல்லை என்று ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்தாள்.

''ஐயா தாம்மா வண்டிக்குப் பணம் கட்டிச் சலான் வாங்கி அனுப்பிச்சாரு. இதோ பாரு. இப்பவே கிளீன் பண்ணலாம்னுதான் வண்டி அனுப்பிச்சாங்க...''

மடியிலிருந்து மீசைக்காரன் ரசீதை எடுத்து அவளிடம் கொடுக்கிறான்.

''அப்ப... அந்த ஆள் எட்டு ரூபாய் வாங் கிட்டுப் போனானே, பணம் கட்டலே?''

பீப்பாய் வண்டியில் உட்கார்ந்திருந்த இளை ஞன் இப்போது குதித்து வருகிறான். கண் களில் அலட்சிய மின்னலில்லை. எதையோ அடக்கிய அமைதி. ''அந்த ரூபாயைப் புடிச்சுக்குங்கம்மா...''

''ஓ! நீயும் வந்திருக்கியா? சரி. சட்டுப் புட்டுன்னு வேலையை முடிங்க!''

கடப்பாரை, மண்வெட்டி, வாளி கயிறு களுடன் அவர்கள் வேலையைத் தொடங்கச் செல்கின்றனர்.

அவள் சன்னல் கதவுகளைச் சாத்துகிறாள்.

அப்படியும் நாற்றம் குபீலென்று கிளர்ந்து பரவுகிறது.

சிறு சிறு காயங்களைப் பல நாட்களுக்கு உண்டாக்குவதில் வேதனை அதிகமில்லை. உயி ருக்கும் அபாயம் தெரிவதில்லை. ஒரே வெட் டாய்ப் போடுவது போல் இது கொடுமை. ஒரு சமுதாயம் எளிய மக்களை இன்னமும் மனிதர்களாக்க அழுத்தும் கொடுமை யல்லாமல் இது என்ன? இத்தகைய நரகக் குழிகளைச் சேமித்து வைக்கும் ஓர் ஏற்பாடே எடுபட வேண்டும். இல்லையேல் முற்றிலும் இயந்திர மயமான அப்புறவு வசதிகள் இருக்கவேண்டும்.

இளைஞன்தான் குழி ஏராயங்களில் .காக்கலை வெட்டிக் கொண்டு வாரி வாரியாகத் தூக்கு

அரும்பும் இளம்
காதலைப் போன்ற
புதுமை!
ஸிகோவாவின் "பூலோன் கி பஹார்"
அணிந்துள்ள
ராக்கி பிஸ்வாஸ்

கிறான். மீசைக்காரன் பீப்பாயில் விடுகிறான். வண்டி கிளம்பிச் செல்கையில் காரமான புகையிலைத் தூள் புகையும் மணமும் இந்தக் குப்பியை வெல்லச் சூழ்கிறது. மீசைக்காரன் புகைக்கிறான். இளைஞனோ நல்ல நீரை விட்டு மேனியைக் கழுவிக் கொண்டு, "யம்மா, குடிக்கத் தண்ணி தாரீங்களா?" என்று கேட்கிறான்.

"நிறைய வச்சிருங்க, வாளியிலே. நான் குடிச்சிக்கிறேன்."

செம்பைக் கொண்டு வந்து அவள் நீட்டும் போது அவன் நெருங்கி சாடையாக, "யம்மா பணம் மொத்தத்தையும் குடுத்திடாதீங்க. மேஸ்திரி, அவன்தான், வந்து கேப்பான். குடுத்திடாதீங்க. எல்லாத்தையும் கொண்டு போயிருவான்!" என்று எச்சரிக்கிறான்.

பள்ளிக்கூடம் விட்டுக் குழந்தைகள் வருகின்றனர். அவளுக்குச் சன்னல் அருகில் நின்று வேடிக்கை பார்க்க நேரமில்லை. பொழுது குறுகி அந்தி மருகி வருகிறது. அவள் குத்து விளக்கை ஏற்றுகையில் குரல் ஒலிக்கிறது.

"எம்பா? இன்னும் குடிக்கத் தண்ணி வேணுமா?"

"இல்லேம்மா. இங்கே வந்து பாரு. சுத்தமா எடுத்தாச்சு!" இளைஞன் குழிக்குள் நிற்கிறான் போலிருக்கிறது. அவன் தலைகூடத் தெரியவில்லை.

"சும்மா இப்படி வந்து நின்னு பாரம்மா!" என்று தோட்டத்தில் கிடந்த ஓட்டைக் கள்ளிப் பெட்டி ஒன்றைக் கொண்டு வந்து போடுகிறான் மீசைக்காரன். அவனுடைய கண்கள் பழமாகச் சிவந்திருக்கின்றன. அவளுக்கு அருகில் செல்லத் துணிவில்லை.

"சரிதாம்பா. பார்த்தாச்சு?"

கடைசி வண்டியும் சேற்றை அள்ளிக் கொண்டு செல்கிறது. வராந்தா நடையில் புளித்த வாடை வீசுகிறது.

"பணத்தை இப்படிக் குடம்மா!"

அவன் சிவந்த கண்களுடன் நடையைக் கடந்து கூடத்துக்கே வருகிறான். அவளுக்கு இளைஞனின் எச்சரிக்கை நினைவுக்கு வருகிறது.

"அந்தாளுக்கிட்டத்தான் நான் பேசினேன்!"

"சரித்தாம்மா. நான் மேஸ்திரி. அவன் திருட்டுப் பயல். குடு இப்படிப் பணத்தை!"

முழுக்க முழுக்கச் சேற்றில் குளித்தவன் அவன். இவன் பணத்தை வாங்கிக்கொண்டு போக விடலாமா?

"இந்தாப்பா. நான் பேசியது அவன்கிட்ட. அவன்கிட்டக் குடுக்கிறேன். நீ கேட்டு வாங்கிக்கயேன்."

"இந்தாம்மா. தகராறு பண்ணுமெ நீ குடுக்கப் போறியா, இல்லியா இப்ப?"

நீறுவுக்கு நடுக்கம் உண்டாகிறது. அவள் கூடத்தில் நிற்கிறாள். அவன் கையில் அவள் ஐம்பது ரூபாய்களை வைக்கிறாள்.

"சொச்சத்தையும் குடம்மா."

மீசைக்காரன் அதட்டுகையில் இளைஞன் உடலைத் துடைத்துக் கொண்டு வாசலில் நிற்கிறான். "நான் அந்த ஆளிடம் மிச்சத்தைக் கொடுப்பேன்."

"அவனுக்கு நான்தான் குடுப்பேன்; குடம்மா!"

கையைத் திருகிப் பிடுங்கி விடுவான் போலிருக்கிறது. வேறு வழியில்லை.

"யம்மா? அவன்கிட்ட ஏம்மா குடுத்தீங்க? நான் முன்னமே சொன்னேனே? ஒரு தம்பிடி எனக்குக் குடுக்க மாட்டான்!"

"ஏலா! அவனுக்குச் சேர வேண்டியதைக் குடு!"

"சரிதாம்மா. திருட்டுப் பய. சுசரான் பெஞ்சாதியைக் கைபோட்டு இட்டுப் போயி வச்சுக்கிட்டவன்...." பேச்சு மிக மட்டரகத்தில் தொடருகிறது. இளைஞன் பரிதாபமாக நிற்கிறான்.

அவன் கூழையன் கையில் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை வைக்கிறான். மீதியைச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொள்கிறான்.

குபீரென்று எரிமலை வெடிக்காற் போல் இருக்கிறது. இளைஞன் அவன் மீது பாய்கிறான். அவன் சட்டையைப் பிடித்து இழுக்கிறான். இருவரும் கட்டிப் புரள்கிறார்கள். சொலபொலத்த வசைச் சொற்களில், குற்றச் சாட்டுக்களில் மீசைக்காரன் ஓர் இளம் பெண்ணை விட்டும் கொண்டு வந்தான் என்றும், அவளை இளைஞன் தன் வீட்டுக்கு அழைத்து வந்து வாழ்வதாகவும் புரிந்து கொள்ள முடிகிறது.

"ஏலா, அவளைக் கூப்பிடு, இந்தாப்பா!" அதிகப்படியாகத் தருவதாகச் சொன்ன பணத்தை இளைஞனுக்குக் கொடுக்கலாமே?

கூழையன் வண்டியில் ஏறி உட்காருகிறான்.

நீறு செய்வதறியாமல் நிற்கிறாள். வண்டி உருண்டு செல்கிறது. அவர்களும் சண்டை போட்டுக் கொண்டே தெருவுக்குச் செல்கிறார்கள்.

நீறு கதவைச் சாத்துகிறாள்.

குழி துப்புரவாகி விட்டது. மேலே பலகையை மூடி மண்ணைப் போட்டு நிரவியிருக்கிறான். காலிதும் சாக்குகளைக் கொண்டு மூடியிருந்த மல்லிகைப் புதரை மறுபடியும் சரியாக்கி யிருக்கிறான். மலர்கள் முகிழ்த்து வெடிக்க மெல்ல நெகிழ்கின்றன.

ஆசையோடு மல்லிகைப் பூ கேட்டானே? அயலான் மனைவிக்கா? நாற்றக் குழியில் உழல, அறிவையும் மென்மையான உணர்வுகளையும் மழுக்கிக் கொள்பவர்களிடம் திருமண உறவுகளின் ஆழமான பந்தங்களையோ, கடுமையான நெறியின் சட்ட திட்டங்களையோ எதிர்பார்ப்பதற்கில்லை. எனினும், அவன் மென்மையான உணர்வுகளை மழுக்கிக் கொள்ளவில்லை. நாற்றக் குழியைச் சகித்து, அபூர்வமான மல்லிகையின் வாசனையில் முகம் மலர்ந்தானே? அவளை வரம்பு மீறும் குற்றத்துக்கு ஆளாக்க மனம் வரவில்லை. அவனுக்கு மேலும் பத்து ரூபாயும் கொடுத்து மல்லிகைப் பூக்களையும் கொடுக்க வேண்டும் என்று அடுத்த நாளும் பல நாட்களும் காலை ஒன்பது மணிக்கு வாயிலில் வந்து பார்க்கிறாள்.

அந்தப் பய வண்ண முண்டாக தென்படவே யில்லை. வேறு எங்கேனும் வேலைக்குப் போய்விட்டானோ? அல்லது அடிதடி சண்டை முற்றி... என்ன ஆயிற்றோ? கசடுகள் கிளர்ந்து நெடியேறும்போது, மல்லிகை பேதையாய்த்தானே போகிறது?

# செக்கை கொடுங்கள்...



# அக்கணமே பணம் தருகிறோம்

உங்கள் நேரத்தை நாங்களும் மதிக்கிறோம். காத்திருக்கும் அலுப்பும், கால விரயமும் உங்களுக்கு இல்லாமல் தடுக்க, டெல்லர் முறையை முதலில் கொணர்ந்தவர்கள் நாங்களே.

சுரிதமான இந்த டெல்லர் முறையின்படி, நீங்கள் செக்கைக் கொடுத்தவுடன் அதே கவுண்டரில் உடனே பணத்தைப் பெறுகிறீர்கள். பாங்குத் தொழிலில் எங்கள் நீண்ட அனுபவமும் நிபுணத்துவமும், இம்முறையை மிகச் செம்மையாக்கும் ஆற்றலை எங்களுக்குத் தந்துள்ளன. டோக்கன் இல்லை,

நேரத்தைப் பாழாக்கும் பத்ததிகள் இல்லை, கவுண்டர்களைச் சுற்றி வரும் அலுப்பு இல்லை.

உடனடி பட்டுவாடாவிற்கு
டெல்லர் சிஸ்டம்

## பஞ்சாப் நேஷனல் பாங்க்

1895-ம் ஆண்டு முதல் நாட்டுப்பணியில்

Pratibha-PNB-707

# அவள் ஒரு 'அஸ்ஸெட்'

ஷ்ரோணா

அவள் ஓர் அதிசயமான பறவை! எந்தக் குழுவிலும் சேராத — எவருடனும் ஒட்டாத ஓர் இனம் சேராப் பறவை! சந்தர்ப்பங்கள் விலகி விலகிப் போய் ஒதுங்கிக் கொள்ளுவதே அவளுடைய இயற்கை. அதற்காக அவளைப் பைத்தியமாகவோ, பித்தாகவோ முடிவு கட்டி விட முடியவில்லையே!

மார்புடன் அணைத்துப் பிணைத்த புத்தகச் சுமையும், மறு கையில் ஏந்திய டிபன் பேழையும், மலர்க் கத்தைகளைச் சுமந்த கொடிப் பின்னலும் வகை வகையான வண்ண உடைகளும் கொண்ட இளம் தளிர்க் கூட்டம் தனித் தனிக்குழுவாகத் தெருவை அடைத்துச் செல்லும் காட்சியால் அந்த வட்டாரத்துக்கே பெருமை வந்து விட்டது. ஒவ்வொரு தனிக்குழுவிலும் ஐந்தாறு பேர்களுக்குக் குறைவில்லை. சிரிப்பும், சிலேடைப் பேச்சுக்களுமாக அதில் வெளிப்படாத குரல் இல்லை. இவற்றை ரசிக்காத கண், காதுகளுமில்லை. ஆனால், அவள்—?

அதிக ஜனப் புழக்கங்களைக் கண்டிராத அந்த ஆற்றங்கரைச் சாலைக் கோடியில், கல்லூரி ஒன்று ஏற்பட்ட இந்த நான்கு வருஷங்களுக்குள்ளாகச் சின்னச் சின்னப் பெட்டிக் கடைகளும் நவீன ஷாப்புகளும் குடிசைகளுமாக இரு மருங்கிலும் முளைத்து விட்டன. விறுவிறுப்புகள் நிறைந்த காலை, மாலை வேளைகளில் நெருக்கடித்துக் கொத்திட்டுச் செல்லும் கிளிக் கூட்டம் போன்று — பல நிற பேதங்களுள்ளதானாலும், ஒருமைப்பட்டுச் செல்லும் புறு வரிசை போன்ற மடந்தையர் குழுக்களைக் கண்டிருந்த கண்கள் அனைத்தும், அவளை மட்டிலும் ஏகாந்தப் பறவையாகத்தான் கண்டிருந்தன. அவளொரு தனிதான்.

வீட்டை விட்டுக் கிளம்பி விட்டால் வழிநெடுக நின்று பார்க்கத் தக்க கடைத்தெரு அலங்காரங்களும், இருப்பங்களும், அதிசயங்களும் எவ்வளவோ உண்டு. பேசக் கூடியவர்களாக எதிர்ப்படுபவர்களுண்டு. அவளுக்கு மட்டிலும் எதிலும் கவனம் கிடையாது. ஏறத்தாழ இரண்டு மைல் தூரத்துக்கும் நடந்து கல்லூரிப் பூங்காவை மிதிக்கும்வரையில் அவளுடைய கழுத்து அங்கே இங்கே என்று திரும்பிப் பாராது. . யார் எதைப் பேசினாலும் செவிகளுக்கும் ஏறாது. தப்பித் தவறி யாராவது பேரைச் சொல்லிக் கூப்பிட்டாலும் ஓர் அமைதியான புன்னகை— அவசரத்தைத் தெரிவிக்கும் விறுவிறுப்பான பார்வை — இவ்வளவே தான் அவளுடைய பதில்.

மாணவத் தோழிகளின் நேரடியான வர்ணனைகளுக்கு வாய்ப்பு நேரக் கூடாது என்பதற்காகவே அவள் கல்லூரியின் தொடக்க மணியோசை சமயத்துக்கே வந்து சேருவதும், கல்லூரி முடிந்து அரவமெல்லாம் அடங்கின பின்பே வெளியேறுவதுமான பழக்கத்தைக் கொண்டிருக்கிறாளே, அது ஒன்றே போதும் அவளொரு தனிப் பறவை என்பதற்கு அத்தாட்சி!

அவளும் ஒரு மாணவியாக இந்தக் கல்லூரியில் பதிவாகி, இரண்டு வருஷங்களாகி விட்டன. இதற்கு முன்பு அவள் எந்த ஊரில் எங்கே படித்திருந்தாள், இங்கே ஏன் வந்து சேர்ந்தாள் என்பனவெல்லாம் அவளுக்கும், அவளுக்குரிய சான்றுத் தாள்களுக்கும் தான் தெரியும். அவளுடன் அன்றாடம் அன்பு தோயப் பழகிடும் ஆசிரியக் குழாத்துக்கே தெரியாது என்கையில், சக மாணவிகளுக்கும் அவளது விவரங்கள் ஓர் இருட்

டடிப்புத்தானே? இதனை விசாரித்துத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு அவள் யாரையும் அண்ட விட்டதில்லை; பழகவுமில்லை. இந்த வருஷம் — இன்னும் கொஞ்ச நாட்களேதான் பாக்கி — இறுதியான கலைப் பட்டத்தைப் பெற்று வெளியேறப் போகிற நாளும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டாம் ஆண்டு முடிவிலும் கூட அவளைப் பற்றி — அவளது பெயர் — ஞானம் என்கின்ற ஒன்றைத் தவிர வேறு அறிந்தவர்களில்லை.

காலை வகுப்பு முடிந்து மதிய உணவுக்கான இடைவேளை ஒரு மணி நேரம். அந்த வேளையிலும் கூட அவள் எங்கும் போவதில்லை. எவருடனும் பேசுவதுமில்லை. துடுக்குக்கார சகாக்களில் பாதிப்பேர் 'மாமி காண்டீனு'க்குப் படையெடுத்துப் போய்விட்டபோதிலும் எஞ்சியிருப்பவர்களாவது அவளை அமைதியில் விட்டால்தானே? அவளை ஏதாவதொரு வகையில் வம்புக்கு இழுக்கா விட்டால் அன்றைய நாள் — பாழ்தான் மற்றவர்களுக்கு!

கல்லூரிக் காம்பவுண்டுக்குள், லைப்ரரியும், லெபரேட்டரியும் சேர்ந்த ஒரு தனிக் கட்டிடம் எதிர்ப்புறத்தில் இருந்தது. அதன் தாழ்வாரத்து மாடிப் படிகளின் வளைவில் அன்றாடமும் நடைபெற்று வரும் 'மாமி காண்டீன்' மிகப் பிரசித்தம். காலை பதினொரு மணி முதல் மாலை ஐந்து மணியளவுக்கே ஆயுளைக் கொண்டிருந்த அந்த 'பேபி ரெஸ்டாரெண்ட்'டுக்கு இருந்த பெருமை, நகரத்திலுள்ள எந்தப் பெரிய ஹோட்டலுக்கும் கிடையாது. தேன்குழல், லட்டு, பூரி, சேமியாப் பாயசம் — இந்த நான்கே வகைகள் அன்றாடமும் வண்டியில் வந்து இறக்குமதியாவதும், அவையனைத்தும் நாலரை மணிக்குள்ளாகப் பட்டுவாடா ஆவதும் வெளியார் யாருக்கும் அதிகம் தெரியாது. அந்தப் பண்டங்களின் சுவைக்கே ஒரு தனிப் புகழாரமும் அதை நடத்தி வரும் மாமியின் முகதோஷம்—குணதோஷங்களுக்குமான தனிப்பட்ட சிறப்புக்களும் உண்டு.

ஒரு நாள் இடைவேளை—

ஞானம் வழக்கம்போல் வகுப்பறையிலேயே அமர்ந்திருந்து, மனப்பாடப் பகுதியொன்றில் ஆழ்ந்திருந்தாள். ஞானம் 'மாமி காண்டீ'னுக்கு வராததைப் பற்றி அவள் சக மாணவிகளின் விமரிசனம் ஆரம்பமாயிற்று. அவளைக் கருமி என்றனர் பலர். அகம்பாவக்காரி என்றனர் சிலர். செட்டுக்காரி என்றனர் வேறு சிலர்.

தலை கவிழ்ந்திருந்த ஞானத்திடமிருந்து ஒரு பதிலுமில்லை! உதட்டின் விளிம்பில் இழையோட விட்ட மெல்லிய விரக்திப் புன்னகையுடன் பெருமூச்சை விடுத்தாள். அவ்வளவுதான்.

ஞானத்தின் தோற்றத்திலிருந்த அடக்கம், அவளது அறிவுத் திறம், அவள் பதிலளிக்கும் முறை — இவையெல்லாம் பிரின்ஸிபால்

# விசேஷ அளிப்பு!

## ஸ்டாக் உள்ளவரை

ஒவ்வொரு டின்னிலும் உள்ள போர்ன்விடாவின் அளவு
எப்போதும் போல் தான் (450 கிராம் நெட்)

**சக்திக்கும் வலிமைக்கும்–மற்றும் தீஞ்சுவைக்கும்**
**காட்பரிஸ் போர்ன்விடா!**

Bensons/5332-TAM

மேடத்தைச் சிறிது கவர்ந்ததில் வியப்பில்லை. ஒரு நாள் வகுப்பில் பிரின்ஸிபால் அவளைப் பற்றிச் சிறிது அக்கறையாக விசாரித்ததே ஓர் அதிசயம்தான்:

ஞானத்தின் தகப்பனார் ரயில்வே கார்டாக இருந்து, விபத்தினால் கால் முடமாகி வீட்டில் இருப்பவர். தம்பிகளில் ஒருவன் பிறவிக் குருடு; மற்றொருவன் ஊமை. ஞானத்தின் கல்லூரிச் சாதனைகள் முடிந்து, உத்தியோகமும் ஏற்று அவளுடைய ஊதியத்தில் தான் குடும்பம் தலை நிமிர வேண்டும்.

இந்தச் செய்திகளால் மாணவ சகாக்களுக்கு அவளிடம் அநுதாப மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டியதே நியாயம். ஆனால் நிலைமை நேர்மாறாகி விட்டது.

ஒரு வழியாகக் கல்வி ஆண்டு முடிவுற்றது. கோடை விடுமுறைக்குப் பின் கல்லூரிக் கதவுகள் திறக்கப்பட்டும் விட்டன. மாணவிகளின் வாழ்வுக் கதவுகளைத் திறக்கத் தக்க சாதனைச் சான்றுகளை அன்று வழங்கப் போகிறார்கள். செய்தித் தாள்கள் மூலம் தங்களது தேர்ச்சியின் வெற்றியை அறிந்துகொண்டிருந்த மாணவ சமூகம் முழுமைக்கும் அன்று குதூகலமான நாள். முதல் வகுப்பான தேர்ச்சியை அடைந்துவிட்ட பத்தே பேர்களில் ஞானமும் ஒருத்தி என்றபடியால், அவளது வெற்றிக்குத் தனிப்பட்ட சிறப்பா ஏற்பட்டுவிட முடியும்?

கல்லூரியின் எல்லைக்குள் கோலாகலமான பேச்சுக்களும், விசாரிப்புக்களும் நிறைந்திருந்தன. ஒருவருக்கொருவர் இனிப்புகள் வழங்கிக் கொள்ளும் மும்முரத்தில் அத்தனை கூட்டமும் மாமி கான்டீனை முற்றுகையிட்டிருந்தன. இக் கூட்டத்தில் காணப்படாமல் ஒரு மூலையில் அரச மரத்தடியிலிருந்த கல் பெஞ்சியில் அமர்ந்திருந்தாள் ஞானம். அவளொரு தனிப் பிரகிருதியாயிற்றே!

''அட, ஞானம்! நீ இங்கேயா இருக்கே? உன்னைப் பார்க்கணும்னு எவ்வளவு பேர் துடிச்சுக்கிட்டு இருக்கோம், தெரியுமா? கங்கிராஜுலேஷன்ஸ்! கையைக் கொடு, இப்படி!''—

சுமார் ஏழெட்டுக் குரல்கள் ஒருமித்து முழங்கியபடி நெருங்கவும், ஞானம் திடுக்குற்றவளாய்த் திரும்பினாள். எதிர்ப்பட்டிருப்பவர்கள் அனைவரும் இரண்டாம் வகுப்புத் தேர்ச்சியைப் பெற்றிருந்த சகாக்கள். ஞானமும் அவர்களை மலர்ந்த முகமாக வரவேற்று, பதிலுக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

''வா! இன்னிக்கு ஒரு நாளைக்குத்தானே; நாளை முதல் நாமெல்லாம் எங்கேயோ இருப்போம். கான்டீனுக்குப் போவோம்—'' இவ்வாறு கூறிக்கொண்டே இருவர் அவளது கையைப் பிடித்து இழுத்தனர்.

ஞானம் பிணங்கினாள்.

''ஐயையே! பைத்தியமே! இன்னிக்குமா உனக்கு வயிற்றுவலி! எங்களுக்கு இருக்கிற குஷிகூட முதல் வகுப்பிலே பாஸ் பண்ணியிருக்கிற உனக்கு இல்லியே? பரவாயில்லை, வா! நாளைக்கெல்லாம் உன்னைக் கூப்பிடவா போகிறோம்?'' இவ்வாறு கூறிக்கொண்டே மூவர் அவளை வலிய அழைத்தனர்; மற்றுமொருத்தி, ''பயப்படாதே! உனக்குச் செலவு வைக்கல்லே!'' என்றாள் கண்களைச் சிமிட்டிக் கொண்டே.

ஞானம் பதிலே அளிக்கவில்லை.

அதே சமயம் கல்லூரி டபேதார் கணபதி விரைவாக வந்தான். உரத்த குரலில், ''ஞானம்மா, உங்களை எங்கெல்லாம் தேடறது? பிரின்ஸிபால் அம்மா உங்களை ஆபீஸ் அறைக்குக் கையோடு அழைச்சுக்கிட்டு வரச் சொன்னாங்க'' என்று அழைத்தான். ஞானம் தோழிகளுக்கு நன்றி கூறிவிட்டு அவனைத் தொடர்ந்து சென்றாள்.

பட்டமளிப்பு விழாவின் ஹாலில் மகிழ்ச்சி ததும்பின முகங்கள் நிறைந்திருந்தன. பல இலாகாக்களைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகள் எல்லாம் கலந்து கொண்டிருந்தார்கள். பிரின்ஸ்பால் உற்சாகமாகப் பேசினாள்.

''இந்தக் கல்லூரியில் இவ்வாண்டில் முதல் வகுப்பில் தேர்ச்சி படைத்துள்ள மாணவிகள் பத்தே பேர்கள்தான் என்பதை அறிந்ததும், மனம் மிக மிக நொந்திருந்தேன். ஆனால் இன்று காலையில் கிடைத்துள்ள தந்திச் செய்தியின் மூலம், இவ்வாண்டு மாகாணத்துக்கே தலையாய வெற்றி மாணவியைப் படைத்துள்ளது நமது கல்லூரியே என்பதை அறிந்ததும், எனது உள்ளத்தின் மகிழ்ச்சியை என்னால் விவரிக்க இயலவில்லை. அத்தகைய மகத்தான புகழைத் தேடித் தந்துள்ள மாணவி — ஞானம் என்பதை அறிந்ததுமோ, என் ஆயுட் காலத்திலேயே உணர்ந்து களித்திராத மகிழ்ச்சிதனைக் கொண்டு விட்டேன்.''

பிரின்ஸிபாலின் தொடக்க உரை முடிவடையும் முன்பே அந்த ஹாலில் கரகோஷங்களும், ஆரவாரங்களும் அதிர்ந்தெழுந்தன. ஆனால் இறுதி வகுப்பில் படித்திருந்த மாணவிகள் அத்தனை பேர்களின் விழிகளும் வாய்களும் உயிர்ப்பற்ற நிலையிலே காட்சி கொண்டதைக் காணக் கட்டணமில்லாத குறை! பிரின்ஸிபால் அம்மையார் வரவேற்புரையை முடித்துவிட்டுச் சான்றிதழ்களை வழங்க முற்பட்டார்.

பலரின் முன்னாக, பலருக்கும் முன்பாகக் கலைப் பட்டத்தை முதலில் பெற்ற அவ்வுருவத்தை வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஐந்நூறு ஜோடி விழிகளும் ஓர் அதிசயத்தை அன்றுதான் கண்டன.

கைகளில் ஏந்திய முதலாம் சான்றுத்தாள்களுடனே, பலரையும் தாண்டிக் கொண்டு சிட்டுக் குருவியாகப் பறந்தாள் ஞானம். அந்த ஹாலின் ஜன்னல் கதவோரத்திலே அடங்கி ஒடுங்கி நின்ற வண்ணம் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த உருவத்தை நெருங்கினாள். கையிலிருந்ததை அவ்வுருவத்திடம் கொடுத்துவிட்டுக் கீழே உடல் பணிந்து தண்டனிட்டாள். அந்தப் பெருமையைப் பெற்றுக் கொண்டிருந்த உருவம் ஞானத்தைப் பெண்ணாகப் பெற்றிருந்த தாயுருவம் என்பதைக் கண்டார்கள். அத்தாயுருவம் அனைவருக்கும் பழக்கப்பட்டிருந்த 'கான்டீன் மாமி'!

கல்லூரிக்கு ஒப்பற்ற புகழைத் தேடித் தந்த ஞானத்தைப் பலரும் சிறப்பிக்கத் தவறவில்லை. பிரின்ஸிபாலின் வருணனைப்படி 'அவளொரு அஸ்லெட்' என்பதை ஏற்காத உள்ளம் இல்லை!

# தேமதுரத் தமிழோசை

லண்டனில் எனக்கொரு பேனா நண்பர் இருக்கிறார். சமீபத்தில் அவருக்கு ஒரு திருக்குறள் புத்தகத்தை (ஆங்கில மொழி பெயர்ப்பு) அன்பளிப்பாக அனுப்பினேன். அதற்கு அவர் நன்றி கூறி எழுதிய கடிதம் இதோ :

''நீங்கள் அனுப்பிய திருக்குறள் புத்தகத்தைப் படிக்கும்போது எந்தப் புத்தகத்திலும் காண முடியாத உயர்ந்த அரிய கருத்துக்களைக் காண்கிறேன். இந்த மொழிபெயர்ப்பு நூலே இவ்வளவு அருமையாக இருக்கும்போது மூல நூல் எவ்வளவு அருமையாக இருக்கும் என்று எண்ணிப் பார்த்துப் பெரு வியப்பு அடைகின்றேன். கூடவே மூல நூலையே படிக்க விழைகின்றேன். ஆனால் எனக்கோ உங்கள் தமிழ் தெரியாது. என் குறையை நீங்கள்தான் போக்க வேண்டும். தமிழை ஆங்கிலத்தின் மூலமாகக் கற்க ஏதுவான புத்தகங்கள் இருந்தால் தயவுசெய்து அனுப்பி வைக்கவும். நன்றி.''

என் நண்பரின் வேண்டுகோளை உடனே நிறைவேற்ற விரும்பினேன். அதற்காகப் பல புத்தகக் கடைகளுக்குச் சென்று தமிழை ஆங்கிலத்தின் மூலம் கற்க ஏதுவான புத்தகம் இருக்கிறதா என்று தேடிப் பார்த்தேன். எங்குமே இல்லை. தபால் மூலமும் பல புத்தகக் கடைகளுக்கு எழுதிக் கேட்டுப் பார்த்தேன். எங்கும் 'இல்லை' என்ற பதிலே வந்து என்னை ஏமாற்றத்துக்குள்ளாக்கியது.

என் நண்பரைப் போன்று மேலும் எவ்வளவோ பேர் தமிழைக் கற்க ஆவல் உள்ளவர்களாயிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் ஆவலைப் பூர்த்தி செய்ய ஒரு வழியும் இன்னும் செய்யப்படவில்லை.

நாம் 'தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!' என்று சத்தமிட்டுக் கூவினால் மட்டும் தமிழ் வளர்ந்து விடாது. தமிழை வளர்க்க ஆக்கபூர்வமான செயல்களைச் செய்யவேண்டும். 'தமிழ் தமிழ்' என்று எல்லாவற்றையும் தமிழ் மயமாக்கிக் கொண்டிருக்கும் தமிழக அரசு தமிழைப் பரப்ப ஏதாவது முயற்சி எடுத்துள்ளதா ? தமிழக அரசு தன் குறுகிய போதனாமொழிக் கொள்கையால் தமிழ் பரவுவதைத் தடை செய்து வருகிறது. தமிழ் மூலம் பாடம் கற்கும் இன்றையக் கல்லூரி மாணவர்கள் தமிழ் நாடு என்னும் குண்டுசட்டியிலேயே குதிரையை ஓட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் படித்திருந்தால் இந்தியாவெங்கிலும் — ஏன் உலகெங்கிலுமே பரவி நமது தமிழ் மொழியையும் தமிழர் பண்பாட்டையும் ஓரளவுக்கேனும் பரப்புவார்கள்.

நாம் இதுவரை தமிழைப் பரப்ப யாதொரு முயற்சியும் மேற்கொள்ளாமல் காலத்தைக் கழித்திருக்கிறோம். இதே சமயத்தில் ஹிந்தி மொழி வெகு வேகமாகப் பரவி வருவதைக் கவனிக்க வேண்டும்.

தமிழை எப்படிப் பரப்பலாம்? ஆங்கிலம் உலகமொழி. அம்மொழியின் மூலம் தமிழைக் கற்பதற்கான சிறந்த புத்தகம் ஒன்றை உருவாக்குவதுதான் முதல் பணியாக இருக்க வேண்டும்.

பின்னர் ஹிந்தியின் மூலமாகத் தமிழைக் கற்பதற்கான சிறந்த புத்தகங்களைத் தயாரிக்க வேண்டும். இவ்வண்ணமே மற்ற எல்லா மாநில மொழிகளின் மூலமாகவும் தமிழைக் கற்க ஏதுவான புத்தகங்களை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு புத்தகங்களை உருவாக்கிவிட்டால் மட்டும் போதாது. அவற்றுக்குப் பத்திரிகைகளில் சிறந்த விளம்பரங்கள் கொடுக்கப்பட வேண்டும். புத்தகங்களின் விலையும் அதிகமாயிருத்தல் கூடாது.

மேலும் தபால் மூலமாக, எல்லா மாநில மொழிகளின் மூலமாகவும் தமிழைக் கற்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். இவ்வாறு தமிழ் கற்போருக்கு அவ்வப்போது தேர்வுகள் நடத்தித் தேர்ச்சி பெற்றோர்க்கு நற்சான்றிதழ் வழங்கித் தமிழ்க் கல்வியை ஊக்குவிக்கலாம்.

மேலும் இந்தியாவின் எல்லா முக்கிய நகரங்களிலும் கலாசார நிலையங்களைத் தமிழ் நாடு அரசு ஏற்படுத்தி அவற்றின் மூலம் தமிழைப் பரப்ப வேண்டும். பின்னர் உலகெங்கிலும் கலாசார நிலையங்களை ஏற்படுத்தி இதே தமிழ் பரப்பும் தொண்டு செய்ய வேண்டும். இதற்கெல்லாம் ஏகப்பட்ட செலவு ஆகுமே என்று யோசிக்கலாகாது. குறைந்த செலவில் அதிக பட்சப் பயனைத் தமிழ் அடையும் விதமாகத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

கடைசியாக ஒன்று: எல்லாம் அரசாங்கம் தான் செய்ய வேண்டும் என்று நாம் வாளாவிருக்கக் கூடாது. நாமும் தமிழுக்குத் தொண்டு செய்தோம் என்ற பெருமை பெற வேண்டும் அல்லவா ? நம்மில் ஒவ்வொருவரும், தமிழ் தெரியாத யாரேனும் ஒருவருக்காவது தமிழைக் கற்பிப்பதாக லட்சியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்று அன்று பாடிவிட்டுச் சென்ற பாரதியாரின் கனவை நனவாக்க முயற்சி செய்வோமாக.

பெங்களூர் — 7

எஸ். மணிவண்ணன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput Madras-31
Managing Editor: T Sadasivam



# அருமையான தயிர் தயாரிக்க உகந்த பால்.

**கெட்டியான ஆடைத் தயிர். உங்கள் உணவுக்கு முத்தாய்ப்பு வைக்க. மோர் தயாரிக்க. மோர்க்குழம்பு, பச்சடி தயாரிக்க. தயிர் வடை. ஸ்ரீகண்ட். புட்டிங்குகள். புத்துணர்வூட்டும் லஸ்ஸி**

# அமுல் மில்க் பவுடர் கொண்டு அருமையான தயிர் தோயுங்கள்

நீங்கள் வசிக்குமிடத்தில் பாலுக்குப் பஞ்சமா? ஆனாலும் அமுல் மில்க் பவு-டர் கொண்டு, ஆடைத் தயிர், சுவை மிக்க லஸ்ஸி, மோர் மற்றும் பால் பானங்கள் எதையும் தயாரித்துப்பருகி மகிழலாம். எந்நேரத்திலும், எங்கிருந்தாலும்.

**கலக்க எளிதான அமுல் மில்க்:** 10 டேபிள் ஸ்பூன் அமுல் மில்க் பவுடரை இளம் வெந்நீரில் விழுதாக்கிக் கொள்ளுங்கள். ஒரு லிட்டர் பாலாகும் வரை வெந்நீரைச் சேருங்கள். ஒரு கோப்பை பாலுக்கு 2½ டேபிள் ஸ்பூன் அமுல் மில்க் பவுடர் உபயோகியுங்கள்

**கெட்டியான ஆடைத் தயிர்:** அமுல் மில்க் பவுடரிலிருந்து தயாரித்த பாலைக் கொதிக்-கும் வரை சூடாக்குங்கள். வெதுவெதுப்பு நிலைக்குக் குளிர விடுங்கள். ½ அல்லது 1 டேபிள் ஸ்பூன் நல்ல தயிரை சேர்த்துக் கிளறுங்-கள். அப்படியே தோய விடுங்கள்

## அமுல் மில்க் பவுடர்

**வீட்டிலே பால் பண்ணை இருப்பதற்கு ஈடு**

ASP/AMP-8

REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Ceylon